




# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com








CHENNAI | Volume- 3 | Issue:180 | 14-01-2026 | புதன்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி


## இன்றைய பஞ்சாங்கம்

14.01.2026 மார்கழி 30
புதன் கிழமை

சூரிய உதயம் 6.34

திதி:
இன்று இரவு 7.43 வரை
ஏகாதசி பின்பு துவாதசி.

நட்சத்திரம்:
இன்று அதிகாலை 2.20 வரை
விசாகம் பின்பு அனுஷம்

யோகம் :
இன்று இரவு 9.59 வரை
கண்டம் பின்பு விருத்தி.

கரணம் :
இன்று காலை 6.39 வரை
பவம் பின்பு இரவு 7.43 வரை
பாலவம் பின்பு கௌலவம்.

அமிர்தாதி யோகம் :
இன்று அதிகாலை 2.20 வரை
யோகம் சரியில்லை
பின்பு சித்த யோகம்.

சந்திராஷ்டமம்
இன்று அதிகாலை 2.20 வரை
ரேவதி பின்பு அசுவினி

நல்ல நேரம்
காலை 9.30 – 10.30.
மாலை 4.30 – 5.30.
இராகு காலம்
பிற்பகல் 12.00.
எமகண்டம்
காலை 7.30 – 9.00.

குளிகை
காலை 10.30 – 12.00.

இன்று போகிப் பண்டிகை
ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# தீவிரவாதத்துக்கு எதிராக உலக நாடுகள் இணைய வேண்டும்

## ஜெர்மனி, இந்திய பிரதமர்கள் கூட்டாக வலியுறுத்தல்

**அகமதாபாத், ஜன.14:**
தீவிரவாதத்தை எதிர்த்துப் போரிட உலக நாடுகள் இணைய வேண்டும் என ஜெர்மனி பிரதமர் மெர்ஸூம், பிரதமர் மோடியும் கூட்டாக வலியுறுத்தி உள்ளனர்.

பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பை ஏற்று ஜெர்மனி பிரதமர் பிரட்ரிக் மெர்ஸ் 2 நாள் பயணமாக நேற்று இந்தியா வந்தார். அகமதாபாத் விமான நிலையம் வந்த அவருக்கு அரசு உயர் அதிகாரிகள் வரவேற்பு அளித்தனர். பிரதமரான பிறகு அவர் ஆசியாவுக்கு பயணம் செய்திருப்பது இதுதான் முதல்முறை.

கடந்த 10 மற்றும் 11 தேதிகளில் குஜராத்தில் உள்ள சோமநாதர் கோயிலின் பெருவிழாவில் பிரதமர் மோடி பங்கேற்றார். இந்நிலையில், அகமதாபாத்தில் தேசத் தந்தை மகாத்மா காந்தியால் நிறுவப்பட்ட சபர்மதி ஆசிரமத்துக்கு நேற்று காலையில் பிரதமர் மோடி சென்றார். சிறிது நேரத்தில் அங்கு வந்த ஜெர்மனி பிரதமர் மெர்ஸை வரவேற்றார். பின்னர் இருவரும் அங்குள்ள மகாத்மா காந்தி சிலைக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

இதையடுத்து, ஆசிரமத்தில் உள்ள 'சர்க்கா' எனப்படும் நூற்பு சக்கரத்தைப் பயன்படுத்தி கதர் நூல் எவ்வாறு நெய்யப்படுகிறது என்பதை மெர்ஸ் பார்வையிட்டார்.

ஆசிரமத்தில் உள்ள பார்வையாளர்கள் புத்தகத்தில் மெர்ஸ் எழுதிய குறிப்பில் "சுதந்திரத்தின் மீதான நம்பிக்கை மற்றும்




ஒவ்வொரு தனிமனிதனின் கண்ணியம் குறித்த மகாத்மா காந்தியின் அசைக்க முடியாத நம்பிக்கை இன்றும் நமக்கு ஊக்கமளிக்கிறது. காந்தியின் போதனைகள் முன் எப்போதையும் விட இன்று உலகுக்கு அதிகம் தேவைப்படும் நிலையில், இந்த மரபு இந்தியர்களையும் ஜெர்மானியர்களையும் நண்பர்களாக ஒன்றிணைக்கிறது" என குறிப்பிட்டுள்ளார்.

பட்டம் விடும் திருவிழா: பின்னர் இரு தலைவர்களும் சபர்மதி நதிக்கரைக்குச் சென்றனர். அங்கு பிரதமர் மோடி சர்வதேசப் பட்டம் விடும் திருவிழா-2026-ஐ தொடங்கி வைத்தார். பின்னர் அதிபர் மெர்ஸுடன் இணைந்து பட்டம் பறக்கவிட்டு மகிழ்ந்தார். இந்த நிகழ்ச்சிகளுக்குப் பிறகு பிரதமர் நரேந்திர மோடியும், ஜெர்மன் பிரதமர் பிரட்ரிக் மெர்ஸூம் சந்தித்துப் பேசினர்.

அப்போது ரஷ்யா-உக்ரைன் மோதல், காசா நிலைமை மற்றும் பிற உலகளாவிய சவால்கள் குறித்து இரு தலைவர்களும் விரிவாக ஆலோசனை நடத்தினர்.

அனைத்துப் பிரச்சினைகளுக்கும் அமைதியான முறையில் தீர்வு காண்பதையே இந்தியா எப்போதும் ஆதரிக்கிறது என்று பிரதமர் மோடி உறுதிபடத் தெரிவித்தார்.

இந்த சந்திப்பின்போது, கல்வித்துறையில் இருதரப்பு உறவுகளை விரிவுபடுத்துவதற்கு ஒரு விரிவான திட்டத்தை வகுத்தனர். குறிப்பாக ஜெர்மன் பல்கலைக்கழகங்கள் இந்தியாவில் தங்களது வளாகங்களைத் திறக்க வேண்டும் என்று பிரதமர் மோடி அழைப்பு விடுத்தார்.

தீவிரவாதம் குறித்தும் இருவரும் ஆலோசித்தனர். அப்போது பஹல்காம் தீவிரவாத தாக்குதல், டெல்லி கார் குண்டு வெடிப்பு ஆகியவற்றுக்கு கண்டனம் தெரிவித்தனர். மேலும் தீவிரவாதம் ஒட்டுமொத்த மனிதகுலத்துக்கும் ஒரு கடுமையான அச்சுறுத்தல் என்பதில் தானும் மெர்ஸூம் உடன்படுவதாக மோடி கூறினார்.

இந்தியாவும் ஜெர்மனியும் தீவிரவாதத்துக்கு எதிராக ஒற்றுமையாக நிற்கும் என்றும் உலக நாடுகளும் தீவிரவாதத்தை எதிர்த்துப் போரிட ஒன்றிணைய வேண்டும் என்றும் அவர் கூறினார். இதையடுத்து, இரு தலைவர்களும் இந்தியா-ஜெர்மனி கார்ப்பரேட் நிறுவன தலைமைச் செயல் அதிகாரிகள் மன்ற கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

# எதிரிநாட்டு டேங்க்குகளை அழிக்கும் ஏவுகணை சோதனை வெற்றி



**புதுடெல்லி, ஜன.13:**
எதிரிநாட்டு டேங்க்குகளை அழிப்பதற்காக உருவாக்கப்பட்ட ஏவுகணையை ராணுவ ஆராய்ச்சி மேம்பாட்டு மையம் (டிஆர்டிஓ) நேற்று வெற்றிகரமாக சோதனை செய்தது.

எதிரிநாட்டு டேங்க்குகள் மற்றும் கவச வாகனங்களை தாக்கி அழிக்க இலகு ரக ஏவுகணை ஒன்றை டிஆர்டிஓ உருவாக்கியது. இதை தோளில் சுமந்து செல்லும் லாஞ்சர் மூலம் ஏவ முடியும். மூன்றாம் தலைமுறை ஏவுகணையான இதற்கு எம்பிஏடிஜிஎம் என பெயரிடப்பட்டுள்ளது. இதற்கு சுமந்து செல்லக்கூடிய டேங்க் எதிர்ப்பு ஏவுகணை என பொருள்.

இந்த ஏவுகணையை தோளில் சுமந்து செல்லும் லாஞ்சர் மூலம் ஏவும் போது, இது வானில் உயரமாக சென்று பின் செங்குத்தாக கீழ் இறங்கி நகர்ந்து செல்லும் இலக்கை தாக்கும். இந்த ஏவுகணையில் உள்ள அனைத்து அம்சங்களும் உள்நாட்டு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி டிஆர்டிஓ அமைப்பின் துணை நிறுவனங்கள் உருவாக்கின.

இந்த ஏவுகணை மகாராஷ்டிரா மாநிலத்தின் அகில்யா நகரில் உள்ள பாலைவன பரிசோதனை மையத்தில் நேற்று சோதித்து பார்க்கப்பட்டது. 14.5 கிலோ எடையுள்ள லாஞ்சரை ஒருவர் தோளில் சுமந்து சென்று, மற்றொருவரின் உதவியுடன் இலகுரக ஏவுகணையை ஏவினார்.

லாஞ்சரில் இருந்து சீறிப்பாய்ந்த ஏவுகணை வானில் உயரே சென்று பின் கீழ் இறங்கி இலக்கை துல்லியமாக தாக்கியது. இந்த சோதனையை டிஆர்டிஓ வெற்றிகரமாக முடித்தது.

# 83 மீனவர்கள், 252 படகுகளை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை தேவை: ஜெய்சங்கருக்கு ஸ்டாலின் கடிதம்

**சென்னை, ஜன.13:**
இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிப்பதற்கும், தமிழக மீனவர்கள் மீண்டும் கைது செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்தவும், உரிய தூதரக நடவடிக்கைகளைமேற்கொள்ள வலியுறுத்தி வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

10 மீனவர்கள் கைது: இலங்கைக்கு அருகே தென்கிழக்கு வங்கக்கடலில் ஏற்பட்டிருந்த ஆழ்ந்த காற்றழுத்து தாழ்வு மண்டலம் காரணமாக கடந்த ஒரு வாரமாக ராமேசுவரம் மீனவர்கள் கடலுக்குச் செல்வதற்கு அனுமதி சீட்டு ரத்து செய்யப்பட்டிருந்த நிலையில் கடலுக்குச் செல்லவில்லை.

நேற்று (திங்கட்கிழமை) காலையில் ராமேசுவரம் விசைப்படகு மீனவர்கள் 400-க்கும் மேற்பட்ட படகுகளில் அனுமதி டோக்கன் பெற்று 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்குச் சென்றனர். இதனிடையே, நெடுந்தீவு அருகே ராமேசுவரம் மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர்.

# சாதி பேதமற்ற சமத்துவப் பொங்கல்.. தமிழ்நாடெங்கும் பொங்கட்டும்



**சென்னை, ஜன.14:**
தமிழ்நாடு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:-

பொங்கல் திருநாள் என்பது தமிழர்கள் அனைவருக்குமான திருவிழா. அதில் சாதி பேதம் கிடையாது. மத வேறுபாடுகள் கிடையாது. ஏழை பணக்காரர் என்ற ஏற்றத்தாழ்வு கிடையாது. பெண் - ஆண் என்ற பாகுபாடு கிடையாது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனது மற்றொரு பதிவில் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியிருப்பதாவது:-

தமிழர்களின் கலைத்திறனைக் காட்டும் பாரம்பரியக் கலைகள் அரங்கேறும் சென்னை சங்கமம் நிகழ்வை உங்களில் ஒருவனான நான் ஜனவரி 14ம் தேதி அன்று தொடங்கி வைக்க இருக்கிறேன். நம் மண்ணின் மரபார்ந்த நாட்டுப்புறக் கலைவடிவங்களையும் கலைஞர்களையும் ஆதரித்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### எடப்பாடி பழனிசாமி

உலகெங்கும் வாழும் தமிழர்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடும் இனிய பொங்கல் திருநாளில், அன்பிற்கினிய தமிழக மக்கள் அனைவருக்கும் எனது இதயங்கனிந்த பொங்கல் திருநாள் நல்வாழ்த்துகளை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

# அமைச்சர் துரைமுருகனுக்கு அண்ணா விருது

**சென்னை, ஜன.14:**
தமிழ்நாடு அரசு சார்பில் வழங்கப்படும் 2026-ம் ஆண்டுக்கான திருவள்ளுவர் விருது மற்றும் 2025-ம் ஆண்டுக்கான தந்தை பெரியார் விருது, அண்ணல் அம்பேத்கர் விருது, பேரறிஞர் அண்ணா விருது, பெருந்தலைவர் காமராசர் விருது, மகாகவி பாரதியார் விருது, பாவேந்தர் பாரதிதாசன் விருது, தமிழ்த்தென்றல் திரு. வி.க. விருது, முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது, முத்தமிழறிஞர் கலைஞர் விருது ஆகிய விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

விவரம் பின்வருமாறு:-

* அமைச்சரும், அவை முன்னவருமான துரைமுருகனுக்கு 2025-ம்



ஆண்டுக்கான பேரறிஞர் அண்ணா விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

* 2026-ம் ஆண்டுக்கான திருவள்ளுவர் விருது முதுமுனைவர் மு.பெ. சத்தியவேல் முருகனாருக்கு வழங்கப்பட உள்ளது.

* 2025-ம் ஆண்டுக்கான தந்தை பெரியார் விருது வழக்கறிஞர் அ.அருள்மொழிக்கு வழங்கப்பட உள்ளது.

* 2025-ம் ஆண்டுக்கான அண்ணல் அம்பேத்கர் விருது சிந்தனை செல்வனுக்கு வழங்கப்படுகிறது.

* எழுத்தாளரும், முன்னாள் தலைமைச் செயலாளருமான வெ.இறையன்பு-க்கு திருவிக விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

* கவிஞர் யுகபாரதிக்கு தமிழ்நாடு அரசின் 2025-ம் ஆண்டுக்கான பாவேந்தர் பாரதிதாசன் விருது வழங்கப்பட உள்ளது.

* காமராஜர் விருது எஸ்.எம்.இதயத்துல்லாவுக்கு வழங்கப்படுகிறது.

* மகாகவி பாரதியார் விருது கவிஞர் நெல்லை ஜெயந்தாவுக்கு வழங்கப்படுகிறது.

# பொங்கல் பண்டிகை விடுமுறை: 4 லட்சத்திற்கும் மேற்பட்டோர் சிறப்பு பஸ்களில் சொந்த ஊருக்கு பயணம்

**புதுடெல்லி, ஜன.13:**
அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:-

போக்குவரத்துத் துறையின் சார்பில், 2026-ஆம் ஆண்டு பொங்கல் திருநாளை முன்னிட்டு, பொதுமக்களின் பயண வசதிக்காக சிறப்பு பஸ்கள் இயக்கப்பட்டு வருகின்றன.

இதன் விவரமாக, 12.01.2026 அன்று நள்ளிரவு 24.00 மணி நிலவரப்படி, வழக்கமாக இயக்கப்படும் 2,092 பஸ்கள் முழுமையாக இயக்கப்பட்டதுடன், கூடுதலாக 1,010 சிறப்பு பஸ்களும் இயக்கப்பட்டுள்ளன. ஆக மொத்தம் 3,102 பஸ்கள் இயக்கப்பட்டு, 1,30,284 பயணிகள் பயணம் மேற்கொண்டுள்ளனர்.

ஆக, 9.01.2026 முதல் 12.01.2026 அன்று நள்ளிரவு 24.00 மணி வரை, மொத்தம் 11,372 பஸ்கள் இயக்கப்பட்டு, 4,88,780 பயணிகள் பயணம் மேற்கொண்டுள்ளனர். அத்துடன், இதுவரை 2,56,977 பயணிகள் முன்பதிவு செய்து பயணம் மேற்கொண்டு வருகின்றனர்.

பொங்கல் திருநாள் பயண காலத்தில், பொதுமக்களின் தேவையை கருத்தில் கொண்டு, தேவைக்கேற்ப கூடுதல் பஸ்கள் தொடர்ந்து இயக்கப்படும். எனவே, கடைசி நேர கூட்ட நெரிசலை தவிர்க்கும் பொருட்டு, பொதுமக்கள் தங்களது பயணத்தை முன்கூட்டியே திட்டமிட்டு, முன்பதிவு செய்து பயணம் மேற்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஆம்னி பஸ்

பொங்கல் பண்டிகையொட்டி சென்னையில் இருந்து லட்சக்கணக்கான மக்கள் தங்கள் சொந்த ஊருக்கு புறப்பட்டு வருகின்றனர். சொந்த வாகனங்கள், ரெயில்கள், அரசு பஸ்கள், தனியார் பஸ்கள் என பல்வேறு வாகனங்களில் மக்கள் சொந்த ஊருக்கு புறப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில், பொங்கல் பண்டிகையையொட்டி சென்னையில் இருந்து ஆம்னி பஸ்களில் இதுவரை 2 லட்சத்து 72 ஆயிரத்து 800 பயணிகள் சொந்த ஊருக்கு புறப்பட்டு சென்றுள்ளனர்.

சென்னையில் இருந்து கடந்த 9ம் தேதி முதல் இன்று மாலை 5 மணிவரை 2 லட்சத்து 72 ஆயிரத்து 800 பயணிகள் சொந்த ஊருக்கு பயணம் மேற்கொண்டுள்ளனர்.







## திருக்குறள் குறள்-500

காலாழ் களரின் நரியடுங் கண்ணஞ்சா வேலாள்
முகத்த களிறு



வேல் ஏந்திய வீரரைக்
கோர்த்தெடுத்த கொம்பு
உடைய யானையையும்,
கால் ஆழும் சேற்று
நிலத்தில் அகப்பட்ட போது
நரிகள் கொன்றுவிடும்.

## சிந்திக்க ஒரு நொடி



ஆழமான அன்பை விட
சரியான புரிதல் தான்...
எல்லா
உறவுகளையும்
நட்புகளையும்
நம்முடன் நீண்ட
காலம் வாழ வைக்கும்

**உஷா முத்துராமன்**

## தேமுதிக அலுவலகத்தில் அன்னதானம்



சென்னை தேமுதிக அலுவலகத்தில் பொங்கல் திருநாளை முன்னிட்டு சிறப்பு பூஜை நடத்தி கட்சியின் பொதுச் செயலாளர் பிரேமலதா அன்னதானம் வழங்கினார்.

## மூத்த குடிமக்களுக்கு அமைச்சர் பொங்கல் வாழ்த்து



ஆலந்தூர் தொகுதி பரணிபுத்தூர் ஊராட்சியில் மூத்த குடிமக்களை அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேரில் சந்தித்து பொங்கல் வாழ்த்துக்களை தெரிவித்தார்.

## திராவிட சமத்துவ பொங்கல்



பெரம்பூர் எம்.கே.பி நகரில் 'திராவிட சமத்துவ பொங்கல்' விழாவில் ஆர்.டி.சேகர் எம்எல்ஏ பங்கேற்று மகளிருக்கான மாபெரும் கோலப் போட்டியை பார்வையிட்டு பரிசு வழங்கினார்.

## மாணவர்களுக்கு மடிக்கணினி



அம்பத்தூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் மாணவர்களுக்கு மடிக்கணினிகளை ஜோசப் சாமுவேல் எம்எல்ஏ வழங்கினார்.

## மாணவர்களுக்கான கபடி போட்டி



ஈரோடு அரசினர் தொழிற்பயிற்சி நிலைய மாணவர்களுக்கான கபடி போட்டியை அமைச்சர் முத்துசாமி துவக்கி வைத்தார்.

# கிருஷ்ணகிரி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களுடன் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் கழக நிர்வாகிகள் சந்திப்பு



**கிருஷ்ணகிரி, ஜன.14:**
தமிழ்நாடு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் கழக கிருஷ்ணகிரி மாவட்ட அமைப்பின் சார்பில் மரியாதைக்குரிய முதன்மைக் கல்வி அலுவலர் திரு. இரா. மதன்குமார் அவர்களை நேரில் சந்தித்து கோரிக்கை மனு அளிக்கப்பட்டது.

அம்மனுவில், தலைமையாசிரியர்களின் ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு, பொது வருங்கால வைப்பு நிதி போன்ற பணப்பலன்கள் சார்ந்து விண்ணப்பிக்கும் போது உரிய காலத்தில் ஆணைகள் வழங்கிட வேண்டும்.

செய்முறைத் தேர்வுக்கான பணி ஒதுக்கீடுகளை சரியாக செய்திட வேண்டும்; தேர்வு தொடங்குவதற்கு இரண்டு நாட்கள் முன்பாக ஆயத்தக் கூட்டம் நடத்தி ஆணைகள் வழங்கிட வேண்டும்.

மார்ச் பொதுத் தேர்வு தேர்வு பணி ஒதுக்கீடு வெளிப்படையாக குலுக்கல் முறையில் ஒதுக்கிட வேண்டும்; சிலருக்கு மிக அருகிலும் சிலருக்கு வெகு தொலைவிலும் பணி ஒதுக்கீடு செய்வது தவிர்க்க வேண்டும்.

பொதுத்தேர்வுக்கு அமைச்சு, அடிப்படை பணியாளர்களை முன்கூட்டியே நியமித்து, தேர்வு மையத்தில் ஆயத்தக் கூட்டம் நடக்கும் அன்றே அவர்களும் கலந்து கொள்ளும் வகையில் ஆணைகள் பிறப்பிக்க வேண்டும்.

ஆகிய கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டிருந்தன. கோரிக்கைகளை கவனத்துடன் பரிசளித்த முதன்மைக் கல்வி அலுவலர் அவர்கள், அவற்றின் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்தார்.

இந்த சந்திப்பின் போது மாநில சட்டச் செயலாளர் திரு. இரா. சீனிவாசன்,(இராயக்கோட்டை ஆண்கள்) மாநில மகளிரணி துணைச் செயலாளர் திருமதி. ப. ஆனந்திமாலா (மத்தூர் மகளிர்), மாவட்டத் தலைவர் திரு. சி. அலெக்சாண்டர் (தொகரப்பள்ளி ஆண்கள்), மாவட்டச் செயலாளர் திரு. சூ. இரமேஷ்குமார் (ஒரப்பம்), மாவட்டப் பொருளாளர் திரு. இர. வேந்தன் (காவேரிப்பட்டினம் ஆண்கள்), மாவட்ட மகளிரணிச் செயலாளர் திருமதி. அ.மேரி ஷெரின் (ஆலப்பட்டி), மாவட்டத் தலைமையிடச் செயலாளர் திரு. கி. இரமேஷ் (கிருஷ்ணகிரி ஆண்கள்), மாவட்ட இணைச் செயலாளர் திரு.ப. கோபி (குருபரப்பள்ளி), மாநில பொதுக்குழு உறுப்பினர்கள் திரு. மா. அன்பழகன் (ஐகுந்தம்), மற்றும் திரு ரா.காமராஜ் (சென்னசந்திரம்), கிருஷ்ணகிரி கல்வி மாவட்ட பொறுப்பாளர் திரு. பெ.சத்தியமூர்த்தி (பெருகோபனப்பள்ளி) ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மயிலாடுதுறை உதய் பவுண்டேஷன் சார்பில் சமத்துவ பொங்கல் விழா



**மயிலாடுதுறை ,ஜன, 14:**
மயிலாடுதுறை உதய் பவுண்டேஷன் சார்பில் மயிலாடுதுறை மத்திய ஒன்றியம் நீடூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் சமத்துவ பொங்கல் விழா நடைபெற்றது. விழாவிற்கு நீடூர் மதரஸா பொது செயலாளர் எஸ்கொயர் எஸ்.ஏ.முகமதுஇக்பால் தலைமை தாங்கினார்.

செயற்குழு உறுப்பினர் எம்ஏபி.நவாஸ், ஊராட்சி மன்ற துணை தலைவர் நூருதீன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்வில் மயிலாடுதுறை உதய் பவுண்டேஷன் நிறுவனர் வழக்கறிஞர் டாக்டர் இராம. சேயோன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு மாணவ,மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

விழாவில் மயிலாடுதுறை மத்திய ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் நூருதீன்,கழக நிர்வாகிகள் நூருல்அமீன், அய்யப்பன், மலர்ன்னன் மற்றும் பள்ளி தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள், பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

விழாவிற்கான ஏற்பாடுகளை நீடூர் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் அருள்ராஜ் செய்திருந்தார்.

## பள்ளி பொன்விழாவில் ராகுல்காந்தி பொங்கல் வைத்தார்



கூடலூர் பள்ளி பொன் விழாவுக்கு வந்த ராகுல்காந்தி, அங்கு பெண்கள் பொங்கல் வைத்தபோது, அவரும் பங்கேற்றார்.

## மாணவர்களுடன் அவர் உரையாடிய ராகுல்



நீலகிரி மாவட்டம் கூடலூர் புனித தாமஸ் உயர் நிலைப்பள்ளி பொன்விழாவில் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் கலந்து கொண்டார். கொட்டும் மழையில் மாணவர்களுடன் அவர் உரையாடினார்.

## பொங்கல் நலத்திட்ட உதவி



சென்னை சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி தொகுதி நைனியப்பா தெரு பகுதியில் பொங்கல் நலத்திட்ட உதவிகளை துணை முதல்வர் உதயநிதி நேற்று வழங்கினார்.

## பொங்கல் விழாவில் பறை இசைத்த கலெக்டர்



ஈரோடு கலெக்டர் அலுவலக வளாகத்தில் நடந்த பொங்கல் விழாவில் பறை இசைத்த கலெக்டர் கந்தசாமி.

## பொங்கல் விழாவில் நடனமாடிய அரசு ஊழியர்கள்



ஊட்டி கூடுதல் கலெக்டர் அலுவலக வளாகத்தில் நடந்த பொங்கல் விழாவில் நடனமாடிய அரசு ஊழியர்கள்.

## சமுதாய நலக்கூடத்தை கனிமொழி எம்.பி.,திறந்து வைத்தார்



திருவைகுண்டம் வட்டம் மணக்கரை ஊராட்சியில் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து புதிதாக கட்டப்பட்டுள்ள சமுதாய நலக்கூடத்தை கலெக்டர் இளம்பகவத் முன்னிலையில் கனிமொழி எம்.பி., திறந்து வைத்தார்.

# திருவத்திமலையில் பொங்கல் கொண்டாட்டம்





**விழுப்புரம், ஜன.14:**
விழுப்புரம் மாவட்டம் செஞ்சியில் இருந்து சுமார் 10 கி. மீட்டர் தொலைவில் அழகிய எழில்மிகு இயற்கை காட்சிகளுடன் மலையடி வாரத்தில் ஆன்மீகத் தலமாக வெங்கடாஜலபதி திருக்கோவில் அமைந்து உள்ளது/வருடம் முழுவதும் முக்கிய தினங்களில் இத்திருக்கோவிலில் பத்து ஆண்டுகளாக பூஜைகள்,திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன.

அதனைத்தொடர்ந்து பொதுமக்கள் வழக்கமான நாட்களை விட ஆங்கில புத்தாண்டு முதல்நாள் மற்றும் பொங்கல் திருநாளான காணும் பொங்கல் அன்றும் பல்லாயிரம் கணக்கானோர் வருவார்கள் உள்ளூர்,வெளியூர் சென்னை, விழுப்புரம் கடலூர், திருவண்ணாமலை போன்ற இடங்களிலும் இருந்தும் பக்தர்கள் பொதுமக்கள் வந்துச்செல்வதால் பொதுமக்கள் வரும் அனைவருக்கும் அன்னதானம் வழங்கவும் கோவில் நிர்வாக அறக்கட்டளை சார்பில் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளையும் செய்துவருகின்றனர்.

அகரம் ராமதாஸ், செய்தியாளர்

# தேவீர அள்ளி அரசுப்பள்ளியில் இயற்கையான பொங்கல் விழா



**காவேரிப்பட்டினம், ஜன.14:**
காவேரிப்பட்டினம் ஒன்றியம் தேவீர அள்ளி அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் துவக்கப்பள்ளி இணைந்து இயற்கையான சுகாதார பொங்கல் விழா கொண்டாடப்பட்டது

பள்ளியில் பொங்கல் விழா தலை ஆசிரியர் முத்து லட்சுமணன் தலைமையால் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் நெகிழி பயன்பாட்டை தவிர்த்து இயற்கையான சுகாதாரமான பொங்கல் விழா கொண்டாடப்பட்டது.

இவ்விழாவில் புது மண்பானையில் புது அரிசி பொங்கல் வைத்து கரும்பு, மஞ்சள், பூசணி வைத்து மாணவர்களோடு இணைந்து ஆசிரியர்கள் பொங்கலை கொண்டாடினார்கள். பள்ளியல் பணிபுரியும் சமையலர்கள் மற்றும் தூய்மை பணியாளர்களுக்கு புத்தாடைகள் வழங்கி ஆசிரியர்கள் பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

இதில் ஆசிரியர்கள் மனோகரன் வெங்கடேஷ்பிரபு, திருமலை, லாவண்யா, கவிதா, தீபா, தனலட்சுமி, அம்சவேணி, அரசு, மணிவண்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர். நிறைவாக மாணவர்கள் அனைவருக்கும் இனிப்பு பொங்கல் வழங்கப்பட்டது.

## தூய்மைப் பணியாளர்களின் 150 நாள் போராட்டம் வெற்றி

**சென்னை, ஜன.14:**

சென்னை மாநகராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்கள் 150 நாட்களுக்கும் மேலாக நடத்திய உண்ணாவிரதப் போராட்டம் வெற்றிகரமாக முடிவுக்கு வந்துள்ளது. பணி நிரந்தரம் உள்ளிட்ட 16 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து அம்பத்தூரில் போராடி வந்த 5 மற்றும் 6-வது மண்டலப் பணியாளர்களை அமைச்சர் சேகர் பாபு மற்றும் மேயர் பிரியா ஆகியோர் நேரில் சந்தித்து பேசினர். “இந்த மாத இறுதிக்குள் தூய்மைப் பணியாளர்கள் அனைவரும் சென்னை மாநகராட்சியின் கீழ் அதிகாரப்பூர்வமாகப் பணியமர்த்தப்படுவார்கள். இந்தப் பொங்கல் அவர்களுக்கு மகிழ்ச்சியான பொங்கலாக அமையும்” என அமைச்சர் சேகர் பாபு அறிவித்தார்.

## 56 தொகுதி கேட்கவில்லை! கூட்டணி ஆட்சி என சொல்லவில்லை! நயினார் நாகேந்திரன் பல்டி



**மதுரை, ஜன. 14:**

தமிழக சட்டமன்றத் தேர்தலையொட்டி, தேசிய ஜனநாயக கூட்டணி கட்சித் தலைவர்கள் பங்கேற்கும் முதல் பொதுக்கூட்டம் மதுரை பாண்டிகோவில் அருகே உள்ள அம்மா திட லில் ஜனவரி 23 அன்று ஏற்பாடு செய்யப்பட்டுள் ளது. பிரதமர் நரேந்திர மோடி தலைமை வகிக் கிறார். இந்நிலையில், பொதுக் கூட்டம் நடைபெறும் இடத்தை அதிமுக முன்னாள் அமைச்சர்கள் ஆர்.பி. உதயகுமார், செல்லூர் ராஜு ஆகியோருடன் சென்று ஆய்வுசெய்த பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன், பின்னர் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தார். அப்போது, “தமிழ கத்தில் கூட்டணி ஆட்சி என பாஜக சொல்ல வில்லை. பாஜக 56 தொகுதி கள் மற்றும் மூன்று அமைச் சர்களை கூட்டணியில் கேட்ட தாக சொல்வதும் வதந்தி” என்று தெரிவித்தார். ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித் ஷா துவங்கி பாஜக தலைவர்கள் பலரும் கூட்டணி ஆட்சி தான் என்று கூறிவரும் நிலையில், இல்லவே இல்லை என்று நயினார் நாகேந்திரன் பல்டி அடித்துள்ளார்.

## கும்மிடிப்பூண்டியில் யோகாசனத்தில் மாணவர்கள் உலக சாதனை

**திருவள்ளூர், ஜன.14:**

கும்மிடிப்பூண்டி யோகா பயிற்சி மையத்தை சேர்ந்த மாண வர்கள், தொடர்ந்து 10 நிமிடங்கள் பரிவர்த்த ஜானு சிரசாசனம் எனும் யோகாசனம் செய்து நோபல் உலக சாதனை படைத்தனர். பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, கும்மிடிப்பூண்டியில் இயங்கி வரும் ஸ்ரீ சங்கரி யோகா பயிற்சி மையம் மற்றும் இந்தியன் யோகா அசோசியேஷன் அமைப்பின் தமிழ்நாடு பிரிவு இணைந்து, யோகா உலக சாதனை நிகழ்வை நடத்தினர். கும்மிடிப்பூண்டி முன்னாள் ஒன்றிய குழு தலைவர் சிவகுமார் தலைமையில் நடந்த நிகழ்வில், இந்திய யோகாசன விளையாட்டு கூட்டமைப்பின் தேசிய செய லாளர் டாக்டர் அரவிந்த் லட்சுமி நாராயணன் சிறப்பு அழைப்பாள ராக பங்கேற்றார். ஸ்ரீ சங்கரி யோகா மையத்தின் நிறுவனர் சந்தியா, நோபல் உலக சாதனை தீர்ப்பாளர் பரணிதரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்வின் போது, யோகா மையத்தை சேர்ந்த, 90 மாணவர்கள், தொடர்ந்து, 10 நிமிடங்கள், பரிவர்த்த ஜானு சிரசாசனம் எனும் யோகாசனம் செய்து புதிய உலக சாதனை படைத்தனர்.

## பெண்களுக்குத் தையல் பயிற்சியை வந்தவாசியிலேயே வழங்கக் கோரிக்கை

**திருவண்ணாமலை, ஜன. 14:**

வந்தவாசியில் நடைபெற்ற சிறுபான்மை மக்கள் நலக்குழு கூட்டத்தில், தையல் பயிற்சி பெறும் பெண்களுக்கு வந்தவாசியிலேயே பயிற்சி மையம் அமைக்க வேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தற்போது 70 கி.மீ தொலைவிலுள்ள திருவண்ணாமலைக்குச் சென்று பயிற்சி பெற வேண்டியிருப்பதால், குழந்தைகளை வைத்திருக்கும் பெண்கள் கடும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். எனவே, அரசு வந்தவாசியிலேயே பயிற்சி அளித்துத் தையல் இயந்திரங்களை வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சென்னை தீவுத் திடலில் 50-வது சுற்றுலா பொருட்காட்சி தொடங்கியது



**சென்னை, ஜன.14:**

சென்னை தீவுத் திடலில் 50-வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி நேற்று தொடங்கியது. தமிழக அரசின் சுற்றுலாத்துறை சார்பில், சென்னை தீவுத்திடலில் ஆண்டுதோறும் சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி கடந்த 49 ஆண்டுகளாக நடத்தப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டு பொன் விழா ஆண்டு ஆகும். எனவே, பொன்விழா கொண்டாட்ட பொருட்காட்சியை சிறப்பாக நடத்துவதற்கு தமிழக அரசு அனுமதி அளித்து அரசுத்துறை அரங்கங்களை அமைக்க ரூ.1.55 கோடி வழங்கியது.

இந்நிலையில், 50-வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி தீவுத் திடலில் நேற்று தொடங்கியது. இந்த பொன்விழா பொருட்காட்சியை சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன், சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆகியோர் கூட்டாக தொடங்கி வைத்தனர்.

இவ்விழாவில், மேயர் பிரியா, துணை மேயர் மகேஷ்குமார், சுற்றுலாத் துறை செயலர் கே. மணிவாசன், சுற்றுலா ஆணையர் மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண் இயக்குநர் டி.கிறிஸ்துராஜ், சென்னை மாவட்ட ஆட்சியர் ரஷ்மி சித்தார்த் ஜகடே, சுற்றுலா வளர்ச்சிக் கழக பொது மேலாளர் சி.லட்சுமி பிரியா, சுற்றுலாத் துறை இணை இயக்குநர் அ.சிவப்பிரியா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

*43 அரங்குகள்:* இந்த பொருட்காட்சியில் தமிழக அரசுத் துறை மற்றும் மத்திய அரசுத் துறை அரங்குகள் என மொத்தம் 43 அரங்குகள் இடம் பெற்றுள்ளன. அதோடு, 15 தனியார் அரங்குகளும் உள்ளன. ராட்சத வீல், ஆக்டோபஸ், சுனாமி, ஸ்விங் சேர், டெக்னோ ஜம்ப் உட்பட சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை விளையாடும் விளையாட்டு சாதனங்கள் இடம் பெற்றுள்ளன.

குழந்தைகளை கவரும் வகையில் அதிரவைக்கும் பேய் வீடு, பனிக்கட்டி உலகம், 3-டி ஷோ, பறவைகள் கண்காட்சி, வாட்டர் ரோல், கார்னிவெல் விளையாட்டுகள் உள்ளிட்ட பல்வேறு சிறப்பு அம்சங்களையும் பொருட்காட்சியில் கண்டுகளிக்கலாம்.

நுழைவுக் கட்டணம் எவ்வளவு?

நுழைவுக் கட்டணம் பெரியவர்களுக்கு ரூ.40. சிறுவர்களுக்கு (4 வயது 10 வயது வரை) ரூ.25. பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு சலுகை கட்டணம் ரூ.25. www.ttdcfair.com என்ற இணையதளம் வழியாகவும் நுழைவுச் சீட்டை பெறலாம்.

பொருட்காட்சியை திங்கள் முதல் வெள்ளி வரை தினமும் பிற்பகல் 3 முதல் இரவு 10 மணி வரையும், சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில் காலை 11 முதல் இரவு 10 மணி வரையும் கண்டு களிக்கலாம். இந்த பொருட்காட்சி 70 நாட்கள் நடைபெறும் என சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அறிவித்துள்ளது.

# அனைத்து மருத்துவமனையிலும் கூடுதல் பாதுகாப்பு: டீன்களுக்கு சுகாதாரத் துறை செயலர் அறிவுறுத்தல்

**சென்னை, ஜன.14:**

தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைகளிலும் பாதுகாப்பை பலப்படுத்த வேண்டும்’ என்று டீன்களுக்கு சுகாதாரத் துறை செயலர் செந்தில்குமார் அறிவுறுத்தியுள்ளார்.

சென்னை கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பிரசவ வார்டு எதிரே தூங்கிக் கொண்டிருந்த ரவுடியை ஒரு கும்பல் வெட்டி படுகொலை செய்தது.

இந்த சம்பவம், அங்கு சிகிச்சை பெறும் நோயாளிகள், பார்வையாளர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவப் பணியாளர்கள் என அனைவரின் பாதுகாப்பையும் கேள்விக்குறியாக்கியுள்ளது.

இதைத் தொடர்ந்து, அனைத்து அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை டீன்களிடமும் சுகாதாரத் துறை செயலர் செந்தில்குமார், நேற்று காணொலி வாயிலாக ஆய்வுக் கூட்டம் நடத்தினார்.

இதில் அவர் பேசியதாவது: அனைத்து அரசு மருத்துவக் கல்லூரிகள் மற்றும் மருத்துவமனைகளில் பாதுகாப்பை பலப்படுத்த வேண்டும்.




மருத்துவமனைகளில் உள்ள சிசிடிவி கேமராக்களின் செயல்பாடுகளை ஆய்வு செய்து, அவை செயல்படும் தன்மையை உறுதிசெய்ய வேண்டும். தேவைப்பட்டால் கூடுதலாக, சிசிடிவி கேமராக்கள் பொருத்தி 24 மணி நேரமும் கண்காணிக்க வேண்டும்.

சேலம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு வரும் நோயாளிகள், பார்வையாளர்களுக்கு, அடையாள அட்டை என்ற ‘டேக்’ அணிவித்து மருத்துவமனை வளாகத்துக்குள் அனுமதிப்பது சோதனை முறையில் நடந்து வருகிறது. இதை அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் அமல் படுத்த வேண்டும். மருத்துவமனை பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ள காவலர்கள் மற்றும் போலீஸாரை அழைத்து ஆய்வுக் கூட்டம் நடத்தி, பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். சந்தேகப்படும்படியாக யாராவது மருத்துவமனையில் சுற்றினால் உடனடியாக போலீஸாருக்கு தெரியப்படுத்தி, விசாரிக்க வேண்டும்.

கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில் தற்போது கட்டுமானப் பணி நடைபெறுகிறது. இரவிலும் பணி நடைபெறுவதால் பணிகளுக்கு ஆட்கள் உள்ளே வருவது வழக்கமானதாக இருந்துள்ளது. இந்த விவகாரத்தில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த தனியார் நிறுவனத்தின் காவலர்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளது. இதுகுறித்து, சம்பந்தப்பட்ட நிறுவனத்திடம் விளக்கம் கேட்கப்படும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# நடிகர் விஜய் டெல்லி சென்று திரும்பிய சொகுசு விமானத்திற்கு ஒரு மணிநேரத்திற்கு வாடகை ரூ.5 லட்சமாம்!

**சென்னை, ஜன.14:**

தமிழக வெற்றிக் கழகம் என்ற பெயரில் கட்சி தொடங்கியுள்ள நடிகர் விஜய், வரும் சட்டசபை தேர்தலில் போட்டியிட இருக்கிறார். இதற்காக அவர் தமிழகம் முழுவதும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு வருகிறார். கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 27-ந் தேதி கரூரில் அவர் பிரசாரம் மேற்கொண்டார். அப்போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் 41 பேர் உயிரிழந்தனர். இதுகுறித்து வழக்குப்பதிவு செய்த சி.பி.ஐ., சம்பவ இடத்திலும், தவெக நிர்வாகிகளிடமும் விசாரணை



நடத்தி வருகின்றனர்.

அந்த வகையில், விஜய்யிடமும் விசாரணை நடத்துவதற்காக சி.பி.ஐ. அதிகாரிகள் நேற்று அவரை டெல்லி அழைத்திருந்தனர். அதன் அடிப்படையில், தனியார் சொகுசு விமானத்தில் நேற்று காலை டெல்லி சென்ற நடிகர் விஜய், நேற்று சென்னை திரும்பினார்.

நடிகர் விஜய் பயணம் செய்த சொகுசு விமானம் பிளை எஸ்பிஎஸ் என்ற தனியார் நிறுவனத்திற்கு சொந்தமானது. எம்ப்ரேர் லெகசி 600 ரகத்தை சேர்ந்த இந்த விமானத்தில் சுமார் 13 பேர் பயணம் செய்யலாம்.

ஏற்கனவே அவர் தமிழகத்தில் பிரசார பயணத்திற்காக சென்றபோதும் இதுபோன்ற விமானத்தை பயன்படுத்தினார் என்றாலும், இது நீண்ட தூரம் பயணிக்கக்கூடிய விமானம் ஆகும். 5500 கி.மீ. தூரம் வரை தரையிறங்காமல் பயணிக்க முடியும். 41 ஆயிரம் அடி உயரத்தில் பறக்கும் அளவு திறன் பெற்றது.

விமானத்தின் உள்ளேயும் இருக்கைவசதிகள் சாதாரணமாக இல்லாமல், ஷோபா வடிவில் இருக்கும். இந்த சொகுசு விமானத்திற்கு ஒரு மணி நேர வாடகை ரூ.2½ லட்சம் முதல் ரூ.5 லட்சம் வரை என்று கூறப்படுகிறது. இதுபோக, இந்த விமானம் தரையிறங்கும் விமான நிலைய கட்டணத்தையும் நடிகர் விஜய்யே ஏற்றுக்கொள்ள வேண்டுமாம். அந்த வகையில், நடிகர் விஜய்யின் டெல்லி பயணத்திற்கு விமான வாடகைக்கு மட்டும் சுமார் ரூ.50 லட்சம் கொடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.
"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்
94452 65389

## நலம் தரும் மருத்துவம்

### ஆரோக்கிய வாழ்க்கைக்கு உதவும் பானங்கள்




தற்போது உடல் எடை பராமரிப்பு பற்றிய விழிப்புணர்வு பொதுவாக நம் அனைவரிடமும் பெருமளவில் வந்து விட்டது. நமது உடல் எடையை குறைக்கவும், ஆரோக்கியத்தை மேம்படுத்தும் வகையிலும் உணவுகளை எடுத்துக் கொள்கிறோம். மேலும் மருத்துவர்கள், நீரிழிவு நோயாளிகள் நடைப்பயிற்சியை தொடர்ந்து செய்து வர பரிந்துரைக்கின்றனர்.

உடல் எடை பராமரிப்பு மற்றும் ஆரோக்கியத்திற்கு டயட் எனப்படும் உணவு கட்டுப்பாடு அவசியமாகிறது. இந்த சமயத்தில் நாம் ஆரோக்கியமான பானங்களை அருந்துவது அவசியம். அவற்றில் சில எளிய, இயற்கை முறையில் தயாரிக்கக்கூடிய பானங்களை பற்றி பார்ப்போம்.

ஜூஸ் வகைகள்:

1. நெல்லிக்காய் + கறிவேப்பிலை + தயிர் + இஞ்சி சேர்த்து நன்கு அரைத்து, உப்பு சேர்த்து பருகலாம்.

2. கறிவேப்பிலை + இஞ்சி + தயிர் சேர்த்து நன்கு அரைத்து, உப்பு சேர்த்து பருகலாம்.

3. வெண்பூசணி + இஞ்சி + சீரகம் சேர்த்து நன்கு அரைத்து, உப்பு சேர்த்து பருகலாம்.

4. செம்பருத்திப்பூ இதழ்கள் + ஏலக்காய் சேர்த்து அரைத்து, கருப்பட்டி சேர்த்து பருகலாம்.

தேநீர் வகைகள்:

1. வெந்தயத் தேநீர் / வெந்தய நீர்:

ஒரு ஸ்பூன் வெந்தயத்தை முதல் நாள் இரவே தண்ணீரில் ஊற வைத்து, காலையில் வெறும் வயிற்றில் வெந்தயத்தை மென்று சாப்பிட்டு அந்த தண்ணீரை குடிக்கலாம். அல்லது வெந்தயம் ஊறிய தண்ணீரை குடித்துவிட்டு, மீதமுள்ள வெந்தயத்தை தண்ணீரில் கொதிக்க வைத்து சூடாக பருகலாம். இறுதியாக வெந்தயத்தை மென்று சாப்பிட்டால், உடலில் உள்ள இரத்த சர்க்கரை அளவு கட்டுப்படும், பசியையும் கட்டுப்படுத்தும்.

2. சோம்பு தேநீர்:

ஒரு ஸ்பூன் சோம்பை முதல் நாள் இரவே தண்ணீரில் ஊற வைத்து, காலையில் கொதிக்க வைத்து வெறும் வயிற்றில் குடித்து வர, செரிமான சக்தி தூண்டப்படும்.

3. இலங்கப்பட்டை டீ:

ஒன்று அல்லது இரண்டு இலங்கப்பட்டைகளை தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்து வடிகட்டி குடிக்கலாம். இந்த டீ, இரத்தத்தில் சர்க்கரையின் அளவைக் குறைத்து, பசியைக் கட்டுப்படுத்த உதவும்.

4. கொத்துமல்லி டீ:

ஒரு ஸ்பூன் கொத்துமல்லியை முதல் நாள் இரவே தண்ணீரில் ஊற வைத்து, காலையில் கொதிக்க வைத்து வெறும் வயிற்றில் குடித்து வர, செரிமான சக்தியை தூண்டி உடல் எடை குறைய உதவுகிறது.

5. சப்ஜா விதைகள் நீர்:

ஒரு ஸ்பூன் சப்ஜா விதைகளை அரை மணி நேரம் ஊற வைத்து, பின் அதனை வெதுவெதுப்பான நீரில் அல்லது எலுமிச்சை சாறு கலந்து குடிக்கலாம். இது ஒமேகா 3-ஐ அதிகரித்து, நார்ச்சத்தை அளிக்கிறது.

6. சீரகம் + ஓமம் + கருஞ்சீரகம் டீ:

ஒரு ஸ்பூன் சீரகம் + ஓமம் + கருஞ்சீரகம் கலந்து, முதல் நாள் இரவே தண்ணீரில் ஊற வைத்து, காலையில் கொதிக்க வைத்து வெறும் வயிற்றில் குடித்து வர, வாயுத் தொல்லைகளை நீக்கி செரிமான சக்தியை தூண்டுகிறது.

7. உலர் கருப்பு திராட்சை நீர்:

10 அல்லது 12 உலர் கருப்பு திராட்சைகளை நீரில் போட்டு பத்து நிமிடம் ஊற வைத்து, பின் கழுவி முதல் நாள் இரவே தண்ணீரில் ஊற வைத்து, காலையில் வெறும் வயிற்றில் மென்று சாப்பிட்டு அந்த தண்ணீரை குடிக்கலாம்.

ஆன்டி-ஆக்ஸிடென்ட்கள் நிறைந்த இது, இரத்தத்தில் சிவப்பு அணுக்களை அதிகரித்து, நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க உதவுகிறது. மேற்சொன்ன பானங்களை அவரவர் உடல் எடை ஆரோக்கியத்திற்கேற்ப பயன்படுத்தி நலம் பெறுவோம்.

## பொங்கல் பரிசுத் தொகுப்பு இன்றும் வழங்கப்படும் என அறிவிப்பு

**சென்னை, ஜன.14:**

தமிழர்களின் பாரம்பரிய பண்டிகையான பொங்கல் பண்டிகை நாளை மறுநாள் (வியாழக்கிழமை) கோலாகலமாக கொண்டாடப்பட உள்ளது. இந்த ஆண்டு பொங்கல் திருநாளை மக்கள் அனைவரும் சிறப்பாகக் கொண்டாடும் வகையில், தமிழ்நாடு அரசு 2 கோடியே 22 லட்சத்து 91 ஆயிரத்து 710 அனைத்து அரிசி ரேஷன் அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்பட்டு வருகிறது.

ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழு நீளக்கரும்பு மற்றும் ரொக்கப் பரிசாக ரூ.3 ஆயிரம் வழங்கப்படுகிறது. தமிழ்நாடு முழுவதும் அனைத்து அரிசி ரேஷன் அட்டைதாரர்கள் மற்றும் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினர் ஆகியோருக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பிற்கான டோக்கன், 4.1.2026 முதல் 7.1.2026 வரை ரேஷன் கடை பணியாளர்களால் வழங்கப்பட்டது.

நேற்று (12-ந் தேதிவரை) 24 ஆயிரத்து 924 ரேஷன் கடைகளில் உள்ள 2 கோடியே 4 லட்சத்து 10 ஆயிரத்து 899 அட்டைதாரர்களுக்கு பொங்கல் ரொக்கத் தொகையாக ரூ.6,123.26 கோடி வினியோகம் செய்யப்பட்டு உள்ளது. பொங்கல் பரிசு தொகுப்பு வினியோகம் இன்றுடன் நிறைவு பெறுவதாக அறிவிக்கப்பட்டு இருந்தது. இந்த நிலையில், தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து ரேஷன் கடைகளிலும் பொங்கல் பரிசுத் தொகுப்பு நாளையும் (புதன்கிழமை) வழங்கப்படும் என தமிழக அரசு அறிவித்துள்ளது. இதனை பயன்படுத்தி விடுபட்டவர்கள் பொங்கல் பரிசு தொகுப்பை வாங்கிக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## திருச்சி: கலெக்டர் அலுவலகத்தில் பொங்கல் வைத்து கொண்டாட்டம்;

**திருச்சி, ஜன.14:**

தமிழகத்தில் போகி பண்டிகை, தை பொங்கல், மாட்டு பொங்கல் மற்றும் காணும் பொங்கல் என பொங்கல் பண்டிகை நான்கு நாட்கள் விமரிசையாக கொண்டாடப்படும். இந்நிலையில், திருச்சியில் உள்ள கலெக்டர் அலுவலகத்தில் இன்று பொங்கல் வைத்து கொண்டாடப்பட்டது.

இதில் அதிகாரிகள் மற்றும் பல்வேறு துறை சார்ந்த பணியாளர்கள் கலந்து கொண்டனர். விவசாயிகளுக்கு மதிப்பளிக்கும் வகையில், இயற்கைக்கு நன்றி தெரிவிக்கும் வகையிலும் வளத்தின் அடையாளம் வெளிப்படும் வகையில், பாரம்பரிய முறையில் புது மண்பானையில் பொங்கலிட்டனர். இந்த கொண்டாட்டத்தில் வெளிநாடுகளை சேர்ந்த சுற்றுலாவாசிகள் 25 பேர் கலந்து கொண்டு அவர்களும் பொங்கல் வைத்து சிறப்பித்தனர். அப்போது அவர்கள், தமிழக பாரம்பரிய நடைமுறைகளை கண்டு களித்ததுடன், அதிகாரிகளிடம் அதுபற்றி கேட்டு தெரிந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில், திருச்சி மாவட்ட கலெக்டர் சரவணன் கலந்து கொண்டு, அனைவருக்கும் பொங்கல் வாழ்த்துகளை தெரிவித்து கொண்டார்.

# அவனியாபுரம் ஜல்லிக்கட்டு இறுதிக்கட்ட பணிகள் தீவிரம் - டிராக்டர்கள், தங்க காசுகள் பரிசு

**மதுரை, ஜன.14:**

ஜன. 15-ம் தேதி பொங்கல் பண்டிகை நாளில் நடக்கும் மதுரை அவனியாபுரம் ஜல்லிக்கட்டு போட்டி இறுதிக்கட்ட ஏற்பாடு பணிகள் தீவிரமாக நடக்கின்றன. சிறந்த காளை, மாடுபிடி வீரர்களுக்கு டிராக்டர்கள், தங்க காசுகள் உள்ளிட்ட பரிசுகள் வழங்கப்பட உள்ளன.



தமிழர்களின் பாரம்பரிய ஜல்லிக்கட்டு போட்டிகள் தை மாதம் முழுவதும் மாநிலத்தின் பல பகுதிகளில் நடத்தப்படும். தை முதல் நாளில் அவனியாபுரத்தில் ஜல்லிக்கட்டு நடைபெறும். நிகழாண்டில் மாவட்ட நிர்வாகம் சார்பில் அவனியாபுரம் ஜல்லிக்கட்டு போட்டி வரும் 15-ம் தேதி நடைபெறுகிறது.

இதில் பங்கேற்கும் காளைகள் மற்றும் மாடுபிடி வீரர்கள் பதிவு செய்ய வலைதளம் வழியாக கடந்த 7,8 ஆகிய தேதிகளில் விண்ணப்பங்கள் பெறப்பட்டன. இதில், கடந்த ஆண்டு 2,026 காளைகள் பதிவு செய்யப்பட்ட நிலையில், நிகழாண்டு 3,090 காளைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இது கடந்த ஆண்டைக் காட்டிலும் 1,064 காளைகள் அதிகம்.

அதே போன்று, கடந்த ஆண்டில் 1,735 மாடுபிடி வீரர்கள் பதிவு செய்த நிலையில் நிகழாண்டு 1,849 வீரர்கள் பதிவு செய்துள்ளனர். இது கடந்த ஆண்டைக் காட்டிலும் 114 பேர் அதிகம். மேலும் காளைகள், வீரர்களின் தகுதிகளை பரிசீலனை செய்ய வருவாய்த்துறை, கால்நடை பராமரிப்புத் துறை, மருத்துவத் துறை அலுவலர்கள் அடங்கிய குழுக்கள் நியமிக்கப்பட்டு, தகுதி வாய்ந்த வீரர்கள், காளைகளுக்கு வலைதளம் மூலம் டோக்கன் வழங்கப்படும் என மாவட்ட நிர்வாகம் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் அமைச்சர் பி.மூர்த்தி, மாவட்ட ஆட்சியர் பிரவீன்குமார், மாநகராட்சி ஆணையர் சித்ரா, காவல் ஆணையர் ஜெ.லோகநாதன், எம்எல்ஏ வெங்கடேசன் மற்றும் அதிகாரிகள் பார்வையிட்டனர்.

டிராக்டர் பரிசு: அமைச்சர் பி.மூர்த்தி கூறுகையில், அவனியாபுரம் ஜல்லிக்கட்டு காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறுகிறது. போட்டியில் சிறப்பிடம் பெறும் வீரர்கள், காளைகளுக்கு தங்க காசு, அண்டா, கட்டில், பீரோ உள்ளிட்டவை வழங்கப்பட்டு வருகிறது. அதிக காளைகள் பிடிக்கும் வீரர்களை, வருவாய்த் துறையினர் ஒவ்வொரு சுற்று வாரியாக தேர்வு செய்வர்.

இதில் அதிக காளைகளை பிடித்த வீரர் மற்றும் சிறந்த காளையின் உரிமையாளர் ஆகியோருக்கு முதல் பரிசாக கார்கள் வழங்கப்பட்டு வந்தன. தற்போது டிராக்டர்கள் வழங்கப்படும் என்றார்.

# தமிழக மீனவர்கள் 10 பேர் இலங்கை கடற்படையினரால் சிறைப்பிடிப்பு

**மதுரை, ஜன.14:**

தென்கிழக்கு வங்கக்கடலில் ஏற்பட்டிருந்த ஆழ்ந்த காற்றழுத்து தாழ்வு மண்டலம் காரணமாக கடந்த ஒரு வாரமாக ராமேசுவரம் மீனவர்கள் கடலுக்குச் செல்வதற்கு அனுமதி சீட்டு ரத்து செய்யப்பட்டிருந்த நிலையில் கடலுக்குச் செல்லவில்லை.

இந்நிலையில், நேற்று முன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) வானிலை இயல்பு நிலைக்கு திரும்பியதை தொடர்ந்து, நேற்று (திங்கட்கிழமை) காலையில் ராமேசுவரம் விசைப்படகு மீனவர்கள் 400-க்கும் மேற்பட்ட படகுகளில் அனுமதி டோக்கன் பெற்று 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்குச் சென்றனர். இதனிடையே, நெடுந்தீவு அருகே ராமேசுவரம் மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது அங்கு வந்த இலங்கை கடற்படையினர் எல்லைதாண்டி மீன்பிடித்ததாக கூறி, தென்னரசு என்பவருக்குச் சொந்தமான விசைப்படகை சிறைப்பிடித்துள்ளனர். மேலும், படகில் இருந்த ஜார்ஜ், சுதன், கனகராஜ், சுமித், பரலோக ராஜ், கோபி, ஆரோக்கிய ரூபட், பிரேம்குமார், தினேஷ், ராஜேஸ் ஆகிய 10 மீனவர்களை (செவ்வாய்கிழமை) அதிகாலை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட 10 ராமேசுவரம் மீனவர்களையும் காரைநகர் கடற்படை முகாமுக்கு கொண்டு சென்ற இலங்கை கடற்படையினர் விசாரணைக்கு பின்னர் அந்நாட்டு மீன்வளத் துறையினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

# டிட்வா' புயலால் பாதிக்கப்பட்ட இலங்கை வடக்கு ரயில் பாதை: 5 மில்லியன் டாலர் இந்திய நிதியுதவியில் சீரமைப்பு

**ராமேசுவரம், ஜன.14:**

இலங்கையில் 'டிட்வா' புயலால் பாதிக்கப்பட்ட வடக்கு ரயில் பாதையை 5 மில்லியன் டாலர் இந்திய நிதியுதவியில் மறுசீரமைப்பு செய்யும் பணிகள் தொடங்கியுள்ளன. கடந்த டிசம்பர் மாதத் தொடக்கத்தில் 'டிட்வா' புயல் இலங்கையைத் தாக்கியது. இதில் 643 பேர் உயிரிழந்தனர்.




ஆயிரக்கணக்கானோர் காயமடைந்தனர். மேலும், அந்நாட்டில் பெரும் சேதத்தையும் ஏற்படுத்தியது. ஏற்கெனவே, பொருளாதார பின்னடைவைச் சந்தித்துள்ள நிலையில், இந்த 'டிட்வா' புயல் பேரிடரால் ஏற்பட்ட சேதத்தை சீர்படுத்த முடியாத நிலை இலங்கைக்கு ஏற்பட்டது.

இதையடுத்து, உலக நாடுகள், உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்டவைகளிடம் இருந்து இலங்கை கடன் உதவி கோரியது. அந்த வகையில், 'டிட்வா' புயலால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு உதவிடும் வகையில் இந்திய அரசு 'ஆபரேஷன் சாகர் பந்த்' என்ற திட்டத்தின் கீழ் நிவாரண உதவிகளைச் செய்தது.

மேலும், பிரதமர் நரேந்திர மோடியின் சிறப்பு தூதராக மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் இலங்கை சென்றார். அங்கு புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டதுடன், அந்நாட்டு அதிபர் அநுர குமார திசாநாயக்கவையும் அவர் சந்தித்தார்.

அதைத்தொடர்ந்து, 'டிட்வா' புயலால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு ரூ. 4 ஆயிரம் கோடி நிதியுதவியை இந்தியா வழங்கியது. இது, ரூ.3,150 கோடி சலுகை கடன், ரூ.900 கோடி மானியங்கள் என்றும், இந்த நிதியுதவி புயலால் பாதிக்கப்பட்ட இலங்கையை மறுசீரமைப்பு செய்ய பயன்படுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில், இந்தியா அளித்த நிதியுதவியிலிருந்து 5 மில்லியன் அமெரிக்க டாலர் தொகை மதிப்பில், இலங்கையின் வடக்கு ரயில் பாதை மறுசீரமைப்புப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

இதனை இலங்கைக்கான இந்தியத் தூதர் சந்தோஷ் ஜா, இலங்கையின் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சர் பிமல் ரத்நாயக்க ஆகியோர் தொடங்கிவைத்தனர்.

இதுகுறித்து இலங்கையில் உள்ள இந்தியத்தூதரகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், "டிட்வா புயலால் இலங்கை வடக்கு ரயில் பாதையின் சேதமடைந்த பகுதிகளை மீட்டெடுப்பதற்கு இந்திய நிதி உதவி உதவும். மேலும் இதன்மூலம் அத்யாவசிய போக்குவரத்து சேவைகள் மீட்டெடுக்கப்படும்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.




வறுமை, நோய், அறியாமை மூன்றும் முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை
பூமியில் இல்லாமல்
ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528

## வேலை வாய்ப்பற்ற இளைஞர்கள் உதவித்தொகைக்கு விண்ணப்பிக்கலாம்

**விழுப்புரம், ஜன.14:**

விழுப்புரம் மாவட்டத்தில் படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் உதவித்தொகை பெற விண்ணப்பிக்கலாம் என்று மாவட்ட ஆட்சியர் ஷேக் அப்துல் ரஹ்மான் தெரிவித்துள்ளார். 31.12.2025 அன்றைய நிலையில் 10-ம் வகுப்பு, பிளஸ்-2 மற்றும் பட்டப்படிப்பு முடித்துப் பதிவு செய்து 5 ஆண்டுகளுக்கு மேலாகக் காத்திருப்பவர்கள் இதற்குத் தகுதியானவர்கள். மாற்றுத்திறனாளிகள் ஓராண்டு காத்திருந்தால் போதுமானது. குடும்ப ஆண்டு வருமானம் ரூ.72 ஆயிரத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். தகுதியுள்ளவர்கள் பிப்ரவரி 28-ம் தேதி வரை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் விண்ணப்பிக்கலாம்.

## சாலை பாதுகாப்பு மாத விழா

**உதகை, ஜன. 14:**

சாலைப்பாதுகாப்பு மாத விழாவையொட்டி, உதகை வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் ஓட்டுநர்களுக்கான இலவச கண் பரிசோதனை முகாம் நடைபெற்றது. தேசிய சாலைப் பாது காப்பு மாத விழாவை யொட்டி, நீலகிரி மாவட்டம் உதகையில் உள்ள வட்டா ரப் போக்குவரத்து அலுவல கத்தில் வாகன ஓட்டுநர்க ளுக்கு இலவச கண் பரி சோதனை முகாம் திங்க ளன்று நடைபெற்றது. வட்டாரப் போக்குவரத்து அலு வலர் பிரபாகர் இந்த முகாமை தலைமை தாங்கி தொடங்கி வைத்தார். இதில் 500-க்கும் மேற்பட்ட வாகன ஓட்டுநர்கள் கலந்து கொண்டு தங்களது கண் களைப் பரிசோதனை செய்து கொண்டனர்.

## ஈரோடு, கோவையில் சமத்துவ பொங்கல் விழா


**ஈரோடு, ஜன. 14:**

ஈரோடு மாவட்ட காவல் துறையின் சார்பாக சமத்துவ பொங்கல் மாவட்ட ஆயுதப் படை வளாகத்தில் ஞாயிறன்று கொண்டாடப்பட்டது. இதில் குழந்தைகள் மற் றும் பெண்களுக்கான உரி அடித்தல், கயிறு இழுத்தல் போன்ற விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றது. மாவட்ட காவல் கண்காணிப் பாளர் சுஜாதா கலந்து கொண்டு போட்டியில் வெற்றி பெற்றோருக்கு பரிசு பொருட்கள் வழங்கி, பொங் கல் வாழ்த்துகளை தெரிவித் தார்.

**கோவை:** கோவை மாவட்ட ஆயுதப்படை மைதானத்தில், மேற்கு மண்டல ஐ.ஜி., சரவண சுந்தர் மற்றும் எஸ்.பி., கார்த்திகேயன் முன்னிலையில் ஆயுதப்படை போலீசார், மாநகர போலீசார் ஒன்றிணைந்து சமத்துவ பொங்கல் வைத்தனர். போலீசாரின் குடும்பத்தினரும், குழந்தைகளும் உற்சாகமாக கலந்து கொண்டனர். குழந்தைகளுக்கு பல்வேறு விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டு, வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. இவ்விழா ஒற்றுமை, சகோதரத்துவம் மற்றும் சமூக நல்லிணக்கத்தை வலுப்படுத்தும் விதமாக இருந்தது.

# கவலை வேண்டாம்! சிக்னல் இல்லையா? மொபைல் நெட்வொர்க் இல்லாமலும் போன் பேசுவது எப்படி?

ஸ்மார்ட்போன் நம் வாழ்வின் அங்கமாகிவிட்டது. ஆனால், இன்றும் பல நேரங்களில் நாம் சந்திக்கும் மிகப்பெரிய எரிச்சல் சிக்னல் இல்லை என்பதுதான். குறிப்பாக வீட்டின் உட்புற அறைகள், பேஸ்மென்ட் அல்லது அடுக்குமாடி குடியிருப்புகளில் சிக்னல் குறைவாக இருக்கும்போது முக்கியமான அழைப்புகள் துண்டிக்கப்படுவது பலருக்கும் நடக்கும் ஒரு கொடுமை.




டவர் கிடைக்கவில்லை என்று போனை ஜன்னல் ஓரம் கொண்டு போய் வைக்கும் காலம் இனி இல்லை. உங்கள் ஸ்மார்ட்போனில் இருக்கும் ஒரு ரகசிய வசதியை ஆன் செய்தாலே போதும்; சிக்னல் ஜீரோவாக இருந்தாலும் HD தரத்தில் பேச முடியும். அது என்ன வசதி? அதை எப்படி பயன்படுத்துவது? விரிவாகப் பார்ப்போம்.

இந்த அதிசய வசதியின் பெயர் Wi-Fi Calling (VoWiFi). சுருக்கமாகச் சொன்னால், உங்கள் சிம் கார்டின் சிக்னலைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, உங்கள் வீட்டில் உள்ள வைஃபை (Wi-Fi) நெட்வொர்க்கைப் பயன்படுத்தி அழைப்புகளை மேற்கொளளும் தொழில்நுட்பம் இதுவாகும்.

இது எப்படி வேலை செய்கிறது?

பொதுவாக நாம் போன் பேசும்போது, நம் மொபைல் அருகில் உள்ள செல்போன் டவருடன் இணையும். ஆனால் வைஃபை காலிங் வசதியில், உங்கள் போன் வைஃபை ரூட்டருடன் இணைந்து, அதன் வழியாக அழைப்புகளை மேற்கொள்ளும்.

இதன் சிறப்பம்சங்கள்:

சாதாரண அழைப்புகளை விட மிகத் தெளிவான ஆடியோ தரம் இதில் கிடைக்கும்.

உங்கள் தற்போதைய ரீசார்ஜ் பிளானிலேயே இது வேலை செய்யும். வைஃபை டேட்டாவிற்கு மட்டுமே மிகக் குறைந்த அளவில் செலவாகும்.

ஒருவேளை உங்கள் ஏரியாவில் மொபைல் டவரே இல்லை என்றாலும், வைஃபை இருந்தால் போதும், உலகத்தின் எந்த மூலைக்கும் பேசலாம்.



வைஃபை காலிங்-ஐ ஆன் செய்வது எப்படி?

பெரும்பாலான நவீன ஸ்மார்ட்போன்களில் இந்த வசதி உள்ளது. இதை ஆக்டிவேட் செய்ய கீழே உள்ள படிகளைப் பின்பற்றுங்கள்.

Android போன் எனில்,

1. முதலில் உங்கள் போனில் உள்ள Settings ஆப்பிற்குச் செல்லவும்.

2. அங்கே Connections அல்லது Network & Internet என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.

3. அதில் IM Cards அல்லது Mobile Network என்ற ஆப்ஷனுக்குள் செல்லவும்.

4. இப்போது அங்கே Wi-Fi Calling என்ற பட்டன் இருக்கும். அதை On செய்யவும்.

iPhone (iOS) போன் எனில்,

1. Settings ஆப்பிற்குச் செல்லவும்.

2. கீழே ஸ்க்ரோல் செய்து Phone என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.

3. அதில் Wi-Fi Calling என்பதைத் தொட்டு, உள்ளே சென்று ஆன் செய்யவும்.

கவனிக்க வேண்டிய சில முக்கிய விஷயங்கள்:


1. உங்களிடம் வைஃபை வசதி இருக்க வேண்டும். அது லேண்ட்லைன் வைஃபையாகவோ அல்லது மற்றொரு போனின் ஹாட்ஸ்பாட்டாகவோ இருக்கலாம்.

2. இந்தியாவில் ஜியோ, ஏர்டெல் மற்றும் Vi ஆகிய நிறுவனங்கள் இந்த வசதியை முழுமையாக வழங்குகின்றன.

நீங்கள் அடிக்கடி லிப்ட் அல்லது பேஸ்மென்ட்டில் இருக்கும்போது கால் கட் ஆகிறது என்றால், வைஃபை காலிங் வசதியை எப்போதும் ஆன் செய்து வைப்பது சிறந்தது. இது உங்கள் பேட்டரி ஆயுளை சிறிது மிச்சப்படுத்தும்.

தொழில்நுட்பம் வளர வளர, நம் பிரச்சனைகளுக்கான தீர்வுகளும் எளிதாகிக் கொண்டே வருகின்றன. இனி சிக்னல் இல்லை என்று கவலைப்படாமல், உங்கள் வைஃபை மூலமாகவே தடையின்றிப் பேசுங்கள்.

# ஏமாற்றாதே, ஏமாறாதே !



" இதோ பாருப்பா! நல்ல படிப்பு. கை நிறையச் சம்பாதிக்கற பெரிய வேலை உனக்கு. ஆள் நல்ல பர்ஸனாலிடியாவும் இருக்கே.என்ன பிரயோஜனம் ? 29 வயதாகியும் கல்யாணம் நடந்தபாடில்ல. நான் சொல்றத கேளு. எட்டு வெள்ளி க்கிழமைகளில் நம்ம நகர்ல இருக்கற காளிகாம்பாள் கோயிலுக்குப் போய் நீ வேண்டிக்கோ. சக்தி வாய்ந்த அம்மன்! நிச்சயம் பலன் கிடைக்கும். " அம்மா சொல்ல அதை தந்தையும் ஆமோதி த்தார்.

ராஜேஷ் எல்லா அம்சமும் பொருந்தி யிருந்தும் ஏனோ திருமண தசை தள்ளிப் போய்க் கொண்டிருந்தது ! பார்க் காத பெண் இல்லை. ஜாதகமும் சரி வர பொருந்தவில்லை. அதனால் கவலைப்பட்ட பெற்றோர் அப்படி ஒரு ஐடியாரைச் சொன்னார்கள்.

ராஜேஷுக்கு ஆன்மிகத்தில் அவ்வள வாக நாட்டம் இல்லை. இருந்தாலும் பெற்றோரின் விருப்பத்திற்கு தடை சொல்ல மனமில்லை. ஆகவே அன்று முதல் வெள்ளிக்கிழமை. அன்றே இரண்டு கிலோமீட்டர் தள்ளி உள்ள காளிகாம்பாள் கோயிலுக்கு தன் டூ வீலரில் புறப்பட்டுச் சென்றான் ராஜேஷ். கூடவே அவன் மனதில் ஒரு திட்டம் உருவானது.
வண்டியை பார்க் செய்துவிட்டு 10 ரூபாய் கொடுத்து டோக்கன் வாங்கி யவன் நடையைப் கட்டினான்.

வெள்ளிக்கிழமையாததால் கோயிலில் கூட்டம் நிறைய காணப்பட்டது. பெண் கள் எண்ணிக்கைதான் மிகுதியாக இருந்தது. இரண்டு பக்கமும் வரிசையாக பூஜைப் பொரு ட்கள் விற்கும் கடைகள். வியாபா ரம் அமோகமாக நடந்து கொண்டிருந் தது. ஒரு சிறுவன் உட்கார்ந்திருக்கும் கடையை நோக்கிச் சென்றான் ராஜேஷ். பூஜைப் பொருள்களாக தட்டு ஒவ்வொன்றிலும் ஒரு தேங்காய்; இரண்டு வாழைப் பழங்கள்; ஒரு முழம் பூ, வெற்றிலை பாக்கு, மஞ்சள் காணப் பட்டன.

ஒரு தட்டு 100 ரூபாய் என்று சிறுவன் சொன்னதும் இருநூறு ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்து அவனிடம் கொடுத்து விட்டு பாக்கி சில்லரை 100 ரூபாயை வந்து வாங்கிக் கொள்வதாகச் சொல்லி விட்டு தட்டுடன் அகன்றான் ராஜேஷ்.

தர்ம தரிசனம் வரிசை நீண்டு இருந்தது. அந்த வரிசையில் நின்றால் நிச்சயம் ஒரு மணி நேர அவகாசத்திற்கு மேலா கிவிடும். அதனால் 50 ரூபாய் கொடுத்து ஸ்பெஷல் தரிசனக் கியூவில் போய் நின்று கொண்டான்.

அரை மணியில் தரிசனம் முடிந்து வெளியே வந்தவன், கடையிலிருந்த சிறுவனிடமிருந்து பிளாஸ்டிக்
பையை வாங்கி அதில் பிரசாதங்க ளைக் கொட்டி விட்டு தட்டை சிறுவ னிடம் திருப்பித் தந்தான். பிறகு சிறுவன் தந்த மீதி 100 ரூபாயை வாங்கிக் கொண்டு அகன்றான். மனம் சந்தோஷத்தில் ரீங்காரம் இட்டது !

வீட்டுக்கு வந்ததும் பையை அம்மாவி டம் தந்து விட்டு தன் அறைக்குள் நுழை ந்த ராஜேஷ் தன் பாக்கெட்டிலிருந்து சிறவன் தந்த100 ரூபா நோட்டை எடுத்து உற்று பார்க்கும் போது தேள் கொ ட்டியது போல் இருந்தது. சிறுவன் கொடுத்தது கள்ள 100 ரூபாய் நோட்டு! தன்னிடம் முதல் முறையாக எப்படியோ வந்து மாட்டிக் கொண்ட கள்ள நோ ட்டான 200 ரூபாயை சமயம் பார்த்து தள்ளி விட்டதற்கு கிடைத்த சன்மானம் என தேற்றிக் கொண்டான் ராஜேஷ்.



**- வி.கே.லக்ஷ்மிநாராயணன்**
ராமகிருஷ்ணா நகர்
போரூர், சென்னை- 600 116

# மழைக்கால கிணறு

அத்தை !இங்கே பாருங்கோ எங்களால் இருபது பவுன் தான் போட முடியும் அதுக்கு மேலே முடியாது .கல்யாணம் பண்ணறதே பெரிசாக இருக்கும் இந்த காலத்தில் இப்படி பவுன் எல்லாம் கேட்கிறது ரொம்பவே ஓவர் அத்தை ..
என்றாள் மிருதுளா..
அது இல்லையடிம்மா, நீ ஆத்துக்கு வரும் போது கழுத்து நிறைய போட்டுண்டு வந்தா தானே மத்த மாட்டுப்பெண் எதிரே என் தம்பி பெண் என்று பெருமையாக சொல்ல முடியும் என்று தன் வரப்போகும் மருமகளை கொஞ்சி கொண்டே அத்தை சொல்ல ...
அக்காவும் தன் பெண்ணும் பேசி கொள்ளுவதை வேடிக்கை பார்த்து கொண்டே செக் புக்கை எடுத்து பையில் வைத்தார் கிருஷ்ணமூர்த்தி ..
அடுப்பாங்கறையிலிருந்து வெறுப்பாக இதை பார்த்து கொண்டே அப்பளத்தை வெட்டு வெடுன பொறித்தாள் எடுத்தாள் கற்பகம் மிருதுளாவின் அம்மா ..
கற்பகம் வாயில் முனுமுனுத்தாள் ,கல்யாணம் நடக்குமா? இல்லை நிற்குமா?
இந்த காட்சிகள் அனைத்தையும் அந்த இடத்தில் இருந்த அந்த கிருஷ்ணன் சிலை இவர்களின் சம்பாஷணை கேட்டு சிரித்து கொண்டு இருந்தது ...
கிருஷ்ணமூர்த்திக்கு எல்லாமே தன் அக்காதான்..அவர் அம்மா இவரை 3 வயது குழந்தையாக விட்டுட்டு போய் சேர்ந்தது முதல் 9 வயதில் இருந்த அக்கா இவனை அப்பவே தன் மகன் போல சுவீகரித்துக்கொண்டவள்.. தன் 16 வயதில் திருமணத்துக்கு அவர் அப்பா ஏற்பாடு பண்ண.. கொஞ்சமும் கவலைப்படாமல்.. தன் தம்பியையும் சேர்த்து அழைத்துக்கொண்டால் மட்டுமே என் கழுத்தில் தாலி கட்ட முடியும் உங்க பிள்ளைனு..அவள் மாமியாரிடம் முகம் பார்த்து சொன்னாள்..
இவள் தைரியம் பிடித்து போய் அப்படியே மருமகளோடு அவள் தம்மியையும் அழைத்து வந்து விட்டார் அவர்..அத்தனாம் பெரிய கூட்டுக்குடும்பத்தை பார்த்துக்கொண்டு தனக்கு எது கிடைக்கலன்னாலும் கம்முனு இருப்பவள்..தன் தம்பிக்கு ஒரு பென்சில் வாங்கி தரலன்னா கூட வீட்டை இரண்டு பண்ணிடுவாள்.. அதனாலேயே.தம்பியை படிக்க வைத்து ஆளாக்கி அவனுக்கொரு பெண்ணையும் பார்த்து கட்டிவைத்து பிறகுதான் ஓய்ந்தார் அவள் மாமியார்..
எல்லோரும் கிருஷ்ணானு கூப்பிட்டா..இவள் மட்டுமே மூர்த்தி கண்ணா',னுதான் கூப்பிடுவாள்..தன் மூனாவது பையனை தூக்கிக்கொண்டுபோய் ஒரு மாதம் தங்கி தன் தம்பி மனைவிக்கு பிரசவத்தில் ஒத்தாசையாய் இருந்து ..கையில் பெண் குழந்தையை வாங்கியவள் ..நேராக த் தம்பியிடம் காண்பித்தார் .. இந்தாடா..என் வீட்டின் மூன்றாவது மருமகள்.அவளை முறைப்படி ஏன் வீட்டுக்கு கூப்பிட்டுக்குற வரை..பத்திரமா வளர்த்துடு என்ன?,என்று அச்சாரம் போட்டவள்..
அவள் கண்டாளா..தன் மற்ற இரண்டு பிள்ளைகளும் டாக்டரும் என்ஜியரும் ஆவார்கள்,என்று.. வலிய ஆளுக்கு உடல் நிறைய நகைகளை பூட்டி வந்தனர் மருமகள்கள்..இவர் கேட்காமலே.. அதான் இப்ப தன் தம்பியிடம் கெஞ்சிட்டு ..தன் மருமகளா வரப்போற மிருதுளாவையும் தாஜா பன்றா..
"அக்கா..அவ அம்மா நகையையும் நான் கொடுக்க சொல்றேன்.ஒரு பொண்ணு , உன் ஆத்துல உன் லாயர் பையனை கட்டிக்கிட்டு ஜாம் ஜாம்னு இருக்க போறா..கண் நிறைஞ்சி அவ வாழறதை பார்க்கறத விட சந்தோஷம் வேற இருக்கோ..?"
திரும்பி தன் தம்பியை பார்த்தார் அம்புஜம்..இப்படி ஆக்ஸிடென்ட்ல ஒரு கையும் காலும் போகலன்னா..இன்னும் விசேஷமாய் அதிக பவுன் போட்டே கட்டிக்கொடுத்திருப்பான் தன் தம்பினு தெரியாதா என்ன..? பாழாப்போன விதி..இதோ..
கல்யாண நாள்
குறிச்சி..தாலி கட்டும் நேரமும் நெருங்கிட்டு..
பகவான நெனச்சி கண்ணத்துல போட்டுக்கறா..அம்புஜமும் மிருதுளாவ பெத்தவளும் ஒரு சேர..சின்ன நிம்மதி பெருமூச்சோடு..
மிருதுளாவின் கைப்பிடித்திருந்த வெங்கிட்டு மெல்ல அவள் காதில் .." உண்மையாவே உன் பெயர் போல ..உன் பிஞ்சு கையும் மிருதுவாதான் இருக்கு", குபீர்னு சிரித்தாள் அவள்..
பக்கத்திலிருந்தவர்கள் வாய் பொத்தி சிரிக்க..
சொந்தத்துல பொண்ணு குடுக்க, இதுக்குதான் சொல்லியிருக்காங்க பெரியவங்க.. "இந்த சந்தோஷம் எப்பவும் உன் முகத்துல இருக்கட்டும்",அவளை வாழ்த்த.. மலர்ந்தனர் இருவரும்..
தன் நகைகளையும் தன் மகளுக்கு கொடுத்துவிட்டு.. தாலிக்கொடியோடு மடிசாரில் தன் கழுத்தை மறைத்து நின்ற தன் தம்பி மனைவியிடம்.. தன் இரட்டை வட சங்கிலியை கொடுத்து போட்டுக்க சொன்னாள் அம்புஜம்.
சும்மா இல்லை ..16 பவுன் அது.. வார்த்தை வராமல் கற்பகம் நடுங்க..
" இப்ப என் சம்பந்தி நீ.. இப்படிலாம் உணர்ச்சி வசப்படக்கூடாது ..கேட்டியோ? நானா கேக்கறவறை இதை உன் கழுத்துலேருந்து கழட்டப்படாது..", வேண்டுமென்றே சத்தமாக சொல்ல..மற்ற மருமகள்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர்..
இப்போ அவரவர் தன் பங்குக்கு ..மிருதுளா கழுத்திலும் கையிலும் தங்கள் நகைகளை



கழட்டிப்போட..
வாயடைத்து போனாள் மிருதுளா.. கண்ணீரில் தத்தளித்தாள்.. அப்படியே
ஓடி வந்து தன் அத்தையை கட்டிக்கொண்டாள்..
"அத்தை,நீ இதுவரை எந்த மருமகளை பற்றியும் ஒரு வார்த்தை குறை சொன்னதேயில்லை..இப்ப புரியறது..குறை சொல்ல தேவையே இல்லைனு..உன் பேரை நானும் காப்பாத்துவேன் அத்தை.நல்ல மருமகள்தான் மூனாவதா வந்தவளும்னு எல்லோரும் சொல்லும்படி நடந்துப்பேன்!",என்று தேம்பியபடி சொல்ல..
" அசடு..உன் கண்ணுல தண்ணி தளும்பினா என் தம்பி தவிச்சிடுவான்..எப்பவோ நீ எனக்கு மருமகளாகிட்டேடி.. இனிதான் என் பையன் கூட வாழப்போற..! மத்த மருமகளுங்க மாதிரி..சீக்கிரமே என் கையில ஒன்ன பெத்துக்குடுக்க போற!", என்று சொல்ல..
சுற்றியிருந்தவர்கள் கொல்லென்று சிரிக்க..முகம் குங்குமமாக சிவக்க..தன் அப்பாவிடம் வந்து கோள் மூட்டினாள் .
" பாருங்கோப்பா..! இப்படிலாம் கிண்டல் பண்றா பாருங்க..நான் பிள்ளைய பெத்து உங்கிட்டதான் கொடுப்பேன்",
..',சரிம்மா..உன் மனசு போல ஆகட்டும்.அதை வளர்க்கறதுக்காகவே இன்னுப் தெம்போட இருக்கேன் நான்", என்று வீல் சேரில் இருந்தவாறு அவரும் சொல்ல ..
அங்கு அத்தனை பேர் மனசும் மழைக்கால கிணறு போல தளும்பிக்கொண்டிருந்தது மகிழ்ச்சியில்..
நீங்களும் தம்பதியரை வாழ்த்துங்கோ..
கண்ணன் வழக்கம் போல சிலையாக சாட்சியாக நின்றிருந்தான் ..அலங்காரத்தோடு.. நடுக்கூடத்தில்..



**-உமாதேவி சேகர்**
தஞ்சை பியூட்டிஷியன்



# ஊர்மிளையின் ஊமைமனம்

இரண்டாம் பாகம் 12



**▪கே.பானுமதி நாச்சியார்**
சிவகிரி

## பரதன் நிராகரிப்பு

தொன்மை மந்திரக்கிழவர் என்பார் கம்பர் சுமந்திரன் அமைச்சரை. அந்தக் கோசலை நாட்டு அறிஞர்களுடன் ஆலோசித்து "வையகம் மன்னன் இன்றி இருப்பது மரபன்று!" என்று துணியும் நெஞ்சினன் முந்தினான். பரதனை அழைத்து மன்னன் இல்லாமையால் அரசுக்கு ஏற்படும் தீங்குகளை விவரமாகக் கூறினான்.

"படை இல்லாத மன்னவனும், மன்னவன் இல்லாத நாடும் பாழ்!" என்றார்.

அங்கிருந்த பரதனை, அருமறை முனிவரும், அரச முறைகளை ஆராய்ந்து வேதவழியில் செய்யப்படும் சான்றோர்களும் அன்பினால் வணங்கி, சூழ்ந்து நின்றனர். அமைச்சரின் நோக்கத்தை உணர்ந்த வசிஷ்டர், அமைச்சரிடம் முடியரசு தொடங்கச் செய்யச் சொன்னார். பின் வசிஷ்ட முனிவர் அரசின் சிறப்பினை எடுத்துரைத்தார்.

கோது அறு குணத்தினாய்! வேதியர், அருந்தவர், விருத்தர், வேந்தர்கள் முதலியவர்கள் உன்னிடத்தில் வந்து சேர்ந்த செயல், அரசு தர்மத்தை நிறுவுவதற்கும், அது சிதையா வண்ணம் நிலை நிறுத்தவே ஒரு நாட்டிற்கு மன்னன் இன்றியமையாதவன். இயங்கும், இயங்கா பொருளுக்கும் தலைவன் என்பதை உணர வைத்து ஒரு தலைமை ஒன்று உண்டு என்று அறியப் படுத்தினார் வசிஷ்ட முனிவர்."உம் தந்தையோ இறந்தனன்; உம்முன் அரசை நீத்தனன்; அரசு உனக்கு கிடைத்திருக்கிறது. உன் அன்னை தன் வரத்தால். நீ அந்தமில் பேரரசு அளித்தீ! நீ அதனை ஏற்று நடத்துவாயாக!" என்றார்.

வசிஷ்டர் சொல் கேட்ட பரதன் அவல நிலை அடைந்தான். நஞ்சினை நுகர் என்று ஒருவர் சொல்ல நடுங்கியவனைப் போல அயர்ந்தனன்; நடுங்கினன்; நா தடுமாறி நாட்டமும் இருங்கினன்; உணர்வு கைதர, தன் மனக்கருத்தைச் சொல்லுவான்.

இத்தனை நிகழ்வையும் பார்த்த ஊர்மிளா மனம் பெரும் மௌனத்தால் அமைதி காத்தது.

துக்கம் வந்தவுடன் அறிவிழந்து புலம்புதல் மகளிர் இயல்பு. ஆனால் ஊர்மிளா புலம்பவில்லை; அழவில்லை. ஆழ்மனதில் உணர்வுகள் மேல் எழும்பாமல் பார்த்துக் கொள்ளும் ஆளுமை உடையவளாய் இருந்தாள். பாரதியின் "பெட்டைப் புலம்பல் பிறர்க்குத் துணையாமோ?" இந்த வரிகள் தான் ஞாபகத்திற்கு வந்தன.

பரதனின் மனக்கருத்தை அறிந்தவள் போல் தான் சொல்ல ஆரம்பித்தாள்.

"மூத்தவன் இருக்க இளையவன் அரசு ஏற்பது தர்மம் தானா?. இதனை உன் அன்னை வரத்தால் பெற்றிருக்கிறாள் என்றால் என் தாய் கூறியதில் தவறில்லையா?" என்பான் பரதன், தன் முதல் கேள்வியாக என்று நினைத்தாள்.

"ஆம்! என் தாய் கூறியதில் என்ன தவறு என்றா கேட்கிறீர்கள்? அறம் ஓங்கிய காலம் கிரேதாயுகம். உலக வழக்கில் வயது முதிர்ந்த உடன்பிறந்தவர்கள் இருக்க அரசினை ஏற்றவர்கள் உளரெனில் காட்டுவீர்களாக?" என்றான்.

"அதுவே நல்நெறி என்று எண்ணினும், இவ்வரசைச் சுமந்து, இம் மண்ணில் வாழ்கிலேன்.



அன்னவன் தன்னைக் கொணர்ந்து மாமுடி சூட்டி வைக்க தொல்நெறி முறைமையின் மரபின் வழிப்படி அணிவிக்கக் காணுங்கள்!".

"ராமனைக் காட்டிலிருந்து அழைத்து வந்து முடிச்சூட்டல் இல்லாதாயின் நெறிதனைக் கூறி ஒன்று இனி உரைத்திடின் என் உயிரை நீக்குவேன்!" என்றான் பரதன். இதனைச் சொன்ன போது ஊர்மிளை மட்டுமல்ல சபையே எழுந்து அவனைப் பாராட்டியது.

இதுதான் நடக்கும் என நம் உள்ளுணர்வு சொல்வது போலவே நடக்கிறது என்பது நமக்கு மகிழ்வு அளித்தாலும், நம் உள்ளுணர்வில் நமக்குத் தூக்கம் என்றும், சீதைக்கு வனவாசம் என்றும் சொல்கிறதே! ராமனின் மறுப்பும் நம் உள்ளத்தின் உள்ளுணர்வு தானே! என்றது ஊர்மிளையின் மனம்.

உடனே வசிஷ்ட முனி பரதனைப் பார்த்து "நற்குணங்களின் பிறப்பிடமான தசரதன் உயிரோடு இருக்கும்போது ராமன் மகுடத்தை ஏற்றான். ஏந்தல் நீ! பெருமை வாய்ந்த பரதனே! பெருமையின் உயர்ந்த பரதனே! அரச செல்வத்தை, வான் தொடர் திருவினை மறுத்தீ! மன்கிளர் தோன்றல்களில் உன்னைப் போல் தோன்றியவர் யார் உளர் மண்ணில்!" என்றார்.

மன்னனின் ஆணைக்கு உட்பட்ட ராமன், அரசு ஏற்றதையும் மன்னர் இல்லாத போதும் அதே ஆணையாலும் அரசேற்க உடன்படாத பரதன் உண்மையிலேயே உயர்ந்தவன்! உன்னதமானவன் என்று நினைத்தாள் ஊர்மிளா.

உடனே அவையோர்கள் "ஏழினோடு ஏழ் எனும் உலகம் எஞ்சிடினும் உன் புகழ் வாழ்க! நீயும் வாழிய!" என்று வாழ்த்தினர்.

நேற்று வரை எப்படி இருந்த நிகழ்வு! எத்தனை கேள்விகளால் சூழப்பட்டிருந்தன? அரசனின் வரத்தால் வனமேகிய ராமன், ஆனால் அதன் பின்வரும் அரச நெறிகளுக்கு யாரே தீர்வு காண்பர். ராமண்ணா யோசனை இலாது தந்தையின் சொல் மதிக்க வேண்டும் என்ற ஒரே தர்மத்தை மெய்ப்பிப்பதிலும், அதனால் புகழ் உண்டாயிற்று என்றும் அவரே சொல்லவும் செய்தாரே! ஆனால் அவருடைய தம்பிகள் அனைவரும் வெவ்வேறு எண்ணங்கள் கொண்டிருந்தாலும், தமையனுக்குக் கட்டுப்பட்டு, ஒன்று போல ராமனைச் சுற்றி சுற்றி அவருடைய நன்மையையே கருதி இருந்தனர் என்பது தெள்ளத் தெளிவாகப் புரிந்தது ஊர்மிளைக்கு.

ராமனுடன் சென்ற சீதையும், தன்னிலை மறந்து, பிறந்த வீடு சென்ற தங்கைகள் பற்றிய இத்தனை வாஞ்சை இருக்கவில்லை என்று எண்ணியவள், ஏன் தனக்கு கூடச் சீதை தனித்துப் போகிறாளே, நானும் அவளுடன் அவளுக்குத் துணையாய்ப் போவேன் என்று திடமாய்ச் சொல்ல முடியாத அன்னையின் சொற்களுக்கு ஒத்த மாதிரி தானே யோசித்தோம்.

பரதன் பெருமைக்குரியவன். பரதன் இயற்கையாகவே நற்பண்புகள் அமையப் பெற்றவன். ஆதலால் அன்னையால் ஏற்பட்ட பழிக்கு எங்ஙனம் அப்பழி பாவத்தைத் துடைப்பது என்று தடுமாறாமல் தனக்கு ஏற்பட்ட அவமானங்களைக் கூடச் சகித்துக் கொண்டு, தன் இயல்பான குணத்தால் பெரும் புகழுக்குக் காரணமாகினான் என்ற பாராட்டு அவையோரால் கொடுக்கப் பட்டது, கருதப் பட்டது.

அயோத்தியின் அரசன் ராமனே என்பதில் மாறாத கருத்தினைக் கொண்ட பரதன், "அரசனை அழைக்கச் செல்லும் அரசு முறைப்படி முரசறிவித்து, சேனைகளை வரும்படி அழைத்து விரைவில் எழுக!" எனத் தம்பியிடம் கூறிச் சென்றான்.

பரதனின் அறிவிப்பு கேட்ட ஊர்மிளைக்கு மிக்க மகிழ்ச்சியாய் இருந்தது. தன்னைக் கூப்பிடாமல் போக மாட்டார்கள் என்ற திடச் சிந்தனை வந்தது.

பரதன் உணர்ச்சிப் பிழம்பு அல்ல. ராமனை விடத் திடமாக, உறுதியாக, நேர்மையாக, பகுத்தறியும் இரக்க குணம் இருப்பதைக் கண்டாள். தந்தையின் நினைவு வந்தது அவளுக்கு. ஆம் அவரைப் போலவே இவரும் விவேகர். பிரச்சனைகளைக் கையாளும்போது, கலங்கி, மயங்கி ஆனால் உடன் தெளிவதுதான் அரசன். ஆதலால் எதுவுமே நடக்காது போல் அன்றலர்ந்த தாமரையாய் இராமன் வனம் ஏகினான்; அதற்குச் சற்று முன்னர் பட்டாபிஷேகம் என்று மகுடம் சூட்டிக் கொள்ளவும் தயார் ஆனான். ஆனால் எதுவுமே நடக்காதது போல், தான் அந்த வாழ்க்கையில் இல்லை என்பது போல வாழ்ந்த ராமனை விடப் பரதனின் மேன்மை சிறப்புற்று இருப்பதைக் கண்டாள்.

எல்லாமே நல்லபடியாக முடிந்தால் நலம் தான். ஆனாலும் அந்த முனிவர் சொன்ன வார்த்தைகள் மெய்யாவதை விரும்பவில்லை என்றாலும், நடப்பது நடந்தே தீரும் என்பதை உணர்ந்தவள் தானே.

காட்டிற்குச் செல்ல தனக்கு அழைப்பு உள்ளதா? அன்பரைச் சந்திப்போமா? முடிவு மாறுபடுமா? பரதனின் விருப்பத்திற்கு ராமன் எடுத்த முடிவு என்ன? பரதனை நம் அன்பர் சரியாக அவனின் இயல்பை அறிவாரா?

இத்துடன் "ஐவரானோம்" என்ற குகன் ஒருவன் இருக்கிறானே! அவனுக்குத் தெரியுமா? பரதனின் அரசுரிமை ஏற்காதது பற்றி? ராமன் வனமேகுவதற்குப் பரதனின் அன்னையே காரணம் என்று பரதனை அவமானப்படுத்துவானா? பரத்வாச முனிவர் உள்ளார். அவர் பரதனை என்ன நினைப்பார்? எத்தனை எத்தனை கேள்விகள் மனதில்!

வாழ்க்கையில் பிரச்சனைகள் அனைத்தும் அருகில் இருக்கும் வரைப் பெரிதாய்த் தெரிகிறது. தள்ளிப் போனால் சிறியதாகி விடுகிறது. இப்பொழுது பிரச்சனைகள் வனவாசம், உறக்கம் என் இரண்டு சொற்களுக்கு இடையில் தொங்கிக் கொண்டிருப்பதாகப் பட்டது ஊர்மிளைக்கு.

உண்மையில் இதுதான் நடக்கும் என்பதை அறிந்தவன் காலம் மட்டும்தான். காலத்தின் சிரிப்பைக் கவனிக்க தவறி விடுகிறோம். காலம் சிரிக்கும், அழும் என்ற எண்ணத்தில் நாம் இல்லாததால் காலத்தை ஒரு பொருட்டாக நினைக்கவில்லை. ஆனால், காலம் நம்மை எல்லாம் சிரிக்க வைக்கவும், அழ வைக்கவும் தயாராகத்தான் இருக்கிறது.

- தொடரும்

# தை மாதத்தின் சிறப்புகள்



தை மாதம் மிகவும் குதூகலமான மாதம் சூரிய பகவான் மகர ராசியில் நுழைவதால் இம்மாதம் மகர மாதம் என்றும் சொல்லப்படுகிறது சூரிய பகவான் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி பிரயாணம் செய்யும் உத்திராயண புண்ணிய காலம் இம்மாதத்தில் தொடங்குகிறது. இது தேவர்களின் பகல் பொழுதும் ஆகும் மேலும் விவசாயிகள் ஆடியில் விதைத்த பயிரை இந்த மாதத்தில் தான் அறுவடை செய்வார்கள். எனவே மகிழ்ச்சி மிகுதியால் தெய்வங்களுக்கு விழா எடுத்துக் கொண்டாடவும் வீட்டில் சுப நிகழ்ச்சிகள் பல செய்யவும் இந்த மாதம் உகந்த மாதமாக இருக்கிறது. சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக சங்கராந்தி இந்தியா முழுவதும் கொண்டாடப்படுகிறது.

தை வெள்ளி, செவ்வாய் அம்மன் வழிபாட்டுக்கு மிகவும் உகந்தது. அம்மன் மீது பூஜை செய்து சுலோகங்கள் சொல்ல நம் அறிவானது நன்கு வளரும்.

தைப்பூசம் மிகவும் விசேஷமானது தைப்பூசத்தில் புண்ணிய தீர்த்தங்கள் நீராடினால் நம் அறிவாற்றல் வளரும் என்பது ஐதீகம். முருகனுக்கு அசுரர்களை அழிக்க அன்னை பார்வதி வேல் கொடுத்து இந்த தைப்பூசத் தான் அதனால் இந்த திருநாள் தமிழர்களால் முருகனை துதித்து சிறப்பாக கொண்டாடப்படுகிறது. தை அமாவாசை பித்துருக்களின் உலகம் திறப்பதால் இந்த அம்மாவாசையில் செய்யும் தர்ப்பணம் மிகவும் உயர்ந்தது பித்ருகளின் ஆசியை அளவிட முடியாத அளவு பெற முடிகிறது. தை மாத வளர்பிறையில் வரும் சப்தமியானது ரத சப்தமி அன்று இந்துக்களால் கொண்டாடப்படுகிறது சூரியன் தன்னுடைய வட திசை பயணத்தை அன்று தான் தொடங்குகிறார் அன்று விரதம் மேற்கொண்டால் நினைத்த காரியங்கள் அனைத்திலும் வெற்றி கிட்டும் தை மாத தேய்பிறை ஏகாதசி சபலா ஏகாதசி என்று அழைக்கப்படுகிறது இந்த ஏகாதேசியில் உண்ணாமல் உறங்காமல் விரதம் இருந்தால் செய்த பாவங்களில் இருந்து விடு பெற முடியும் ஒளிமயமான வாழ்க்கை அமையும் வளர்பிறை ஏகாதேசி புத்திரதா ஏகாதேசி சந்தான ஏகாதேசி என்று அழைக்கப்படுகிறது இந்த நாளில் விரதம் இருந்தால் புத்திர பாக்கியம் கிட்டும் பைரவர், வீரபத்திரன் வழிபாடு தை மாதத்தில் வரும் முதல் செவ்வாயில் பைரவர் வழிபாடு செய்தால் அனைத்து நன்மைகளும் கிட்டும் எல்லா செவ்வாயிலுமே வீரபத்திரர் விரதம் இருப்பது நல்லது அப்படி முடியாதவர்கள் தை மாத செவ்வாயில் வீரபத்திர விரதம் இருந்தால் வருடம் முழுவதும் அந்த விரதம் இருந்த பலன்கள் கிடைக்கும்

**சாவித்திரி கௌரி விரதம்**

தை மாதம் இரண்டாம் நாளில் சாவித்திரி கௌரி விரதம் தொடங்கி 9 நாட்கள் இருக்க வேண்டும். இந்த விரதம் சிவபெருமானால் மார்க்கண்டேயருக்கு அருளப்பட்டது. மார்க்கண்டேயர் இதனை தர்மருக்கு போதித்தார். களிமண்ணில் சாவித்திரி தேவி உருவம் செய்து மௌன விரதம் இருந்து 9 முடிகள் போட்ட நோன்பு கயிற்றை கையில் கட்டிக்கொண்டு ஒன்பது நாட்கள் பூஜை செய்து ஒன்பதாம் நாள் 9 சுமங்கலிகளுக்கு முறத்தில் வெற்றிலை பாக்கு பழங்கள் தந்து இந்த விரதத்தை முடிக்க வேண்டும். இந்த விரதம் நீண்ட ஆயுளுடன் சகல செல்வங்கள் புத்தர பாக்கியம் அருளக்கூடியது .

**தன்மானம் பிறந்த மகான்கள்**

தை மாதம் மகம் நட்சத்திரத்தில் சக்கரத்தின் அம்சமாக கருதப்படும் திருமழியிசை ஆழ்வார் பிறந்தார். எம்பார் என்று அழைக்கப்பட்ட கோவிந்த பட்டர் தை புனர்பூசத்தில் பிறந்தார்.

**கோவில் உற்சவங்கள்**

காஞ்சி காமாட்சி அம்மன் கோவிலில் கணு உற்சவம் சிறப்பாக நடைபெறும். மதுரை மீனாட்சி அம்மன் கோவில் பழனி சிதம்பரம் கருப்பூர் திருவானைக்கா வைத்தீஸ்வரன் கோவில் ஸ்ரீமுஷ்ணம் போன்ற பல கோவில்களில் தை மாத உற்சவங்கள் களைக்கட்டும். சபரிமலையில் மகரஜோதி உற்சவம் நடைபெறும்.

சூரிய பகவானுக்குரிய தலங்களான தலைஞாயிறு, திருப்பரிதிநியமம், திருமங்கலகுடி, திருச்சிறுகுடி, ஞாயிறு, அகிய தலங்களில் இம்மாதத்தில் சென்று வழிபடுவது சிறப்பு.

தை பிறந்தால் வழி பிறக்கும். மார்கழியில் நோன்பிருந்து பெற்ற பலன் காரணமாக தை மாதத்தில் தொட்டதெல்லாம் துலங்கும். எனவே இம்மாதத்தில் வரும் அனைத்து பண்டிகை பூஜைகளை சிறப்பாக கொண்டாடி மங்கள நிகழ்ச்சிகளை நடத்தி அனைவரும் மகிழ்வோமாக



வனஜா நாகராஜன்
யு.எஸ்.ஏ

# தினம் ஒரு தலைவர்கள் தாரா ராணி ஸ்ரீவஸ்தவா வரலாறு

தாரா ராணி ஸ்ரீவஸ்தவா ஒரு இந்திய சுதந்திரப் போராட்ட வீரர் , மேலும் மகாத்மா காந்தியின் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் ஒரு பகுதியாக இருந்தார் . அவரும் அவரது கணவர் புலேந்து பாபுவும் பீகாரின் சரண் மாவட்டத்தில் வசித்து வந்தனர் . 1942 ஆம் ஆண்டில், அவரும் அவரது கணவரும் சிவானில் காவல் நிலையத்தை நோக்கி ஒரு பேரணியை வழிநடத்திச் சென்றபோது, அவர் போலீசாரால் சுடப்பட்டார். இருப்பினும், அவர் அணிவகுப்பைத் தொடர்ந்தார், பின்னர் திரும்பி வந்தபோது அவர் இறந்துவிட்டதைக் கண்டார். ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு நாட்டின் சுதந்திரம் வரை அவர் சுதந்திரப் போராட்டத்தில் ஒரு பகுதியாக இருந்தார்.

தனிப்பட்ட வாழ்க்கை மற்றும் சுதந்திரப் போராட்டம்

ஸ்ரீவஸ்தவா பாட்னா நகருக்கு அருகிலுள்ள சரண் என்ற இடத்தில் பிறந்தார் . அவர் சிறு வயதிலேயே புலேந்து பாபுவை மணந்தார். பாலின சமத்துவமின்மை அதிகரிக்க வழிவகுத்திருக்கக்கூடிய பொதுத் திட்டங்களைத் தொடர்ந்து, தாரா ராணி தனது கிராமத்திலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் உள்ள பெண்களை பிரிட்டிஷ் ராஜ்ஜியத்திற்கு எதிரான போராட்டங்களில் சேரத் தூண்டினார் .

ஆகஸ்ட் 12, 1942 அன்று, மகாத்மா காந்தியின் அழைப்பின் பேரில், அவரும் அவரது கணவரும் சிவான் காவல் நிலையத்திற்கு முன்னால் இந்தியக் கொடியை ஏற்றுவதற்காக ஒரு பேரணியை ஏற்பாடு செய்தனர் , இது "ஒரு பெரிய எதிர்ப்பாக" பார்க்கப்படும். காவல்துறையினர் கொடியை ஏற்றுவதைத் தடுத்ததால், போராட்டக்காரர்கள் மீது லத்தி தாக்கினர் . அவர்களால் கட்டுப்பாட்டைப் பெற முடியாதபோது, காவல்துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தவர்களில் புலேந்து பாபுவும் ஒருவர். இருப்பினும், பாபுவின் காயங்களை தனது சேலையிலிருந்து கிழிந்த துணியால் கட்டிய பிறகு, தாரா ராணி காவல் நிலையத்திற்கு தனது அணிவகுப்பைத் தொடர்ந்தார், அங்கு அவர் கொடியை ஏற்ற முயன்றார்; திரும்பி வந்தபோது, தனது கணவர் காயங்களால் இறந்துவிட்டார் என்பதைக் கண்டுபிடித்தார். ஆகஸ்ட் 15, 1942 அன்று, தனது கணவரின் நாட்டுக்கான தியாகத்தை நினைவுகூரும் வகையில் சாப்ராவில் ஒரு பிரார்த்தனைக் கூட்டம் நடைபெற்றது . ஆகஸ்ட் 15, 1947 அன்று இந்தியப் பிரிவினை வரை அவர் சுதந்திரப் போராட்டத்தில் தொடர்ந்து பங்கேற்றார்.

"நாம் அபாலா என்று அழைக்கும் பெண் சபாலாவாக மாறும்போது, ஆதரவற்றவர்கள் அனைவரும் சக்தி வாய்ந்தவர்களாக மாறுவார்கள்." மகாத்மா காந்தி 1936 டிசம்பரில் அகில இந்திய மகளிர் மாநாட்டில் உரையாற்றும்போது இவ்வாறு கூறினார். இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பெண்களின் பங்களிப்பு குறித்த மகாத்மா காந்தியின் நம்பிக்கையை இந்த மேற்கோள் உறுதிப்படுத்துகிறது. பெண்கள் மட்டும் இல்லாவிட்டால் - அவர்களின் தியாகங்கள் மற்றும் ஞானம் பெற்றிருக்காது, இந்தியாவின் இரட்சிப்பு அடையப்பட்டிருக்காது. இந்தியப் பெண்கள் எடுக்கும் பொறுப்பு எப்போதும் சுதந்திரப் போராட்டத்தில் மைய இடத்தைப் பிடிக்கும். பெண்களின் பங்கேற்பு ஒரு வகையான நடவடிக்கைக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படவில்லை, எடுத்துக்காட்டாக, காட்டுமிராண்டித்தனமற்ற சத்தியாக்கிரக இயக்கம். சமூகத்தின் அனைத்து அடுக்குகளிலிருந்தும் தங்கள் தாயகத்தின் சுதந்திரத்தைப் பெறுவதற்காக ஏராளமான பெண்கள் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்தனர். ராணி லட்சுமி பாய், சரோஜினி நாயுடு அல்லது அன்னி பெசன்ட் போன்ற சில அடிக்கடி மீண்டும் மீண்டும் கூறப்படும் பெயர்களைத் தவிர, இந்தியாவின் சிறிய பகுதிகள் மற்றும் உள்நாட்டிலிருந்து பல பெண்களின் சுதந்திரப் போராட்டத்தின் பங்களிப்பு பல ஆண்டுகளாக குறைவான கவனத்தைப் பெற்றுள்ளது. இந்தியாவின் மூலை முடுக்குகளிலும் தேசபக்தியைத் தூண்டுவதில் உடனடி பங்காற்றிய இந்த துணிச்சலான பெண் தலைவர்களின் குரல்கள் நமது வரலாற்றுப் புத்தகங்களில் இடம் பெறவில்லை. நமது சுதந்திர இயக்கத்தின் குறிப்பிடத்தக்க தூணாக இருந்த இந்த இந்தியப் பெண் துணிச்சலான இதயங்களை நாம் நினைவில் வைத்துக் கொண்டு, அவர்களின் முகங்களை நிழல்களிலிருந்து வெளியே கொண்டு வர வேண்டிய நேரம் இது.



அங்கீகரிக்கப்பட்ட பெரும்பாலான பெண் சுதந்திரப் போராளிகள் உயரடுக்கு அல்லது நடுத்தர வர்க்க பின்னணியைச் சேர்ந்தவர்கள் என்றாலும், அவர்களின் எண்ணிக்கை ஒரு சிலரே. பிரிட்டிஷ் ராஜ்ஜியத்தை எதிர்த்துப் போராடிய, தன்னலமற்ற தியாகங்களைச் செய்த, பழமைவாத குடும்பங்கள் மற்றும் முறையான கல்வி இல்லாத பல சாதாரண முகங்கள் இருந்தன. புறக்கணிக்கப்பட்ட ஒரு மறக்கப்பட்ட பெண்மணி திருமதி தாரா ராணி ஸ்ரீவஸ்தவா. பீகாரில் சரண் மாவட்டத்தில் ஒரு எளிய குடும்பத்தில் பிறந்த அவர், இளம் வயதிலிருந்தே சுதந்திரப் போராட்டத்தில் ஆர்வமாக இருந்தார். 13 வயதில் சுதந்திரப் போராட்ட வீரர் புலேந்து பாபுவை மணந்தார், ஆனால் திருமணம் அவரது தேசபக்தி உணர்வுகளைத் தடுக்கவில்லை. அவரது கணவர் மகாத்மா காந்தியின் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் தீவிரமாக பங்கேற்றார். திருமணத்திற்குப் பிறகு ஒவ்வொரு நாளும் தாரா ராணியின் தேசபக்தி உணர்வு மேலும் மேலும் அதிகரித்தது, மேலும் அவர் வசித்து வந்த பாரம்பரிய சமூகத்தைப் பற்றி அவர் கவலைப்படவில்லை. பெண்கள் வீட்டை விட்டு வெளியே வராத ஒரு காலத்தில், காந்திஜியின் சுதந்திரப் போராட்டத்தைப் பற்றி அவர்களுக்குக் கற்பிக்க ஒத்த எண்ணம் கொண்ட பெண்களை அவர் ஒன்று திரட்டினார். சுற்றியுள்ள கிராமங்களில் இருந்து பெண்களை அவர் ஊக்குவித்து, பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராகப் போராட அவர்களைத் தூண்டினார். கிராமப்புறப் பின்னணியைச் சேர்ந்த பெண்களுக்கு ஒரு உந்துதலாக தாரா ராணி உருவெடுத்து, வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் பங்கேற்க அவர்களைத் தூண்டினார்.

அவரது முன்மாதிரியான துணிச்சலும் அர்ப்பணிப்புள்ள தேசபக்தியும் ஒரு சம்பவத்தால் சிறப்பிக்கப்பட்டன, இது அவரது சட்டத்தை சாதாரண பெண்களிடமிருந்து ஒரு சுதந்திரப் போராட்ட வீரராக உயர்த்தியது, அதற்கு உரிய பெருமை அளிக்கப்பட வேண்டும். ஆகஸ்ட் 12, 1942 அன்று, மகாத்மா காந்தி சிவானின் காவல் நிலையத்தின் கூரையில் தேசியக் கொடியை ஏற்றுமாறு அழைப்பு விடுத்தார். புலேந்து பாபு தேசியக் கொடியை ஏற்றுவதற்காக ஆண்களும் பெண்களும் ஒரு பெரிய கூட்டத்தைக் கூட்டினார், அவருடன் தோளோடு தோள் நின்று கொண்டிருந்தார், அவரது மனைவி தாரா ராணி ஸ்ரீவஸ்தவாவும் அவருடன் தோளோடு தோள் நின்று கொண்டிருந்தனர். திருமணத்திற்குப் பிறகு சிறிது நேரத்திலேயே தம்பதியினர் பிரிட்டிஷ் நிர்வாகத்திற்கு எதிராக கூட்டத்தின் முன் பாறைகள் போல நின்று தங்கள் தாய்நாட்டின் மீதான அன்பால் நிரப்பப்பட்டனர். காவல் நிலையத்தின் கூரையில் தேசியக் கொடியை ஏற்றி, ஆங்கிலேயர்களுக்கு எதிராக ஒருங்கிணைந்த இந்தியாவின் சக்தியை நிலைநாட்டுவதே அவர்களின் நோக்கமாக இருந்தது.

பிரிட்டிஷ் ராஜ்ஜிய எதிர்ப்பு முழக்கங்களை எழுப்பி, தாரா ராணியின் கைகளில் மூவர்ணக் கொடியையும், ஆண்கள் மற்றும் பெண்கள் அடங்கிய ஒரு பெரிய கூட்டத்தையும் ஏந்தி, சரண் காவல் நிலையத்தை நோக்கி அவர்கள் சென்றனர். ஆர்ப்பாட்டத்தைக் கட்டுப்படுத்த காவல்துறையினர் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்கள் மீது தடியடி நடத்தினர். ஆனால் நிர்வாகத்தின் மிருகத்தனத்தால் போராட்டம் வேகம் பெற்றது, போராட்டக்காரர்கள் கட்டுப்படுத்த முடியாதபோது, காவல்துறையினர் அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர். புலேந்து பாபு விரைவில் காவல்துறையினரின் குண்டுகளுக்கு பலியானார், ஆனால் தாரா ராணி அஞ்சா நெஞ்சத்துடன் இருந்தார். அவர் நினைத்துப் பார்க்க முடியாததைச் செய்தார், தனது கணவரின் காயத்திற்கு கட்டு போட்டது மட்டுமல்லாமல், தேசியக் கொடியை கையில் ஏந்தியபடி காவல் நிலையத்தை நோக்கி அணிவகுத்துச் சென்றார். சுதந்திரப் போராட்டத்திற்கான அவரது அர்ப்பணிப்பு அந்த அளவுக்கு இருந்தது, அவர் தனது நாட்டின் சுதந்திரத்தை தனது வாழ்க்கையின் ஒரே நோக்கமாகக் கொண்டார்.

அவர் திரும்பி வந்த நேரத்தில், அவரது கணவர் காவல்துறையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு ஆளாகி இறந்துவிட்டார். இளம் வயதிலேயே புதிதாகத் திருமணமான பெண்மணியாகவும், பழமைவாத சமூகத்தைச் சேர்ந்தவராகவும் இருந்ததால், திருமண விதிகளை கடைபிடித்து, தனது கணவரைப் பாதுகாக்க இறந்திருக்க வேண்டும். அதற்கு பதிலாக, தேசபக்தியின் உணர்வு அவளது நரம்புகளில் மிகவும் ஊசலாடியதால், அவள் திருமணத்தை விட தனது நாட்டின் சுதந்திரத்தைத் தேர்ந்தெடுத்தாள்.

தனது கணவர் இறந்ததைக் கண்டதும் தாரா ராணி அமைதியாக இருந்தார். 1942 ஆகஸ்ட் 15 ஆம் தேதி சாப்ராவில் (பீகார்) தனது கணவரின் நினைவாக ஒரு பிரார்த்தனைக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. தனது கணவர் நாட்டின் மகத்தான நோக்கத்திற்காக தனது உயிரைத் தியாகம் செய்ததை அவள் புரிந்துகொண்டாள். அவளுடைய காலத்தில் ஒரு பெண்ணிடமிருந்து பலர் எதிர்பார்த்தது போல் அவளுடைய தேசபக்தி அவளுடைய கணவருடன் இறக்கவில்லை.

# தமிழ் சினிமா 2025 'பயாஸ்கோப்'பும், 'சினிமா பண்டி'யும்



ஜனவரி 2-ஆம் தேதி வெளியான இந்து டாக்கீஸ் பக்கத்தில் 'தாக்கம் தந்த 10 படங்கள்' என்கிற தலைப்பில், 2025-இன் குறிப்பிடத்தக்க மிடில் சினிமாக்களைக் கவனப்படுத்தியிருந்தோம். அந்தப் பட்டியலின் தொடர்ச்சியாக, 2025-இல் மேலும் பல ரசனையான முயற்சிகளை இந்து டாக்கீஸ் கவனப்படுத்த விரும்புகிறது. உள்ளடக்கம், உயர்வான காட்சியாக்கம், நல்ல நடிப்பு, தொழில்நுட்ப அம்சங்களோடு தூய பொழுதுபோக்குத் தன்மையிலும் சிறந்து விளங்கி ரசிகர்களால் அடையாளம் காணப்பட்ட மேலும் பல படங்களில் முதலில் 'பயாஸ்கோப்' படம் குறித்துப் பற்றிப் பார்க்கலாம்.

அரிதான முயற்சிகளைப் பிரபலமான படைப்பாளிகள் செய்யும்போது கிடைக்கும் அங்கீகாரம், புதியவர்கள் செய்யும்போது கிடைக்காமல்போவது தமிழ் சினிமாவின் சாபங்களில் ஒன்று. அப்படித்தான் சங்ககிரி ராஜ்குமார் இயக்கிய 'பயாஸ்கோப்' என்கிற அசலான தமிழ் சினிமா உரிய கவனம்பெறாமல் போனது.

கடந்த 2011-இல் மூடநம்பிக்கைக்கு, குறிப்பாக நரபலிக்கு எதிராகவும் கிராமியக் கலைஞர்கள் நடத்தப்படும் விதத்தை எடுத்துக்காட்டியும் 'வெங்காயம்' படத்தை எடுத்திருந்தார் அந்த ஆண்டில் அறிமுக இயக்குநர்களில் ஒருவரான சங்ககிரி ராஜ்குமார். அவர் தற்போது 'ஒன்' என்கிற உலகச் சாதனை திரைப்படம் ஒன்றை அதன் அத்தனைப் படைப்பாக்கத் துறைகளையும் தனியொரு கலைஞனாகப் பங்களித்து உருவாக்கியிருக்கிறார். அப்படம் இன்னும் வெளியாகவில்லை.

அதற்கிடையில் தான், அவரது எழுத்து, இயக்கத்துடன் அவர் நாயகனாகவும் நடித்து, துணைக் கதாபாத்திரங்களில் முழுவதும் கிராமத்து மனிதர்களை மட்டுமே பயன்படுத்தி உருவான படம்தான் 'பயாஸ்கோப்'. 2025-இன் தொடக்கத்திலேயே படம் வெளியானது. சந்தேகமில்லாமல், 'பயாஸ்கோப்' தமிழின் அட்டகாசமான சுயாதீன சினிமா. அதுவும் கிராமத்து மனிதர்கள் இணைந்து சினிமா எடுப்பது பற்றிய ஒரு சுயாதீன சினிமா எனும்போது நகைச்சுவை களம் எவ்வளவு ரகளையாக இருக்கும் என்பதை வாசித்து அறியமுடியாது. அந்தப் படத்தைக் காண்பதன் மூலம்தான் உணரமுடியும்.

இந்தப் படம் 2021இல் வெளியான 'சினிமா பண்டி' என்கிற தெலுங்கு சுயாதீன நகைச்சுவை சினிமாவின் கதைக்களத்தை ஒத்திருந்தாலும் சங்ககிரி ராஜ்குமார், கிராம மக்கள் இணைந்து ஒரு திரைப்படம் எடுக்கும் கதையின் வழியாக 'ஜாதகம்' என்கிற ஜோதிட நம்பிக்கைக்கு எதிராக இப்படத்தில் சாட்டை சுழற்றிக் காட்டியிருந்தார்

'சினிமா பண்டி'யுடன் பயஸ்கோப்பை ஒப்பிட்டால், இரண்டில் எந்தப் படம் உள்ளடக்க ரீதியாகவும் ஒரு திரைப்படமாக உருப்பெற்ற வகையிலும் உயர்ந்த இடத்தில் இருக்கிறது என்றால் அது 'பயாஸ்கோப்'தான்.

கிராமிய ஆந்திராவில் வீரபாபு ஒரு ஆட்டோ ஓட்டுநர். அவர் தற்செயலாக ஒரு விலையுயர்ந்த டிஜிட்டல் கேமராவைக் கண்டெடுக்கிறார். முதலில் அதை விற்றுவிடத் தீர்மானித்தவர், பிறகு அந்தக் கேமராவை வைத்துத் திரைப்படம் எடுக்க முடிவு செய்கிறார். உள்ளூர் திருமண ஒளிப்படக்காரரான கணபதியைக் கேமராமேன் ஆக்குகிறார். சலூன் கடை நடத்தும் இளைஞரான மரிடேஷ் பாபுவை கதாநாயகனாகவும் காய்கறி வியாபாரம் செய்யும் மங்காவை கதாநாயகியாகவும் நடிக்க வைக்கிறார். ஷாட் வித்தியாசம் கூட தெரியாத வீரபாபு தான் விரும்பிய படத்தை எடுத்தாரா? சக கிராமவாசிகள் அவருக்கு எப்படியெல்லாம் உதவினார்கள் என எளியவர்கள் சினிமா எடுக்கும் கதையைக் கிராமத்து மனிதர்களின் வெள்ளந்தியான நகைச்சுவையுடன் சித்தரித்தது.

'சினிமா பண்டி' முற்றிலும் ஒரு கற்பனையான கதைக் களம். ஆனால், சங்ககிரி ராஜ்குமார் எழுதி, இயக்கி, நடித்துள்ள 'பயாஸ்கோப்' ரத்தமும் சதையுமான கிராமத்து மனிதர்களின் வெள்ளந்தித்தனத்தையும் அவர்களுடைய கற்றுக்கொள்ளும் ஆர்வம் ஆகியவற்றைச் சித்தரிப்பதன் வழியாக, தொழில்முறை சினிமா மேக்கிங்கையே பகடி செய்திருந்தது. தமிழ் சினிமா பேசத் தயங்கும் பொருளை, சமரசமில்லாமலும் ஏற்றுக்கொள்ளும் வகையிலும் விமர்சனம் செய்திருந்த வகையிலும் காத்திரமான படைப்பு. சினிமாவைப் பற்றி வெளிவந்த சினிமாக்களுக்கெல்லாம் இப்படம் கிரீடம் என்றால் அது மிகையில்லை.

ஜோதிடத்தால் விளைந்த தனது சொந்த இழப்பை உலகத்துக்குச் சொல்ல வேண்டும் என்கிற தவிப்புடன், அதையே கதையின் உள்ளடக்கமாகக் கொண்டு சுயாதீனப் படமெடுக்கக் கிளம்புகிறார் ஒரு கிராமத்துப் பட்டதாரி இளைஞர்.உள்ளூர் ஜோதிடரின் பொல்லாப்புடன் 'வெங்காயம்' என்கிற அந்தப் படத்தை எடுக்கும் செயல்முறையில், படக் கருவிகள் தயாரிப்பு, அவற்றை இயக்கவும் பயன்படுத்தவுமான தொழில் நுட்பக் கலைஞர்களாக, தன்னுடைய உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் பயிற்சியளித்துப் பயன்படுத்துவது, கிராமத்து மக்களையே நடிக்க வைப்பது, படத்தை முடிக்க முடியாமல் பணத்துக்கு அல்லாடுவது, அதன்பிறகு சென்னைக்கு வந்து அதைப் பார்வையாளர்களிடம் கொண்டு செல்வதற்கான சந்தைப் படுத்துதலில் எதிர்கொள்ளும் பாடுகள், இறுதியாக அந்தப் படைப்பை உருவாக்கியவருக்கு வந்து சேரும் உண்மையான 'லாபம்' என்பதுவரை ஒரு திரைப்படம் உருவாகும் பின்னணியில் இருக்கும் போராட்டத்தையும் வலிகளையும் சூழ்நிலை உருவாக்கும் தூய நகைச்சுவையில் நனைத்துக் கொடுத்திருந்தார்.சுயாதீன பட முயற்சியின் பாதையில் நிறைந்திருக்கும் வலி என்கிற உணர்வை, நகைச்சுவையைக் கடந்து பார்வையாளர்களை உணர வைப்பதில் இயக்குநர் சங்கரி ராஜ்குமாரின் ஆளுமை படம் முழுவதும் பரவிக்கிடந்தது. ஓடிடியில் இப்போது பார்த்தாலும் சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்கும் படமாக 'பயாஸ்கோப்' 2025இன் குறிப்பிடத்தக்க படங்களில் ஒன்று.



நடிகை ஆஷிகா ரங்கநாதன் தெலுங்கில் இளசுகளை கவர்ந்த முக்கிய நடிகையாக வளர்ந்து வருகிறார். தற்போது BMW என்ற படத்தில் ஹீரோயினாக அவர் நடித்து இருக்கிறார்.

57 வயது நடிகர் ரவி தேஜாவுக்கு ஜோடியாக இதில் ஆஷிகா நடித்துள்ளார். அந்த படம் நாளை ஜனவரி 13ம் தேதி ரிலீஸ் ஆகிறது.

தற்போது பட ப்ரோமோஷன் நிகழ்ச்க்கு ஆஷிகா அழகாக தாவணியில் வந்து இருக்கும் புகைப்படங்கள் ரசிகர்களை கவர்ந்து வருகிறது.



சின்னத்திரையின் மூலம் மக்கள் மத்தியில் பிரபலமானவர்களில் ஒருவர் நடிகை ஜனனி அசோக் குமார். இவர் மௌனராகம், நாம் இருவர் நமக்கு இருவர், செம்பருத்தி போன்ற சீரியல்களில் நடித்துள்ளார். மேலும் தற்போது ஹாட்ஸ்டாரில் ஒளிபரப்பாகி வரும் போலீஸ் போலீஸ் வெப் சீரிஸில் நடித்து வருகிறார்.

ரசிகர்களின் மனம் கவர்ந்த சின்னத்திரை நடிகையாக உள்ள ஜனனியின் லேட்டஸ்ட் புகைப்படங்கள் வெளியாகியுள்ளன.

# ஹாட்ஸ்பாட் 2: பொங்கல் விருந்தாக வெளியீடு!




ஒரே படத்தில் வெவ்வேறு கதைகள் இடம் பெறக் கூடிய 'ஆந்தாலஜி' வகைப் படங்களில் ஒன்று ஹாட்ஸ்பாட். கடந்த 2024ஆம் ஆண்டு வெளியான இப்படத்தை விக்னேஷ் கார்த்திக் இயக்கியிருந்தார். அதனைத்தொடர்ந்து அதன் இரண்டாவது பாகம் உருவாகி உள்ளது. 'ஹாட்ஸ்பாட் 2' மச் எனப் பெயரிடப்பட்டுள்ள இப்படத்தின் டிரெய்லர் சமீபத்தில் வெளியானது. டிரெய்லரின் படி இரண்டாம் பாகமும், முதல் பாகத்தை போலவே இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இப்படத்தில் நடிகர்கள் பிரியா பவானி சங்கர், தம்பி ராமையா, ரக்ஷன், அஸ்வின் குமார், ஆதித்ய பாஸ்கர், எம்.எஸ்.பாஸ்கர், பவானி ஸ்ரீ, பிரிஜிடா சாகா மற்றும் சஞ்சனா திவாரி ஆகியோர் நடித்துள்ளனர். படத்திற்கு சதீஷ் ரகுநாதன் இசையமைத்துள்ளார். படத்தை நடிகர் விஷ்ணு விஷாலின் தயாரிப்பு நிறுவனமான விஷ்ணு விஷால் ஸ்டுடியோஸ் தயாரித்துள்ளது.

இந்நிலையில் பொங்கலை முன்னிட்டு படக்குழு ஒரு அறிவிப்பை வெளியிட்டுள்ளது. அதன்படி படம் ஜன.23ஆம் தேதி வெளியாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# போதிய தியேட்டர்கள் கிடைக்காததால் கிரௌபதி 2 படக்கின் ரிலீஸ் கேகி ஒக்திவைப்ப




ஜன நாயகன் படம் பொங்கல் விடுமுறையை ஒட்டி வெளியாகதாததால் திரௌபதி 2 படம் பொங்கலுக்கு ரிலீஸ் ஆகும் என அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் திரௌபதி 2 படத்தின் ரிலீஸ் தேதி ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து தயாரிப்பு நிறுவனம் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "திரௌபதி 2 திரைப்படம் சுபாஷ் சந்திர போஸின் பிறந்ததினமான ஜனவரி 23 அன்று வெளியாகிறது. பொங்கல் வெளியீடாக அறிவிக்கப்பட்ட எங்களின் முதல் படைப்பு திரௌபதி 2 திரைப்படம், திரையரங்க உரிமையாளர்களின் வேண்டுகோளை ஏற்று நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ஜனவரி 23ஆம் தேதி வெளியாகும் என படக்குழுவினர் சார்பாக தெரிவித்து கொள்கிறேன்.

எங்களின் இந்த முடிவை பெரியமனதுடன் ஏற்று எப்போதும் போல உங்களின் அன்பையும் ஆதரவையும் தருமாறு ரசிக பெருமக்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். உங்கள் அனைவருக்கும் இனிய பொங்கல் திருநாள் நல்வாழ்த்துக்கள்.

திரௌபதி 2 மிகப் பெரிய உழைப்பு. பலரின் கனவு. சரியான முறையில், அதிக திரையரங்குகளில் உங்களை சேர வேண்டும் என்ற ஒரே நோக்கில் எடுக்கப்பட்ட முடிவு.. 23 ம் தேதி இதே ஆதரவை தர வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். பொங்கல் அன்று வெளியாகும் திரைப்படங்கள் வெற்றி பெற மனமார்ந்த வாழ்த்துக்கள்" என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த அறிக்கையை பகிர்ந்த மோகன் ஜி, "திரௌபதி2 மிகப் பெரிய உழைப்பு.. பலரின் கனவு. சரியான முறையில், அதிக திரையரங்குகளில் உங்களை சேர வேண்டும் என்ற ஒரே நோக்கில் எடுக்கப்பட்ட முடிவு.. 23ம் தேதி இதே ஆதரவை தர வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.. பொங்கல் அன்று வெளியாகும் திரைப்படங்கள் வெற்றி பெற மனமார்ந்த வாழ்த்துக்கள்" என்று பதிவிட்டுள்ளார்.







உடன்குடியில்
ஸ்ரீவேல்முருகன்
டெக்ஸ்டைல்ஸ்

ஜவுளி, நகைக்கடையில்
வேலைக்கு ஆண்கள்,
பெண்கள் தேவை.
தகுதிக்கேற்ப சம்பளம்.

Ph: 81442 27771







ஆட்கள் தேவை

1.Supervisor
with any post graduate degree Age 45 above to 55
2.Security 2 Persons
3.Garderner
செடிகளை பராமரிக்க வேண்டும்

தேவதாஸ் மருத்துவமனை வளாகம்
நித்திரவிளை,
கன்னியாகுமரி மாவட்டம்

Cell : 6382807831








தூத்துக்குடி, திருநெல்வேலி சிப்காட் பகுதியில்
உள்ள பிரபல பன்னாட்டு நிறுவனத்தில்
பணிபுரிய ஆட்கள் தேவை. (ஆண்கள் மட்டும்)

ASST. செக்யூரிட்டி ஆபிஸர்
சம்பளம் : 27500 (Ex.Serviceman)
செக்யூரிட்டி சூப்பர் வைசர்
சம்பளம் : 24506 (Ex.Serviceman)
செக்யூரிட்டி கார்டு
சம்பளம் : 20701 (Civil)

8 மணி நேர வேலை
System work தெரிந்தவர்களுக்கும்,
முன் அனுபவம் உள்ளவர்களுக்கும்
முன்னுரிமை அளிக்கப்படும்

படிப்பு : 10th Pass அதற்குமேல்
வார விடுமுறை உண்டு
வருடாந்திர ஊதிய உயர்வு
ESI / PF / போனஸ் உண்டு
வயது : 25 முதல் 50 வயது வரை
தங்கும் வசதி செய்து தரப்படும்
குறைந்த விலையில் உணவு வசதி
செய்து தரப்படும்

98949 99422
99941 34169
81109 77577











## கா த லா ட் ட ம்

நம் கா த லா ட் ட ம்
தொடங்கியதிலிருந்து நீ
ஆடினால் மட்டும் தான்
எனக்குக்கரகாட்டம்
கோலாட்டம் மயிலாட்டம்
ஒயிலாட்டம் என
எல்லாமே பிடிக்கிறது!

### நினைவு
அந்தப்புறம் இந்தப்புறம் என
எந்தப்பரம் போனாலும்
உன் நினைவு தான் அன்பே!

### சிறப்பு
ஒரு வகையில் இரு வகையில்
அல்ல எல்லா வகையிலும்
ஆகச்சிறந்த கா த லி
எனக்கு நீயே அன்பே!
இதை விட வாழ்க்கையில்
வேறென்ன வரம் வேண்டும்
எனக்கு?!

### என்றும்....
நேற்றும் இன்றும் மட்டுமல்ல
என்றென்றும் என்
மனதில் வாழும் தே வ தை
நீயே அன்பே!

### இ த ய ரா ணி
என் இ த ய ரா ணி யா க
நீயிருந்தாலும்
நீ கொடுத்த
சுதந்திரத்தினால் தான்
நான் அன்றும் இன்றும்
என்றும் நானே ராஜா
நானே மந்திரியாக
இருக்கிறேன்!

### கேள்வி
உன் எந்தக் கவிதையில்
நான் இருக்கிறேன்?
என்ற உன் கேள்விக்கு
நான் என்ன பதில்
சொல்வேன்?
ஏனெனில் என்
எல்லாக் கவிதைகளிலும்
நீ மட்டும் தா(னே)ன்
இருக்கிறாய் அன்பே!

### பிரமிப்பு
நீ எத்தனை அழகாய்
இருக்கிறாய் என்று
பிரமித்தேன்!
அதை விட அழகாய் அல்லவா
உன் கா த லை
வெளிப்படுத்தி இன்னும்
அதிகமாக அல்லவா
பிரமிக்க வைக்கிறாய்?!

### எதிரே....!
என் கவிதைகளிலும் இருந்து
கொண்டு அதே நேரம் என்
எதிரேயும் என்னுடனேயும்
இருக்க உன்னால் மட்டுமே
முடியும் அன்பே!

### பக்தி
சாமி மேல் உனக்கு பக்தி!
உன் மேல் எனக்கு பக்தி!

### ம(மா)து!
எனக்கு மதுவும் நீயே
மாதுவும் நீயே அன்பே!



**முத்து ஆனந்த்** வேலூர்



### பெண்
அன்னம் போலப் பெண்
ஒருத்தி கன்னம் சிவந்திட
மலரானாள்

கொவ்வைக் கனி இதழ்
மழலையிலே கொஞ்சிப்
பேசும் கிளியானாள்

கிளி மொழியாள் இசை
பாடலிலே கீதம் பொழிந்து
குயிலானாள்

குயிலிசைப் பெண் அவள்
ஆடலிலே கோலத் தோகை
மயிலானாள்

மயிலின் ஒயிலுடன் மலர்க்
கொடியாள் மைவிழி காட்டிட
மான் ஆனாள்


மான் போல் மருண்ட பெண்
அவளும் மலர்முகம் ஒளிதரும்
மதியானாள்

மதியைப் பழிக்கும் மங்கை
அவள் மயக்கிடும் மொழியில்
தேன் ஆனாள்

தேன் சுவை இதழ்கள்
சிரித்திடவே தெய்வக்
கவிதை வடிவானாள்



**மீனாட்சி பாண்டியன்**
திருவண்ணாமலை



### இருந்துவிட்டுப் போகட்டும்


நுண்மைகூட
வெளிச்சத்திற்கு
அகப்பட்டு விடுமெனினும்
சூட்சமம் இருளுக்கு
மட்டுமே அகப்படும். சட்டென
இருளைக் கடந்துவிட
நினைக்கும் யார்தான்
வெளிச்சத்திலேயே
நிரந்தரமாய்
நின்றிருக்க முடியும்?

தலைதூக்கிப் பார்க்கும்
நட்சத்திரமாகட்டும்
கைதூக்கிச் செல்லும்
விளக்காகட்டும் எப்போதும்
பயணிக்க வேண்டிய
வழியை மட்டும் கோடிட்டுக்
காட்டுவது இருளின்
பக்கங்களில்தான்.

களைத்துப்போன கண்கள்
மட்டுமின்றி இளைப்பாற
நினைக்கும் மனதும்
இருளின் மடியைத்தானே
தேடுகின்றன.

நிழல் தொடரா நம் முழு
நிஜத்தின் புகலிடம் அது.
இருளுக்குத்தானே
இருக்கிறது கடலுக்கும்
கரைக்கும்
ஒரேநிறம் பூசிவிடுகின்ற
குழந்தைமை.

இருள் என்பது மிகக்குறைந்த
வெளிச்சமென்று
ஏன்
சொல்லவேண்டும்...
இருந்துவிட்டுப்
போகட்டும்
காலாதீதமும் அது
தனித்த இருளாகவே.



**கீர்த்தி**

## தேசப்பணியே தெய்வப்பணி!

தேசத்தை நேசிப்போம்
தேர்ந்துநாளும் யோசிப்போம்
பாரதத்தைக்கைக்கொள்வோம்
பண்பினையே
காத்திடுவோம்!

தேசத்தில் பற்றுவைப்போம்
தெளிந்துநாளும்
கற்றிடுவோம் பூசித்து
நின்றிடுவோம் பொலிவாகச்
சென்றிடுவோம்!

தேசத்தின் தொண்டேதான்
தெய்வத்தின் பணியாகும்
ஆசையாய்ச் செய்வதுவே
அரும்பணியாய்ஆகுமன்றோ!

தேசந்தான் தெய்வமென
தாய்மையாக
எண்ணிடுவோம்
வாசமுள்ள மலராக
வணங்கிடுவோம் தேசத்தை!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.



## புரட்சி செய்யும் உன் அழகு

நெத்தியிலே குங்கும பொட்டு
நேர்த்தியான இருக்குதடி...

முகத்திலே மஞ்சள் பூச்சு
மங்களகரமா
சொலிக்குதடி....

வாசனை திரவியம் உனக்கு
தேவையில்லை நீ வந்ததே
வசந்தம் தானேடி....

உன் பிறப்பே உலக
அதிசயத்தில் ஒன்று
தானேடி...

ஐந்து வருசமா தினம்
உன்னை எழுதுகிறேன்
என் மனம் சோர்ந்து
போனதில்லையடி....

எத்தனை முறை உன்னை
எழுதினாலும் எழுச்சி தினம்
பிறக்குதடி....

பெண்ணே உன்னை
நினைத்தாலே கவிதை
பல வந்து அருவியாய்
கொட்டுதடி....

இன்னும் கொட்டும் இன்னும்
கொட்டும்...ஏன்
புயலா கூட
வந்து புரட்சி
போடும்...!!



**பொன். கருணா**
நவி மும்பை

## முழுமுதற் கடவுள்

கடவுள் இருப்பதை
உறுதிப்படுத்துவது
எவருடைய தலையாய
பணியுமல்ல

கண்காணிப்பு கேமரா
இல்லாவிடினும் நேர்மையைக்
கடைப்பிடிப்பதே சிறப்பு

தொடர் இன்னல்களால்
துக்கப்படலாம்இறைவனில்லை
என்றால் சரியாகிடுமா?

அண்டிய நோயிலிருந்து
மீள்வதே இலக்கு
வீண் விவகாரத்தில்
ஈடுபடுவதைத் தவிர்

இயற்கையும் எதிரியும்
இணைந்து மிரட்டினால்
அனைவருக்கும் ஆத்திரம்
பீறிட்டெழுவது சகஜம்

எவ்விதம் தொல்லை
களிலிருந்து
விடுபடுவது
என்கிற
சிந்தனையே
சகலத்திற்கும்
விடுதலை



**பி. பழனி,**
சென்னை.



## ஹைக்கூ:

1. வாசனை:
நறுமணம் மிகுந்த வாசனைத்
திரவியம் – தோற்கிறது
நன்கு உழைத்த சிந்திய
வியர்வை வாசனையில்!!!

2. பேச்சு:
சிறிது இடைவெளி
விட்டு ஆரம்பிக்க
அழகாய் வெளிப்படுகிறது
–புன்னகை!!!

3. சண்டை:
நீயா நானா எனக் கேட்க
நினைத்து – போடாடி யில்
கொண்டு முடிகிறது!!!

4. நைட்டி:
புதுப்புது ஆடைகளில்
அழகாய் மிளிரினாலும்–
வீட்டுத் தலைவியின்
சீருடைக்கு ஈடாகாது!!!

5. பனி:
உலகமே நடுங்குகிறது–
வீட்டிலோ
குளிர்சாதனப்பெட்டி
அனையாமல்
குளிருட்டுகிறது
இன்னும்
அதிகமாக!!!
நன்றி



**பானு ஸ்ரீ**
பாண்டிச்சேரி

## காத்திருப்பு

காலங்கள் ஓடுவதும்
நிற்பதும் நகர்வதும்
இயற்கையின் செயலல்ல
மனதின் ஓட்டங்கள்

யுகம் யுகமாய் பூமியின்
சுழற்சியில் மாற்றமில்லை
வேகத்தில் மாற்றமில்லை
தடுமாற்றம் என்றுமில்லை

மனது என்றுள்ளது
மனிதனுக்கு மட்டுமே
ஆறறிவு என்பதனாலே
மனமென்ற ஒன்றும்
உளதோ?

சிந்திக்கும் மனமுடனே
காலங்கள் ஓடுவதும்
இயற்கையின் பிம்பம் போலும்
ஒட்டிக் கொள்கிறது
உள்மனதில்

சந்தோஷம் என்றானால்
காற்றாடி ஆகிடும் உள்
மனது இயற்கையின்
விதிவிலக்காய்
ஓடிடும் நேரமும் வேகமாய்

கவலைகள்
அணைக்கையிலே
காற்றும் நகராதது போலும்
இமைப் பொழுது நொடியும்
யுகமாய் மாறிடும்

தன்னை அறிந்தவனுக்கு
தன்னிலை உணர்த்தவனுக்கு
நாளும் நேரமும்
நகர்ந்திடுமே ஒரு சேர

இயற்கை பொய்ப்பதில்லை
தன்னிலையில்
தானாய்
என்றும் போல்
சுழன்றிடுமே
நாமும் உடன்
வாழ்ந்திடுவோம்



**ஓம் குமார்**
**P N**

## கூட்டுப் புழுக்கள்

முட்டையில் அவதரித்து
கூட்டில் அடைபடும்

வாழ்க்கை சுழற்சியின்
வட்டப் பகுதி

தன்னம்பிக்கை ஒளியின்
துருவ நட்சத்திரம்

உண்ணும் உணவில்
எண்ணமில்லை
உலகம் பார்க்க
உழைப்பை நாடும்

உருவில் மாற்றமேற்று
உற்சாகத்தைத் தேடும்

வாழும் உயிரினத்தை
வாழ விடாது தேவைக்கு
அழிக்கும் மானுடம்

சிறகை ஒடித்து
சுதந்திரம் தடுத்து
பட்டாடைப் பட்டுக்கு
அழிவாக்கும்

உறங்கா நிலையில்
உயிர் வாழ்ந்து வண்ண
உடலுக்கு வழி தேடும்

மானுடரில் கூட்டுப் புழுவுண்டு
தன் திறமையறியாது
தவிக்கும் குணமுண்டு

புழுவாய் இருந்தால்
புகழ் இல்லை தட்டித்
தகர்த்தால் தரணி வசமாகும்

விட்டு விடுதலையாகும்
வித்தை
கைவசமுண்டு
நம்பிக்கை நெஞ்சம்
நாம் கொண்டால்
நாளும் நமக்கு
புது விடியலே.



**தமிழ்நிலா**



## "விடா முயற்சி விஸ்வரூப வெற்றி"

வீழ்ச்சி முடிவல்ல
எழுச்சியின் இடைவேளை!
வலி சொல்லும் பாடமே
வெற்றியின் பிள்ளையார் சுழி!

நீண்ட இரவுகள்
கேலி செய்தாலும்,
கனவுகள் ஒளியை சேமித்துக்
கொண்டே இருக்கும்
மறுநாள் விடியலுக்காக!

தோல்வி தோளில்
கை போட்டு "நிறுத்திவிடு"
என்றால், விடா முயற்சி
நெஞ்சில் நின்று
"இன்னொரு முறை"
எனச் சொல்லும்!

பதறாத பொறுமை
அடித்தளம் அமைக்கும்!
தளராத உழைப்பு
கோபுரம் எழுப்பும்!

நீ மற்றவர்களுடன் அல்ல,
நேற்றைய உன்னுடன்
போட்டி போடு அதுவே
ஆரோக்கியப் போட்டி!

மொபைல் நேரம் குறைத்தால்
எதிர்கால நேரம் கூடும்!
இன்று கொஞ்சம் வியர்வை
நாளை நிறைய மதிப்பு!

நம்பிக்கை உன் ஆயுதம்,
நேர்மை உன் கவசம்!
காலம் சொல்லும் சாட்சி
நீ யார் என்பதற்கு!
கேலி பேசுபவர்கள்
இன்று சிரிப்பார்கள்
வெற்றி பெற்ற நாளில்
அதே வாயால்
பாராட்டுவார்கள்!

நம்பிக்கை வை உழைப்பை
விடாதே விடா முயற்சியே
விஸ்வரூப வெற்றிக்கு விதை!

வெற்றி உன்னைத்
தவிர்க்கலாம்...
ஆனால்
தோற்கடிக்க முடியாது!



**முகில் தினகரன்**
கோயமுத்தூர்



## ஹைக்கூ...

காணவில்லை...
கன்னியாகுமரியில்
என் காதல் குமரியை!

சேரியிலும்... தேரோட்டம்
நடந்தது காவல்துறை
பாதுகாப்புடன்!

மாற்றுத்திறனாளி...
பெண்ணிற்கு திருமணம்
மறுமணமாய் செல்வந்தரோடு!

ஆவியில் விடுதலை...
கேட்கும் விசுவாசி
பாவச் சிறையில் மனம்!

தினம் ஒரு கனவில்...
ஓடிக்கொண்டே இருக்கிறான்
பொய்க்கால்
குதிரையாய்!

வந்தவர்களில்... பலர்
வந்து போகிறார்கள்
சிலரே வாழ்ந்து
போகிறார்கள்!

சொந்த வீட்டிலும் வாடகை
வீடாய் தனி அறையில்
முதியவர்கள்!

அத்தனை உண்மைக்கும்...
அவன் சாட்சி
மனிதருக்கு மனசாட்சி?

வேண்டாம்... சபலத்தின்
இச்சை வரும் அதனால்
சர்ச்சை!

அமைதியை தேட...
சொல்லுது தியானம்
கோபத்தில் எங்கே ஞானம்?

### கல்லணை!
காதலனை... தேடி வந்த
காதலி காட்டாறு
வெள்ளத்தில்
இறந்துவிட கரிகாலன்
கண்ணீரில் உருவானதுதான்
கல்லணை!



**ஜெ.ம.புதுயுகம்**
பண்ணந்தூர்

## "ரசி... அடிமையாகாதே!"

திரையில் பிறந்த போலி
வீரர்கள் வியர்வை இல்லாத
நெற்றியோடு விசில் சத்தத்தில்
வாழ்பவர்கள்!

வீட்டில் வாடும்
அப்பாவின் மௌனக்
கண்ணீருக்கும்...
அம்மாவின் சுருக்கக்
கைகளுக்கும் பாலாபிஷேகம்
வேண்டாம் பரிதாபிஷேகம்
கூடவா இல்லை?

அவன் அடிக்கும் பஞ்ச்
டயலாக்உன் வாழ்க்கையை
உயர்த்துமா?அவன் பேசும்
இரவல் வசனம்
உன் பசியை தீர்க்குமா?

ஒப்பனை தைரியம்
பூசியவர்கள் BMW
அதிபர்கள்! நீ மட்டும்
தான் டவுன்பஸ்ஸின்
சந்தாதாரன்!

கண்ணாடி உடைக்கும்
ஹீரோ கைகள்
உன் கண்களைத்
துடைக்காது!
விசிலடிக்கும் வாய்க்கு
வலி கூடத் தெரியாது!

ரசிகனாக இரு
அடிமையாகாதே!
ஹீரோவை ரசிக்கலாம்
வீட்டு மனிதர்களை
மறக்கலாமா?

உன் வாழ்க்கையின்
நிஜ ஹீரோக்கள்
ஒப்பனையின்றி
ஒவ்வொரு நாளும்
உனக்காக வெடித்துக்
கொண்டிருக்கிறார்கள்!



**முகில் தினகரன்**
கோயமுத்தூர்



## "சிரிப்பே மருந்து"

மருத்துவமனை தேடுகிறாய்
உடம்பு வலிக்காய்..
உன் சிடுசிடு முகத்திற்கே
ஒரு வார்டு திறக்க வேண்டும்
போலுள்ளது!

சிரிப்பைத் தொலைத்து
சிடுமூஞ்சியை
வளர்த்தவனே...
உன் முகமே மற்றவர்களின்
முழுநாள் கெட்டுப் போக
மூலகாரணம்!

சூரியன் உதித்தாலும்
உனக்கு இருட்டு, மழை
பெய்தாலும் உனக்கு
சலிப்பு,
உலகம் உன்
மனநிலைக்கே
வேலை செய்யணுமோ?

சிரிப்பு சுகாதாரம்,
சிடுமூஞ்சி தொற்றுநோய்!
புரிந்து கொண்டு
புன்னகை வளர்த்து!
உன் கோபத்துக்கு
மருந்தே இல்லையென்கிறாய்!
இருக்கு நண்பா, பொறுமை
லேகியத்தை பயன்படுத்து
சுடுமுகம் சுந்தரமுகமாகும்!

ஒரு முறை சிரித்தால்
உன் முகத்தில்
மனிதன் தெரிவான்!
சினத்தில்
புன்னகைத்தான்
உன் முகத்தில்
இறைவனே தெரிவான்!



**முகில் தினகரன்**
கோயமுத்தூர்

## நேர்மை

நேர்மை மனித வாழ்வின் அடிப்படை.
அது மனிதனை உயர்வாக்கி சமூகத்தில் மதிப்பை அளிக்கிறது.
நேர்மையுடன் நடந்தால் மனசாட்சி அமைதியாக இருக்கும்.
எந்தச் சூழ்நிலையிலும், எக்காரணத்தை முன்னிட்டும்
நேர்மை வழியை விட்டு எள்ளளவும் விலகக் கூடாது.
பொய், தற்காலிக லாபம் மற்றும் தீர்வுக்கு நிவாரணம்
கிடைப்பினும் நிரந்தர இழப்பைத் தரும்.
நேர்மை நம்பிக்கையை உருவாக்கி உறவுகளை பலப்படுத்தும்.
மாணவர்களுக்கு நேர்மை சிறந்த ஒழுக்கப் பாடமாகும்.
வேலை, நட்பு, குடும்பம் அனைத்திலும் அது
இன்றியமையாதது.
நேர்மையான மனிதன் தவறுகளை தைரியமாக
ஒப்புக்கொள்வான். நேர்மை வாழ்வை ஒளிரச்
செய்யும்.



**உ.மு.ந.ராசன் கலாமணி**
கோயம்புத்தூர்.






அறுவடை திருநாளில்
புதுப்பானைக்கு
மஞ்சள் இஞ்சி
தோரணம் கட்டி
புத்தரிசியில் பொங்கலிட்டு
ஆதவனை வணங்கிடும்
இந்நன்னாளில்
தமிழ்நாடு மின்னனு
நாளிதழ் கோடி
வாசகர்களை பெற்று
ஆதவன் உள்ளவரை
நிலைத்திட
வாழ்த்துகிறேன்

**ராஜகோபாலன்.J**
பெங்களூரு

உலகின் ஒளிமூலம்
சூரியன்... எனினும்
பார்வையற்றோருக்கு
வழிகாட்ட முடியவில்லை
தன் ஒளி மூலம்!

**சு. அருண் பிரகாஷ்**
இராமச்சந்திரபுரம்!



தீ
தம்...
தீதின்
அதிதம்!

**சு. அருண் பிரகாஷ்**



சக்கரை இல்லை
வெண் பொங்கல் தான்
செய்வாய் என்றாய்
உனக்கு தெரியாது
உன் எச்சம் பட்டால்–அது
சக்கரை பொங்கல் தான்
என்று!



மனதை கேட்டால்
தர மாட்டாய் என தெரியும்
கொஞ்சம் தலை சாய –உன்
மடியினை தா
தேக்கி
வைத்திருக்கும்
சோகங்களை
எல்லாம்
கண்ணீராய்
கொட்டி விட்டு
செல்கிறேன்
உந்தன் காலடியில்!



**லி.நௌஷாத் கான்-**

## புல்லறிவாண்மை

அறியாமை இருளாய் மனதில்
குடிகொள்ளும்.கேள்விகள்
இல்லாத இடத்தில் அது
வேரூன்றி நிற்கும்.
கேட்டறிய மறுக்கும்
செவி மூடிக்கொள்ளும்.
கண்டதையே உண்மை என
கண்கள் நம்பிக்கொள்ளும்.
புல்லறிவாண்மை
பெருமிதமாக முகம் காட்டும்.
அறிவை ஏளனமாய் தள்ளி
நின்று வேடிக்கை பார்த்துச்
சிரிக்கும்.சிந்திக்க மறுக்கும்
நெஞ்சம் சுருங்கிக்கிடக்கும்.
நான் அறிவாளி என்று
தன்னைத் தானே
மிகைப்படுத்திக் கொள்ளும்
அகந்தை குணமுடையதால்
முன்னேற்றப் பாதை மெல்ல
மெல்ல மாயமாகும்.
கற்றால் தான் அதற்கான
தீர்வு கிடைக்கும்.
கற்றலேபுல்லறிவாண்மையை
த்தகர்த்து வாழ்க்கையை
வளம் பெறச் செய்யும்.

**உ.மு.ந.ராசன் கலாமணி**
கோயம்புத்தூர்.



## பொங்கட்டும் புன்னகைப் பொங்கல்.!

*பகிர்ந்து வாழ்வதையே
பண்பாடாய் கொண்ட
சமூகம்... பழமையை
மறந்துவிட்டு.. 'பகிரி'யிலும்..
'முகநூலிலும்' மட்டும்
நடைமுறைப்படுத்துகிறதே..
அன்று வெண்
பொங்கலுக்கென ஐந்துபடி
பானைகளையும்.
.சர்க்கரைப் பொங்கலுக்கென
மூன்றுபடி பானைகளையும்
அநேகர் வாங்குவர்..
அக்கம்பக்கத்து
சடைப்புக்காரிகள்
ஏழுபடி பானைகளையும்..
ஐந்துபடி பானைகளையும்
வாங்கிக்கொண்டு..நான்
ஒன்னும் சளைத்தவள்
இல்லை'என ஜம்ப சவால்
விடுவதும் உண்டு..
அவ்வளவுப்பொங்கச்சோறும்..
மாலை மசங்களுக்குள்
அக்கம்பக்கம்..
கொண்டான் கொடுத்தான்..
பங்காளி பாகஸ்தன்
வீடுகளுக்கெல்லாம்.
விநியோகம் ஆகி..'போய்
வரும்'.. இரவுச்சாப்பாட்டுக்கு
குழந்தைகள்.. சர்க்கரைப்
சோற்றுப் பானைக்குள்
காந்தல் சோறு வறண்டி
ருசிக்கும்..வெண் பொங்கல்
பானைக்குள்ளோ....
நீர்ஊற்றி மூடி...
கைச்சோறு
காத்துகிடக்கும்..
அடுத்த எட்டு
நாளுகளுக்கு அந்த
புளிச்சத்தண்ணிதான்
ஜிகிர்தண்டா..நன்னாரி
சர்பத்..எல்லாமுமாய்
இருக்கும்.குழந்தைகள்
இல்லாத வீடுகளில்
கூட ..கட்டுக்கரும்பு
காத்துகிடக்கும்.. வீதியில்
விளையாடும் ஊறார்
பிள்ளைகளை கூப்பிட்டு...
அடியும் நுனியும்
தரித்துவிட்டு..துண்டாடி
கொடுப்பார்கள்.. தங்கள்
வீட்டு முற்றத்திலேயே..
மென்று சக்கையை துப்புவதை
பெருமிதமாய் ரசிப்பார்கள்..
மறுநாள் மாட்டுப்
பொங்கலுக்கு... கறிச்சோறு
திங்கக்கூட இயலாமல் நாக்கு
தடித்தும்..ஈறுகள் வீங்கியும்
அவதிப்படுவோம்..
ஆனாலும் கரும்பு கடிக்கும்
ஆவலாதி மறையாதே..
பொங்கல் பானை
வைக்கும்போதே..'வெண்
பொங்கல்பானை முன்னதாய்
பொங்க வேணும்..புதுப்பால்
கிழக்காக வழியவேணும்'
எனும் வேண்டுதலோடு
அடுப்பெரிப்பர்..
'ஊர் விளைந்தால்
ஒட்டுக்கு பிச்சை..
பொங்கலோ..பொங்கல்'என
குலவையிட்டபடி..
தாம்பாலத்தில் அகப்பையால்
தட்டுவோம்.. இன்று
கதவிடுக்கு வழியாக
குலவையொளி கசிந்திடாமல்
கமுக்கமாய் பொங்கல்விழா
நிகழ்கிறதே.. பகிர்ந்துவாழவே
மனமிருந்தாலும்..
பெற்றுக்கொள்ள தன்மானம்
தடுக்கிறதோ..?
கொடுப்பவருக்கும்...
பெற்றுக்கொள்பவருக்கும்..
கவுரவ இழுக்கில்லா...
மகிழ்வான வாழ்த்துகளை
புன்னகையோடு
விளம்புவோமே...'அனைத்து
உள்ளங்களுக்கும் இனிய
பொங்கல் திருநாள் நல்
வாழ்த்துகள்.!*



**க.குமாரகுரு**
மயிலாடுதுறை



## ரேஷனில் கரும்பு!

ரேஷன் கரும்புடன் வந்தேன்
எதிரே கோயில் யானை
உயிர்களிடத்து அன்பு
வேண்டுமென்று
அதனிடம் நீட்டி மகிழ்ந்தேன்
மனைவிக்கு என்ன
சொல்றதென்று
மனதில் ஒரு உதைப்பு
அருகேயிருந்த
கடையில்
ஒரு கரும்பை
வாங்கிக்
கொண்டு
சிங்கம்போல
நடந்தேன்!




**சின்னஞ்சிறுகோபு,**
சென்னை.

நம்பிக்கைதான் வாழ்க்கை
நேற்று ?
நினைக்"கை"
யில் !
இன்று ?
நம்"கை"யில் !
நாளை ?
நம்பிக்"கை"யில்



**G.A.கோவிந்தராஜ்(எ)**
**சுரேஷ்குமார்**
திருப்புவனம் புதூர்



## புதுமை போகி

பொறாமை பேராசை
பொசுக்கிவிடு
சுயநலம் சோம்பல் சுட்டுவிடு

எதிர்மறை எண்ணம்
எரித்துவிடு
மதவேற்றுமை மறந்துவிடு

தயக்கம் துரோகம் தீயிலிடு
பொய் புரட்டு நெருப்பிலிடு

சாதி பாகுபாடு சாம்பலாக்கு
கோபம் குரோதம்
குப்பையிலிடு

கயமை குணங்கள்
களைந்திவிடு அலட்சியம்
ஏளனம் எறிந்துவிடு

பகைமை
வெறுப்பு
மறந்துவிடு
புதுமை போகி
கொண்டாடு



**நாகை பாலா**

அதெப்படி நீ நட்டுப் போனது
உன் பார்வையை..
பூத்துக் குலுங்குகிறது
என் மனச் செடி !

எதுவும் எடுத்துப்
போகவில்லை என்பதாகக்
கைகளைத் தட்டிக் காட்டச்
சொல்கிறாய்..
நீ ஒட்டிக் கொண்டிருப்பது
என் இதயத்தில் !

எல்லா
நட்சத்திரங்
களையும்
உதிர்த்த என்
வானத்தில்
ஒற்றை நிலவாய்
நீ !



**ரிஷபன்**

## பூ - வியாபாரி !

முழம் போட்டு அளந்து பூ
வியாபாரி தந்த மல்லிகைப்
பூவை நீ கூந்தலில் சூடிய
பிறகுதான் நினைத்தேன்.

உனக்காக பூ வியாபாரியாய்
கூட மாறியிருக்கலாமோ
என்று...
நீ கூந்தலில்
மலரிலாவது
என் கரம்
பட வாய்ப்பு
கிடைத்திருக்குமே!



**எம்.பி.தினேஷ்,**
கோவை



## பொங்கல் வாழ்த்து

அறுவடை திருநாளில்
புதுப்பானைக்கு
மஞ்சள் இஞ்சி தோரணம்
கட்டி புத்தரிசியில்
பொங்கலிட்டு
ஆதவனை வணங்கிடும்
இந்நன்னாளில் தமிழ்நாடு
மின்னனு
நாளிதழ்
கோடி
வாசகர்களை
பெற்று
ஆதவன்
உள்ளவரை
நிலைத்திட
வாழ்த்துகிறேன்



**ராஜகோபாலன்.J**
பெங்களூரு

உழவுக்கு ஒரு நாளாம்
உழவர் திருநாளாம்
தான் உழைக்க தன்
உழைப்பில் தனக்கும்,
தன் சுற்றத்தார்க்கும்
உலகுக்கும் உணவளிக்கும்
உழவர்கள் தம் உழைப்பிற்கும்
உலகை வாழ வைக்கும்
ஆதவனுக்கும்
நன்றி கூறி வணங்கி
பொங்கல் படையலிட்டு
பொங்கலோ பொங்கல்
பொங்கலோ பொங்கல்
என குலவியிட்டு இந்நாள்
போலும்
எந்நாளும்
எல்லோரும்
இருந்திட
வேண்டி
படைத்தவனுக்கும்
படையலிட்டு
நன்றி கூறும் பெருநாளாம்



**ஓம் குமார் P N**
Madurai



## போகி
## கொண்டு வந்துப் போட்டுக் கொளுத்து

இன்று செய்ய
வில்லையெனில்.. என்று
செய்வாயோ? நன்று
செய்ய எண்ணிவிடு..
நலமாகும் பாதையினைத்
தேர்ந்தெடுப்பாய்.! கொன்று
விடும் ஆசை, அகங்காரம்
அனைத்தையும்.. இப்
போகியிலே கொண்டு
வந்துப் போட்டுக் கொளுத்து!

வேற்றுமை நெருப்பை
வீதியிலே மூட்டினாய்..
கூற்றுவனை அழைக்க
வெண்சுருட்டுக்கு தீ
ஏற்றினாய்..!நாட்டிலே..
வீட்டிலே..
நான் என்றே நீயும்
பிதற்றுவாய்!வேண்டுவது
யாதெனில்.. வெருப்பினை..
தன்னலத்தை வீதியிலே
இன்று.. கொண்டு வந்துப்
போட்டுக் கொளுத்து.!

பழமையிலே கண்மூடி..
பாழான மூடத்தனத்தை
வழமையாக்கி வஞ்சகத்தை
நடத்துகின்றாய்..
வாழ்நாளெல்லாம்..
உண்மையினை அறியாமல்
இருக்கின்றாயே.. உதவாத
பழக்கத்தை யெல்லாம்
இன்றே.. வீதியிலே..
கொண்டு வந்துப் போட்டுக்
கொளுத்து.!

பேராசை பெரும்
நெருப்பு.. மூவாசை..
மூடத்தனங்கள்.. ஒருகை
ஓசை.. எழும்பாதன்றோ..
இன்றுணர்ந்தே யாவருமே
ஒன்றுயென்ற நம்பிக்கை
கொண்டுலகில்.. கூறு
போடும் வேறுபாடு
அனைத்தையும் திரட்டி..
இந்தப் போகியிலேக்
கொண்டு வந்துப்
போட்டுக் கொளுத்து.!



**வே.கல்யாண்குமார்.**

## மட்டைப்பந்து

மைதானத்தில் மண் மணம்
வீசும். மட்டையில் பந்து பட்டு
கேட்கும் ஒலி இதயத்தைத்
தட்டும்.பந்து பாயும்
வேகத்தில் நரம்பு புடைத்து
உற்சாகம் கரைபுரண்டு
ஓடும். வியர்வைத் துளிகளில்
கனவு பிறக்கும்.
ஒவ்வொரு ஓட்டமும்
நம்பிக்கை சேர்க்கும்.
நான்கு, ஆறு என அடிக்க
ரசிகர்களின் ஆரவாரமான
கூக்குரலும், கைதட்டலும்
வானத்தை முட்டும்.
விக்கெட் விழும் போது
மட்டும் நிசப்தத்தில் குண்டூசி
விழும் சப்தமும்
கேட்கும்.
இந்திய அணி
வெற்றிக்
கனியைப்
பறிக்கப்
போகும்
அந்த நொடி
தேசத்தின் துடிப்பு.



**உ.மு.ந.ராசன் கலாமணி**
கோயம்புத்தூர்.

## மனம் விரும்பும் தருணம்

உள்ளம் தேடிய தருணம்
அது, காலம் என்னைப்
பார்த்து சிரிக்கும் கணம்.
சிறு புன்னகையில் உலகம்
மறையும்,மௌனம் கூட நல்ல
செய்தியை சொல்லிடுமே
விழிகளில் கனவுகள்
கூத்தாடும், நெஞ்சம் மிக
மிக மெதுவாக துடிக்கும்.
துயரம் எல்லாம்
காற்றில் கரைந்து போக,
அந்தத் தருணமே நினைவாக
மாறும்.பிடித்த அந்த
தருணத்தில் வாழ்க்கை
முழுவதும் நிறைவாகத்
தோன்றும். வாழ்க்கை
நிறைவு
பெற்றால்
மன நிறைவு
தானே...



**உமா**
**முத்துராமன்**



## பெண்

அன்னம் போலப் பெண்
ஒருத்தி கன்னம் சிவந்திட
மலரானாள்

கொவ்வைக் கனி இதழ்
மழலையிலே கொஞ்சிப்
பேசும் கிளியானாள்

கிளி மொழியாள் இசை
பாடலிலே கீதம் பொழியும்
குயிலானாள்

குயிலிசைப் பெண் அவள்
ஆடலிலே கோலத் தோகை
மயிலானாள்

மயிலின் ஒயிலுடன் மலர்க்
கொடியாள் மைவிழி காட்டிட
மான் ஆனாள்

மான் போல் மருண்ட
பெண் அவளும் மலர்முகம்
ஒளிதரும் மதியானாள்

மதியைப் பழிக்கும் மங்கை
அவள் மயக்கிடும் மொழியில்
தேன் ஆனாள்
தேன் சுவை
இதழ்கள்
சிரித்திடவே
தெய்வக்
கவிதை
வடிவானாள்



**எஸ். சந்திரசேகரன்**
அமுதா செஞ்சிக்கோட்டை

## அடையாளம்

" சற்று கையில் பணம்
கூடியவனுக்கே கடற்கரை
மணல் விளையாட்டு
அலைகளில் ஆட்டம்
சுண்டல் சுவாசம் ... "

கடல் பரந்து விரிந்து எல்லை
இல்லாமல் இருந்தாலும்
அலையின் நடனம்
அபிநயம் காட்டினாலும். ...."

கிராமத்து ஏழைக்கு
ஏது கடல்வாசம் அழகிய
தெருமுனை குளமும் சின்ன
சின்ன வாய்க்காலும் தான்
சொத்து ...."

பெரிதும் பார்த்து பழகியது
கிணறு அடுத்து குளம்
வாய்க்கால் வயல்வெளி
போர்செட் ...."

கடல்போல மனதில்
பதிந்தது குளம்
வரைபடத்தில் மட்டுமே
தெரிந்தது கடல்....."

நடைபாதை வீட்டு
ஏழையாய் மனதளவில்
எண்ணத்தில் மட்டும்
கடலாய்
வாழ்க்கை ..."

கடலை
கிராமத்திற்குள்
கொண்டு
வந்தால்
கொண்டாட்டம்
கலை கட்டுமே ..."



**ஆர் .சீதாராமன் , சீர்காழி**

## நிலையாய்!

மனிதரில்... சிலர் வாழ்வு
கலங்கரை விளக்கு

மனிதரில் பலர் வாழ்வு
கண்ணீரின் வழக்கு

மனிதரில் சிலர் வாழ்வு
தண்ணீரில் ஓடம்

மனிதரில் பலர் வாழ்வு
கவிதையாய் பாடம்

எது வாழ்வென்று
நமக்கு ஞானம்
விளக்குவதற்குள்
முடிந்து விடுகிறது வாழ்வு

உண்மையில் எல்லோரும்
வாழ்வதாய் நினைத்து
வாழாமலே இறக்கிறோம்

நிலையாய்.... என்றும்
இருப்பதாய் நினைத்து
இறப்பையே மறக்கிறோம்!

**ஜெ.ம.புதுயுகம்**
பண்ணந்தூர்

## போட்டி

சிறகுகளை விரித்து
சிகரத்தில் பறக்க
சிறார்களுக்கு
திறமையின் முகத்தை
காட்டும் காலக்கண்ணாடி!

அஞ்சன மை தீட்டி
அகிலத்தை காண
முடியாது மூடியிருக்கும்
ஆற்றலின் இமைகள்
திறந்து கொண்டால்தான்
வெற்றியின் பாதைகள்
புலப்படும்!

வையகம் பஞ்சபூதங்களால்
நிறைந்ததோடு
போட்டியால் விரைந்தது
சும்மா இருப்பவர்களுக்கு
உறக்கமே பரிசாய்க்கிட்டும்!

எதிரிகளோடு இணைந்து
ஓடும் ஓட்டத்தில்திட்ப
நுட்பங்களைதரப்படுத்த
தகுதியாக்கமழுங்கியிருக்கும்
அறிவு ஆயுதத்தை
நூலகப்பட்டறைகளில்
சாணைப்பிடிப்பது
அவசியமாகிறது!

பந்திக்கு முந்துவதும்
பந்தயத்தில்பிந்துவதும்
சிறப்பானதேகத்தை வருத்தி
தன்னம்பிக்கையை உயர்த்தி
பயிற்சியைப் பெருக்கி
சோம்பலைச்
சுருக்கி
பொறாமையைப்
பொசுக்கி
இலக்கை
நோக்கி
விறுநடை
பயில்வோம்!



**கவிஞர் த.அனந்தராமன்**
துறையூர்

## குடை பிடித்த சாத்தான்

மழை பேசும் இரவில்,
நகரின் நெஞ்சுக்குள்
குடை பிடித்த சாத்தான்
நிழல்களை மிதித்துக்
கடக்கிறான்

ஒளிப்பதக்கங்கள் நடுங்க,
அவன் முகம் வெளிச்சம்
தவிர்க்கிறது.
கண்களில் தீ இல்லை,
அழுகிய கனவுகள் மட்டும்.

தீயின் கண்கள் அல்ல,
சோர்வின் பார்வை
அவனிடம், பாவம்
சொல்லும் வாயல்ல,
மௌனம் தான் அவன்
மொழி.

மழைத்துளிகள் அவனை
தீண்ட தவிக்க மறுக்கும்
குடை அல்ல பாதுகாப்பு
அவன் செய்த சமாதானம்

ஒளி ஒதுங்கும் பாதையில்
இருள் அவனை
ஏற்றுக்கொள்கிறது
கடைசி விளக்கின் கீழ்
அவன்
நின்றபோது
புரிந்தது—
காலடிகள்
சத்தமில்லை,
நினைவுகள்
அலறுகின்றன.



**நா.சதீஸ்குமார்**
தேவகோட்டை

## மாற்றம்

சூதாட அடிக்கடி மனசு
அலை பாயும் பேராசையைக்
குழி தோண்டிப் புதை
சிறுகக் கட்டி பெருக
வாழ்#முதுமொழி உள்ளதும்
போச்சு என்ற நிலை வரும்
தற்போதைய நிலைமை
மாற விவேகம் விடாமுயற்சி
ஈடுபாடு மிக அவசியம்
நேர்மை ஒழுக்கம்
சேர்ந்தால்
உச்சம்
அதீத காமம்
குறுக்கிட்டால்
பேரழிவு
தேவை
எதுவென
சிந்தித்து முடிவெடு



**பி. பழனி,** சென்னை.

## "இனிமையாக மொழிதல் வேண்டும்"

வாளை ஏந்த வேண்டாம்,
வார்த்தை போதும்
மனிதனை வீழ்த்தவும்
உயர்த்தவும்!

கத்தியொத்த
கூர்மைச் சொற்கள்
காயம் செய்யும்!
மலரொத்த மென்மை
வார்த்தைகள்
மனதுக்குச் சிகிச்சை!

கோபமாய்ப் பேசிட
வழிகள் மூடப்படும்?
அன்பாய்ப் பேசிட
வாய்ப்புகள் திறந்திடும்!

"எப்படி இருக்கிறாய்?"
எனும் விசாரிப்பு
ஒரு நாளின் சுமையை
இறக்கி வைக்கும்!

பேச்சு என்பது
வெறும் ஒலியல்ல...
அது மனிதனின்
உள்ளத்துள் நுழையும்
அனுமதிச் சீட்டு!

கடினமான வாழ்க்கைச்
சாலையில் இனிய சொற்கள்
நிழல் தரும் மரங்கள்!

மனக் காயங்கள் கூட
மருந்தைப் புறந்தள்ளி
மென்மை மொழியால்
வேகமாய்க் குணம்
அடைகின்றன!


அதிகம் பேசாது
அன்பொடு பேச
வாழ்க்கை
யாவும்
இனிமை
கூடும்!.



**முகில்**
**தினகரன்**
கோயமுத்தூர்


ADVERTISE WITH US!
CONTACT US
9337501889


அனைத்து பிரிவினருக்கும்
என் துணை
திருமண தகவல் மையம்
உங்கள் மணமகனை / மணப்பெண்ணைப் பதிவு செய்யவும்.
www.enthunai.com
support@enthunai.com
7871617005
7789941009


just499
Pick Any Website
Just ₹499 Only!
Affordable Website Solutions for Every Business
Matrimonial Website
Real Estate Website
E. Commerce Website
Restaurant Website
Shopping Website
News Website
MLM Binary Website
MLM Level Website
MLM Gaming Website
Call: 7789951009 | WhatsApp: 7789951009


WE'RE
HIRING
TELECALLERS
SALARY STARTING FROM
RS.20000/- ONWARDS
+91 7871617005


முனீஸ்வர் துணை
RG
கங்கோதரி எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.
GANGOTHARI ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அணுகவும்.
97103 48377, 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.


Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


THINKING to BUY / SELL / RENT a PROPERTY
New / Resale... Residential / Commercial...
*Plots
*Flats
*House
*Villa
*Bungalows
*Farm Land
*Ware Houses
*Factory Sites
*Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call:7871617005


Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 %OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE


just499
REAL ESTATE SOFTWARE
We Provide Complete Real Estate Software Solutions
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
vilambarampage@gmail.com
7789941009


Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Rs 8000 – Rs 15000 per month
Ananda Bhaskar
9337501889
7789941009


THE BEST CENTRE OF
CAR WASH
SADHANA DEVI.K
SUPREME
Car Wash
& Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.


WE'RE HIRING!
A Passionate Content Creator
94386 10756


CREATE YOUR PROFILE WITH US
& SCALE YOUR CAREER
SEND YOUR CV AT -
MKPLACEMENT@GMAIL.COM
FIND AMAZING JOB OPPORTUNITIES WITH US!!


6380139263
9952007563
9940010279
GERMANSILVER.RR
RATNARAJSILVER.COM
RAJ&RAJ
GERMANSILVER /
POOJA ITEMS RETURNGIFTS/
WEDDING GIFTS /HOME NEEDS



சம்பிரதாய தாம்பூல பாக்கு!
பூஜைக்கு உகந்த பாக்கு
AJANTHA
TRADITIONAL THAMBULA BETEL NUTS
அஜந்தா
பாக்கு
அனைவருக்கும்
தீபாவளி
நல்வாழ்த்துகள்!
அஜந்தா
பாக்குடன்
உங்கள்
தீபாவளியை
கொண்டாடுங்கள்!
RAVIKUMAR AND COMPANY


ஸ்ரீ கிருஷ்ணர்
உபாசகர் பரிகார புகழ்
ஆன்மீக செம்மல் த.பிரகாஷ்
CONTACT US
9597887308, 6380453463
EXPERT IN VEDIC ASTROLOGY
PREDICTION & SOLUTIONS
MONEY
LOVE
HEALTH
FAMILY
BUSINESS
CAREER
MARRIAGE


ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St.,
Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601


Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address
on Above Number
Josh Jobs Team Give u Daily Update of
Govt. as Well as Private Jobs


S.R
Call Drivers
Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.


FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO
BUY
OR
SELL
PROPERTY OR LAND?
+91 9884417843


ARG CONSTRUCTIONS
We Build Your
DREAM
HOME
Recently We Have Completed
Over 50+ Big Projects
SERVICES WE OFFER
Residential Construction
Commercial Construction
Customer Satisfaction
Contact Us
9710348377


Just 499
Visite Our Website
JUST499.COM
All type Of your Website/App need at one place
Small Business website
E - commerce Website
Corporate Website
Enterprise website
Mobile App Development
contact us at
9337501889


Euro Kids
Pre-School
Right Start, Flying Start!
Tondiarpet
9940661625
Introducing
HEUREKA
THE VISIBLE THINKING CURRICULUM
based on Harvard's Project Zero
Admissions Open
for AY 25-26
EuroTots | PlayGroup | Nursery | EuroJunior | EuroSenior
23+ Years of Experience
TUV Nord Safety Certified
1,600+ Pre-schools
No. 19/20, Kummalamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081


999 SITE
ARE YOU
LOOKING FOR JOB
JOB
Websites
CONTACT/WHATSAPP-7789951009


உலகளவில் தமிழர்கள் எதிர்பார்க்கும்
ஒரே தரமான நம்பர் 1 இ பேப்பர்
தமிழ்நாடு
இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
உள்ளூர் செய்திகள் முதல்
வெளிநாட்டு செய்திகள் வரை
துல்லியமாக தரும்
ஒரே நாளிதழ்
ஆனந்த
பாஸ்கர்
www.anandabhaskar.com
தினம் தோறும்
உள்ளூர், உலக செய்திகள் வரை
தரும் தரமான
நாளிதழ்
பேப்பர்பாய்
www.paperboy.biz


ADVERTISE
WITH US
CONTACT US
9438610756


Call- 9438610756, 9337501889
News Portal Website Development
Only
Rs. 499/-
Just 499
www.just499.com

**DAKSHAN PROPERTIES**
Khushal Gardens
GUDUVANCHERY
KAYARAMBEDU
ASTHINAPURAM
- On Road Site Rs.3999 /- Per Sq.Ft
- DTCP & RERA Approved
- Plot Size: 600 to 1200 sf

84385 85986 / 72000 49411

**அய்யப்பன்தாங்கல்**
மெட்ரோ ரயில் நிலையம் அருகில்
(PRE - LAUNCH)
1800SQ.FT
3BHK -1FLOOR 1FLAT
TOTAL 4 FLATS CCP LIFT
ஒரு சதுரடியின் விலை
ரூ.5500/-
90929 93599

**வாடகைக்கு**
Poonamallee
1800 Sq.ft. 40HP
Shed with Building
9629276108

**சென்னையில்**
இருந்து 50 kms
தொலைவுக்குள்
Layouts தேவை.
Only marketing
(No out rate purchase)
9551559597

**தனி வீடு விற்பனைக்கு**
NEMILICHERY, CHROMPET
Duplex Villa with CCP
Land area - 1080 sqft
Buildup area - 2400 sqft
contact:-
98414 83333 / 96000 69222

**2 கடை வாடகைக்கு**
பழைய வண்ணை
தெலுங்கு செட்டி தெரு,
Near Thiyagaraya Metro
94444 13395
044-48609138

**COMMERCIAL COMPLEX FOR RENT**



3 FLOORS with Lift
EACH Floor AREA, 3000 sqft,
1st, 2nd, 3rd Floor Available
Corner Side 2 way Entrance
KKR GARDEN 3rd Main Road,
Madhavaram, Chennai - 60
Nr. Metro Rly Stn & Anthony Hospital.
Cell: 98846 25240 / 98843 38911

**சென்னை**
GNT ROAD
சோழவரம் BY PASS
25000 சதுர அடி
&
300 HP பவருடன்
INDUSTRIAL /
COMMERCIAL
SHED வாடகைக்கு உள்ளது
9841420151

**Space available on OMR for RENT!**
Fully Furnished Amenities
Ideal for:
Coaching / Tuition Classes,
Govt. / Competitive Examinations,
Workshops, Conferences,
Seminars, etc.
Film shooting & Advt. shoots
Video/ Audio Editing or Recording
Facilities include Ample Parking,
Cafeteria, and Power Backup.
Available on Weekends
and Holidays
Contact +91 99406 94545
to know more!

**குடோன் வாடகைக்கு**
3000 சதுர அடி
இடம்: காஞ்சிபுரம்,
பொன்னேரிக்கரை
Tata Car சர்வீஸ்
சென்டர் அருகில்.
Double Side
Road Access.
தொடர்புக்கு:
9840436193

**OFFICE SPACE FOR RENT**
AVADI PARUTHIPATTU




12000 SFT
Each Flr 4000 Sft
Tailor Made
1st, 2nd &
3rd FLOORS
Building With
Lift Facility
98713 10022 / 91768 00400

**அம்பத்தூர்**
விஜயராகவாசாரியார் தெரு
துலுகாத்தம்மன் கோவில் அருகில்
KALPAVRIKSHA - 3BHK FLATS

| 3BHK | 4 FLATS |
|---|---|
| 1200 sq.ft | ₹5500 Per sft. |

with CCP + LIFT
90929 93599

**CREST THE BEST**
@ ANAKAPUTHUR
SPOT BOOKING OFFERS




1 BHK FLAT ₹.22.99 L*
2 BHK FLAT ₹.38.50 L*
3 BHK FLAT ₹.56.99 L*
Onwards
visit our site
www.crest.homes
CREST HOMES PVT LTD
Elegant Affordable...
89399 65050

**Commercial Building for Rent**
THIRUNINDRAVUR
Main Road 3000Sft, 2nd Floor
Suit for Gym, Restaurant, Etc.,
REDHILLS MAIN ROAD
Main Road 2500Sft, Ground Floor,
(Via Redhills to Thiruvallur)
Suits for Showroom, Restaurant.
98412 38854

**AMBATTUR ESTATE**
Nr. BSNL
7200 Sft. Each Floor
1st & 2nd Floor
Lift, Parking.
Looking for Banks &
Corporate Clients.
Ct : 98846 35932

**பிரபல TYRE கம்பெனி**
Staff தங்குவதற்கு
மாதவரம், புழல்,
திருவொற்றியூர்
அருகில் பில்டிங்
வாடகைக்கு தேவை.
97899 74898 / 91765 21641

**MADIPAKKAM**



NEAR PONNIAMMAN
KOIL &
PRINCE SCHOOL
| OFF. MAIN ROAD |
1300 Sq.ft
₹1.49 Cr
NORTH FACING
SRI SAI HOUSING
98411 36844

**WANTED**
A Running Hospital
for LEASE / RENT /
PURCHASE
in and Around
Chennai.
Ct: 98430 64009

**VEMPATI REALTORS**
25years of Exp. in Construction
seek JOINT VENTURE PARTNERS
for our upcoming projects
in and around Chennai.
Interested Land Owners Contact:
VEMPATI REALTORS
94441 70437 | 96772 59869

**COMMERCIAL SPACE FOR RENT**
WAREHOUSE @
GERUGAMBAKKAM
12500 Sq.ft.
40 Feet Road, 12 Mtr Ht,
3 Phase EB, ACC Flooring
Call : 98408 93117
82202 20444

**NEW FLAT FOR SALE**
@ KEELKATTALAI



Near
JAYACHANDRAN TEXTILES
| 200ft Radial Road |
Opp.Metro &
Keelkattalai Bus Terminus
Ready to Occupy
2 BHK & 3 BHK
| CCP , LIFT, CCTV |
SRI SAI HOUSING
98411 36844

**சென்னையில்**
இருந்து 50 kms
தொலைவுக்குள்
Layouts தேவை.
Only marketing
(No out rate purchase)
9551559597

**Approved Layouts Wanted**
Our Co-operative
society requires
LAYOUTs approved
by CMDA/DTCP
in and around
Chennai,Tiruvallur
Kanchipuram,
Chengalpet, etc.
for Joint Venture
THE ROYAL LANDS & NEST
CO-OPERATIVE HOUSING SOCIETY
Plot No.1722, 6th Avenue,
Anna Nagar, Chennai - 40.
96000 43333


**வாடகைக்கு**
ஒரு ஏக்கர் நிலம் தேவை
சிமெண்ட் கான்கிரீட் கலவை
ஆலை (Ready Mix
Concrete Plant)
அமைப்பதற்குதொழில்துறை மற்றும் வகைப்படுத்தப்படாத நிலம் 1 ஏக்கருக்கு (43,560 சதுர அடி) குறைவில்லாத காலி இடம் மாசுகட்டுப்பாட்டு வாரிய விதிமுறைகளின்படி கீழ்கண்ட பகுதிகளில் 10 வருட குத்தகையுடன் கூடிய மாத வாடகைக்கு தேவை.
சென்னை படப்பை To
ஒரக்கடம் மற்றும்
பெருங்களத்தூர் To
மதுரவாயல்
பைபாஸ் அருகில்
உள்ள பகுதிகளில்
காலி இடம் தேவை.
தொடர்புக்கு:
9940641555
website: www.amix.in

**தனி வீட்டுமனை தேவை**
7 கிரவுண்டுக்கு மேல்
போயஸ் கார்டன், அடையாறு,
பெசன்ட் நகர், போட் கிளப்,
ரேஸ் கோர்ஸ், பாலவாக்கம்,
நீலாங்கரை
உரிமையாளர்கள் மட்டும்
தொடர்பு கொள்ளவும்
75500 00680


**கமர்ஷியல் பில்டிங் வாடகைக்கு**
Commercial Building Available for Rent on
GST road, near Ford Car
Factory, Maraimalai Nagar,
Total 10000sft (3 Floors) with
Lift, Power back up &
Car Parking
Suitable for Office, Furniture
Showroom, Hospitals,
Hostel and Banks.
Long Lease preferable.
Contact: 9840961251
Email: uandicars@gmail.com
Call: Monday to Saturday
9am to 7pm



# பல்சுவை களஞ்சியம்




## சுதந்திர போராட்டம் பற்றிய அரிய தகவல்கள்



81.பாபாசாஹேப் அம்பேத்கர், 1942 ஆம் ஆண்டு முதல் 1946 ஆண்டு வரை அரசு நிர்வாகக் குழுவில் எந்த துறைக்கு பொறுப்பு வகித்தார்?
தொழிலாளர் நலத்துறை

82.நாட்டின் சுதந்திரத்திற்கு முன்னோட்டமாக 1946ல் இடைக்கால அரசு அமைக்கப்பட்ட நாள் எது ?
02.09.1946

83.சத்தியாக்கிரக போராட்டத்தை பிரிட்டிஷார் அடக்கிய விதம் குறித்து எழுதி, உலக நாடுகளின் கருத்தை இந்திய சுதந்திர போராட்டத்திற்கு ஆதரவாக மாற்ற உதவிய அமெரிக்க பத்திரிகையாளர் யார்?
வெப் மில்லர்.

84.ஆந்திர கேசரி என போற்றப்படும் விடுதலை போராட்ட வீரர் யார்?
டி.பிரகாசம்

85.சுதந்திர இந்தியாவின் முதல் சுகாதாரத் துறை அமைச்சராக சேவையாற்றிய விடுதலை போராட்ட வீராங்கனை யார்?
ராஜகுமாரி அம்ரித் கௌர்

86.1757 பிளாசி போரில் கிழக்கிந்தியக் கம்பெனி படைகளுடன் போரிட்ட இந்திய மன்னர் யார்?
சிராஜ்-உத்-தௌலா

87.நாட்டின் முதலாவது சுதேச அறிவியல் இயக்கமான Indian Association for the cultivation of Science ஐ நிறுவியவர் யார்? டாக்டர் மகேந்திர லால் சர்கார்.

88.அரசியல் அமைப்பு சட்டத்தின்படி குடியரசுத் தலைவர் தேர்தலை ஒருங்கிணைத்து நடத்துவது நாடாளுமன்றமா இந்திய தேர்தல் ஆணையமா?
இந்திய தேர்தல் ஆணையம்.

89.குடியரசுத் தலைவர் தேர்தலில் வாக்களிக்க தகுதிபெறாத சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் யார்?
நியமன உறுப்பினர்கள்.

90.குடிமக்களின் அடிப்படை கடமைகள் வரையறுக்கப்பட்டுள்ள அரசியல் சாசனப்பிரிவு யாது? பிரிவு 51A

91.மகாத்மாகாந்தி தனது வாழ்க்கை தத்துவத்தில் சிறந்த தாக்கத்தை ஏற்படுத்தியதாக கூறும் The Kingdom of God is Within You என்ற நூலில் ஆசிரியர் யார்?
லியோ டால்ஸ்டாய்

92.இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் இஸ்ரோ தொடங்கப்பட்ட நாள் எது? 15.08.1969

93.இந்தியா இந்தியர்களுக்கே என்று முதலில் குரல் கொடுத்தார் யார்?
சுவாமி தயானந்த சரஸ்வதி.

94.குடியரசுத் துணைத் தலைவர் தேர்தலில் வாக்களிக்க தகுதியுடையோர் யார்?
நாடாளுமன்ற இரு அவைகளின் உறுப்பினர்கள் & நியமன உறுப்பினர்கள்.

95.எல்லை காந்தி என அழைக்கப்பட்டவர் யார்?
கான் அப்துல் கப்பார் கான்.

96.இந்திய ராணுவத்தின் அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரி அமைந்துள்ள இரு நகரங்கள் யாவை? சென்னை, கயா.

97.இந்திய அரசியல் சாசனத்தில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் எண்ணிக்கை என்ன?
105 (2022 ஆண்டு ஆகஸ்ட் வரை)

98.இந்திய கடற்படைகாக உள்நாட்டிலேயே கட்டப்பட்டு வரும் விமான தாங்கி கப்பல் எது? INS விக்ராந்த்

99.1927 ல் சைமன் குழுவை புறக்கணிக்கவும், தனி அரசியல் சாசனம் தயார் செய்யும் தீர்மானிக்கப்பட்ட இடம் யாது?
சென்னை.

100.1971 ஆம் ஆண்டு இந்திய கடற்படை பாகிஸ்தானின் 4 போர் கப்பல்களை முழ்கடித்த நாள் எந்த தினமாக கொண்டாடப்படுகிறது?
இந்திய கடற்படை தினம்


101.கார்கில் போரில் வெல்வதற்கான இந்திய ராணுவ நடவடிக்கையின் பெயர் யாது? ஆப்ரேஷன் விஜய்

102.மலத்தீவை கைப்பற்றிய முயன்ற அந்நிய குழுவிடமிருந்து அந்நாட்டை காக்க இந்தியா மேற்கொண்ட பாதுகாப்பு நடவடிக்கையின் பெயர் யாது? ஆப்ரேஷன் காக்டஸ் லில்லி

103.இந்தியாவின் முதல் மற்றும் இரண்டாம் பொக்ரான் அணுசோதனைகளின் சங்கீத பெயர்கள் யாவை? சிரிக்கும் புத்தர் & சத்தி

104.நாட்டின் முதல் சுதந்திரத்தை முன்னிட்டு, அப்போதைய பிரதமர் பண்டிட் ஜவஹர்லால் நேரு அளித்த புகழ்மிக்க உரையின் பெயர்?
Tryst with Destiny

## அந்தக் காலத்தில் குக்கிராமங்களில் வழக்கமாக இருந்த நடைமுறைகள்.



1.ஏப்ரல், மே மாதங்களில் பகலில் வெயில் அதிகமாக இருந்தால் இன்று கட்டாயம் மழை வரும் என்று கருதி வாசலில் இருக்கும் விறகுகளை எடுத்து திண்ணையில் வைத்து விடுவார்கள்.

2. ஏதேனும் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளவோ அல்லது வேறு காரணத்திற்காகவோ வெளியே செல்லும்போது பூனை குறுக்கே ஓடினால் அந்த நாள் நிகழ்ச்சியை ரத்து செய்து விடுவார்கள்.

3. அதேபோல் காலில் அணிந்திருக்கும் செருப்புக் கல்லில் பட்டு நடப்பவர்களை தடுமாற வைத்தாலும் அன்றைய நிகழ்ச்சியை ரத்து செய்து விடுவார்கள்.

4.அதேபோல் வெள்ளைப் புடவை அணிந்த பெண் நேர் எதிரே வந்தாலும் அது எவ்வளவு முக்கிய நிகழ்வில் கலந்து கொள்ள வேண்டியதாக இருந்தாலும் போக மாட்டார்கள். மீண்டும் வீடு திரும்பி தண்ணீர் குடித்துவிட்டு செல்பவர்களும் உண்டு.

5. இடது கண் துடித்தால் இன்று ஏதோ கெட்ட சம்பவம் நடக்கும் என்று நம்புவார்கள்.

6. வீட்டின் இடதுபுறத்திலோ அல்லது அவர்கள் வீட்டின் அமைப்புப்படி வலதுபுறத்திலோ பல்லி கத்தினால் அன்று ஏதேனும் துர் சம்பவம் நடக்கும் என்று நம்புவார்கள்.

7. பஞ்சாங்கத்தில் கீழ்நோக்கு நாள் பார்த்து நிலக்கடலை கிழங்கு வகைகள் ஆகியவற்றை பயிரிடுவார்கள். மேல்நோக்கு நாள் என்றால் கம்பு கேழ்வரகு மிளகாய் போன்றவற்றை பயிரிடுவார்கள்.

8. சாமக்கோடாங்கி என்பவன் நடு இரவில் வந்து ஒரு வீட்டின் முன்பு நின்று உங்களுக்கு நல்ல காலம் பொறக்குது.. நல்ல காலம் பொறக்குது.. என்பான். அதைக் கேட்டு மிகவும் மகிழ்ச்சி அடைவார்கள். அந்த வீட்டிற்கு அவன் காலையில் வந்து விடுவான். அவனுக்கு தானிய வகைகள் கொடுத்து மகிழ்வார்கள். கெட்டது நடக்கும் என்று சொன்ன வீட்டிற்கும் காலையில் செல்வான். அவன் சொன்னதை அப்படியே நம்பி அதற்குப் பரிகாரம் செய்ய வேண்டும் என்று கூறி அவன் கேட்பதை அப்படியே கொடுத்து விடுவார்கள். அந்தக் கோடாங்கி இரவில் வந்து உடுக்கை அடிக்கும் சப்தத்தை கேட்டாலே சிறுவர்களான நாங்கள் பயந்து நடுங்கி போர்வையை தலை முழுக்க போர்த்திக் கொண்டு விடுவோம்.

## மீம்ஸ்









## விடுகதை



| | |
|---|---|
| பறவைகள் எங்கிருந்து வருகின்றன? | முட்டையிலிருந்து. |
| எல்லா பிரியாணிக்கும் டெஸ்ட் வச்சா எந்த பிரியாணி பெயில் ஆகும்? | முட்டை பிரியாணி. |
| அண்ணனுக்கும் தம்பிக்கும் என்ன வித்தியாசம்? | வயசு வித்தியாசம். |
| ஒருத்தர் கல்யாணம் பண்றது விவசாய கடன் கேட்டார் ஏன்? | ஏன்னா அது ஆயிரம் காலத்துப் பயிர்ல. |
| எறும்பு பெருசா யானை பெருசா? | அப்படியெல்லாம் சொல்ல முடியாது மேடம் பிறந்த தேதி வேணும். |
| டாக்டர் என்ன நாய் கடித்து விட்டது எந்த இடத்தில? | பெருமாள் கோவில் சந்துல. |



## ஜோக்ஸ்


No - 2 வீட்டில்நடந்தது..
எங்கள் பையன் சிறுவயதில் சாப்பிட்டு கொண்டு இருந்தான்.
அப்போது சாப்பாட்டு தட்டில் அவர்கள் அப்பா முடி எடுக்க யார் முடி என்று கேட்க எல்லாரும் ஒவ்வொருத்தரைச் சொல்ல அவன் முடிவெள்ளையாக இருப்பதைப் பார்த்து வயசான முடி என்று சொல்ல அவன் சொல்லிய விதம் அனைவருக்கும் சிரிப்பு. என் அத்தையும் (மாமியார்) சேர்ந்து சிரித்தார்கள்.

**********************

ஆசிரியர்: தைக்கும் சித்திரைக்கும் என்ன வித்தியாசம்?
மாணவன்: தை மாசம் நாம சூரியனுக்கு பொங்கல் வைப்போம்.. சித்திரை மாசம் சூரியன் நம்மள பொங்கல் வைக்கும்
ஆசிரியர்: ???
கணவன் மனைவி
கடி ஜோக்ஸ்: எப்படி மாட்டியிருக்கேன் பார்த்தியாப்பா?

**********************

ஒருத்தன் இந்தாடா.. பொங்கல் சாப்பிடுனு ஒரு பாக்ஸை கொடுத்தான்.
திறந்து பார்த்தா பாக்ஸ் காலியா இருந்துச்சு.. என்னடா பொங்கலை காணோம்னு கேட்டேன்..
அதுக்கு அவன் சொல்றான்.. இதுதான் டா காணும் பொங்கல்னு சொல்லிட்டு போறான்..



**************

கணவன்: பக்கத்து வீட்டுக்காரன் சரியான பைத்தியமா இருப்பான் போல!

மனைவி: ஏன் என்னாச்சு?

கணவன்: நான் ஹேப்பி பொங்கல்னு சொல்றேன்.. அவன் ஹேப்பி இட்லினுட்டு போறான்.

***********

பேனை தொடைச்சி பரண்ல இருந்த சாமானை எல்லாம் இறக்கி, ஏத்தி, சுண்ணாம்பு அடிச்சு.. வீட்டைக் கழுவி.. ஒரு வாய் பொங்கல் சாப்பிடுறதுக்கு இந்த வீட்ல என்னவெல்லாம் பண்ண வேண்டியிருக்கு?
நல்ல இடமா பார்த்து கட்டி வைக்கணும் - அந்த ஒரு வார்த்தையை நம்பி ஏமாந்த 90ஸ் கிட்!




# விடுகதைகள்

1. சின்னத் தம்பிக்கு தொப்பியே வினை? அது என்ன?

2. தலை மட்டும் கொண்ட சிறகில்லாத பறவை தேசமெல்லாம் சுத்தும்?


3. உலகமெங்கும் படுக்கை விரித்தும் உறங்காமல் அலைகிறான். அவன் யார்?

4. காற்று வீசும் அழகான மரம் அது என்ன?
5. கட்டிய சேலையை அவிழ்க்க நினைத்தால் கண்ணீரும் கம்பலையும்தான்.

6. எப்போதும் காதருகில் ரகசியம் பேசிக் கொண்டிருப்பவள்?

நீங்கள் யோசித்திருந்த விடைகள் சரிதானா என்பதை சோதித்துக் கொள்ளுங்கள்.

1. தீக்குச்சி
2. தபால் தலை
3. கடல் அலை
4. சாமரம்
5. வெங்காயம்
6. செல்பேசி



# சிங்கத்தை வெற்றி கொண்ட கொசு

காட்டில் படுத்திருந்த சிங்கத்திடம் போய் ஒரு கொசு பேசத் தொடங்கியது.

"என்னைவிட நீ பலசாலி என்று நினைத்துக் கொண்டிருக்கிறாய் அல்லவா? அது மிகவும் தவறு.

"உன் வலிமை எப்படிப்பட்டது? பற்களை நறநற என்று கடித்து, நகங்களால் பிறாண்டுகிறாய், இது எப்படி இருக்கிறது என்றால், ஏழைப் பெண் தன் கணவனுடன் சண்டையிடுவதைப் போலத்தான் இருக்கிறது. சரி, வா, நாம் இருவரும் சண்டை போட்டுப் பார்ப்போம்" என்றது உடனே இது 'ங்ஙொய்' என்று ரீங்காரம் செய்து கொண்டு சிங்கத்தின் மீது பறந்து, அதன் நாசியிலும்,



தாடையிலும் கடிக்கத் தொடங்கியது.

சிங்கம் கொசுவை விரட்ட, தன் நகங்களால் முகத்தைப் பிறாண்டியும், தட்டியும் தோலைக் கிழித்துக் கொண்டதில், இரத்தம் வழிந்ததோடு, களைத்தும் போய் விட்டது.

வெற்றி முழக்கத்தோடு கொசு பறந்து சென்றது. சிறிது நேரத்தில் அந்த கொசு ஒரு சிலந்தி வலையில் சிக்கிக் கொண்டது. சிலந்தி கொசுவின் இரத்தத்தை உறிஞ்சியது.

"வலிமை மிகுந்த சிங்கத்தையே வெற்றி கொண்டு, இப்போது ஓர் சிறிய சிலந்தி என்னை வதைத்துக் கொண்டிருக்கிறதே" என்று கொசு வருந்தியது.

# வாழை மரம்



இலை தருவேன் இலை
தருவேன்
உட்கார்ந்து
ருசித்து சாப்பிட
தண்டெல்லாம் தான் தருவேன்
சமையல் செய்து மருந்தாய்
சாப்பிட
கனி தருவேன் கனி தருவேன்
இனிப்பாகச் சுவைத்துச்
சாப்பிட

நார் தருவேன் நார் தருவேன்
பூ கோர்த்திட, புடவையும்
நெய்திட
என்னை முழுமையாக
நான் தருவேன் மனிதன்
உனக்குத்தான்
என்னை நீரூற்றி வளர்த்துப்
பார்
எத்துனை நன்மை என்று
தெரிந்திட

**வி.பிரபாவதி**
மடிப்பாக்கம்

# மாற்றியோசி



முதலையும் குரங்கும்

ஓர் அழகிய கிராமத்தில் ஆறு ஒன்று ஓடிக்கொண்டிருந்தது. அந்த, ஆற்றங்கரையைச் சுற்றி பல நாவல் மரங்கள் இருந்தன. மரங்களில் குரங்குகள் பல தன் குட்டிகளுடன் வாழ்ந்து வந்தன. ஆற்றில் முதலைகள் வாழ்ந்து வந்தன .ஆற்றங்கரையைச் சுற்றி இருக்கும் நாவல் மரங்களில் பழங்கள் மிகவும் சுவையாக இருந்தன. இந்த ஆற்றங்கரையைச் சுற்றி இருந்த நாவல் மரங்களில் நாவல் பழங்கள் காய்த்து உதிர்ந்தன. இதை உண்டு முதலைகள் வாழ்ந்து வந்தன.

முதலைகளுக்குப் பசிக்கும் பொழுது குரங்குகளிடம் கேட்கும்.

குரங்கே!குரங்கே! கொஞ்சம் நாவல் பழங்களைப் பறித்து போட்டேன்.

குரங்குகளும் மரத்தில் ஏறி கிளைகளை உலுக்கும். முதலைகளுக்கும் தேவையான பழங்கள் கிடைக்கும் . அப்படியே, முதலைகளும் குரங்குகளும் நண்பர்களாக வாழ்ந்து வந்தனர்.

அந்த ஆற்றில் இருந்த இளைய முதலை ,வயதான முதலையிடம் கேட்டது, எத்தனை நாட்கள் தான் நாம் இப்படி நாவல் பழங்களை உண்டு வாழ்வது . நாவல் பழங்களை உண்ணும் குரங்குகளை உண்டால் என்ன ? என்று கேட்டது .

இதனைக் கேட்ட வயதான முதலை, நமக்கு உதவியவர்களையே உண்ண நினைப்பது எவ்வளவு பெரிய தவறு . நமக்கு, உதவியவர்களுக்கு ஒரு போதும் நாம் தீங்கு நினைக்க கூடாது என்று அறிவுரை கூறியது.

இதனைக் கேட்ட இளைய முதலைக்கு கோபம் வந்து நீருக்குள் சென்று விட்டது.


ஒரு நாள் ,திடீரென்று குரங்கு குட்டி ஒன்று, மரத்திலிருந்து ஆற்றில் விழுந்தது. வேகமாக வேகமாக வந்த முதலை, தன் தலையால் அந்த குட்டியைக் காப்பாற்றி ஆற்றங்கரையில் இருந்த தாய் குரங்கிடம் விட்டது.

சிறிது நேரத்தில் பதறிப் போன தாய் குரங்கு, தன் குட்டியைக் கண்டதும் குட்டியை அணைத்துக் கொண்டு முதலைக்கு நன்றி கூறியது.

அப்போதுதான் இளைய முதலை தன் தவறை உணர்ந்தது . உதவுவதில் உள்ள மகிழ்ச்சியும் அறிந்து கொண்டது .

அறநெறி : 1.பெரியோரின் அறிவுரை நன்மை பயக்கும் . 2.நமக்கு உதவியவர்களுக்கு ஒருபோதும் துரோகம் நினைக்கக் கூடாது .

# யானை.!




ஓடிவந்து பாருங்கோ
யானை வருகுது!
ஒய்யாரமாய் வீதியிலே
யானை வருகுது.!
கூடிநின்று பாருங்கோ
யானை வருகுது!
ஆடிஅசைந்து குளித்துவிட்டு
யானை வருகுது.!

யானைமேலே முத்து அமர்ந்து
சுத்திப் பாக்குறான்!
யானைக்கொரு வாழைப்பழம்
பூமா கொடுக்கிறாள்.!
ஆசிவாங்க ரெண்டுரூபா
கிட்டு கொடுக்கிறான்!
ஆனையம்மா ஆனையென்று
பாட்டுப் படிக்குறான்!

பாரம் சுமக்க வித்தைக்காட்ட
யானையைப் பிடிச்சு
சங்கிலியால் காலில்கட்டி
பாடுபடுத்துவார்!
கோவில் வாசல் வீதியிலே பிச்சை
எடுக்க வைக்கிறார்
குட்டியானை தாய் யானை
பிரித்து வைக்கிறார்!

காட்டில் யானை வாழும் இடத்தில்
வீடுகட்டுவார்!
நாட்டுக்குள்ளே யானைவந்தா
வெடி வெடித்து ஓட்டுவார்!
யானையதனின் மனக்குறையை
யார்தான் அறிவார்?
யானைகளை வாழவிட்டால்
மனிதர் வாழுவார்!

# பொது அறிவுப் பூங்கா




(1). கணிதத்தில் பூஜ்ஜியத்தை அறிமுகப் படுத்தியவர் ஆர்யப்பட்டர்.

(2).செல் போனின் தந்தை என்று அழைக்கப் படுபவர் மார்ட்டின் கூப்பர்.

(3). உலக வர்த்தக மையத்தின் தலைமையகம் சுவிற்சலாந்தின் 'ஜெனிவா' நகரில் உள்ளது.

(3).இந்தியாவில், முதல் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, 1881ஆம் ஆண்டு, பிரிட்டிஷ் கவனர்ஜெனரலாக இருந்த ரிப்பன் பிரபுவால் தொடங்கப்பட்ட பட்டது.

(4).15.8.1914 ல் சூயஸ் கால்வாய் கப்பல் போக்கு வரத்துக்காக திறக்கப்பட்ட பட்டது.

(5)சூயஸ் கால்வாய் 102 கி. மீ.நீளம் உள்ளது.

(6). இங்கிலாந்தின் "ஹரிபாட்டர்" நாவலாசிரியர் J. K.ரௌலிங்.

(6). இமய மலையின் அதி உயரமான "மவுண்ட் எவரெஸ்ட்" சிகரத்தை "டேன்சிங் ஹிலரி" என்பார்,1953ஆம் ஆண்டு ஏறி சாதனை புரிந்தார்.

(7). காகிதம் என்பது உருது சொல்.தாள் என்பது தான் சரியான தமிழ்ச் சொல்.

# புதிய பாப்பா பாட்டு

பாடி வரவேணும் பாப்பா!
பாசம் மிகுந்தவளே பாப்பா!
தேடி வந்த தெய்வம் பாப்பா!
தேசத்தின் எதிர்காலம் பாப்பா!

வீதியிலே விளையாடும்
பாப்பா! வேடிக்கை
உலகம் இது பாப்பா! கீழே
விழுந்தாலும் பாப்பா!
கிளர்ந்தெழ மறவாதேப்
பாப்பா!
உண்மை உனக்குத்துணைப்
பாப்பா.. உன்படிப்பு அறிவின்
ஒளி பாப்பா! பெண்மை
உயர்ந்ததடிப் பாப்பா! நீ
பேசுகின்ற தெய்வமடிப்
பாப்பா.!

பாலியல் சீண்டல்களைக்
கண்டால்.. நீ பயம்
கொள்ளலாகாது
பாப்பா! தோலை
உரித்துவிடப் பாப்பா..

நீ துப்பாக்கி ஏந்திடடிப்
பாப்பா.!
காலையெழுந்தவுடன் சிலம்பம்!
பின்பு கனிவு கொடுக்கும்
கலை பரதம்! மாலைமுழுதும்
ஈட்டி எறிவாய்.. நீ மாவீரம்
கொண்டவள்தான் பாப்பா!
வீதியில் தலை நிமிர்ந்து
நடப்பாய்! வீணர்களின்
பார்வைகளை தூசாக
மதிப்பாய்! ஆணுக்கு நிகராக
இருப்பாய்.! நீ ஆதிசக்தி
வடிவமடிப் பாப்பா!

வே.கல்யாண்குமார்.



# ஆந்தை

ஆந்தை ஆந்தை
ஆந்தை
அளவில் பெரிய
ஆந்தை
ஏந்தும் எலியை
உண்ண
இரவில் பார்க்கும்
ஆந்தை!

இறக்கை பெரிய
ஆந்தை
இரவில் வேட்டை
ஆடும்
பறக்கும் வேக மாக
பார்வைக் கூர்மை
உண்டு!

சாய்ந்து சாய்ந்து
பார்க்கும்
சத்தம் இன்றித்
தாக்கும்
ஆந்தை ஆந்தை
ஆந்தை
அலறல் சத்தம்
போடும்!



முனைவர்
**இராம.வேதநாயகம்.**



## 7 பேருக்கு பணி நியமன ஆணை



தமிழ்நாடு ஊர்காவல் படைக்காக தேர்வு செய்யப்பட்ட 50 திருநர்களில், 7 பேருக்கு பணி நியமன ஆணைகளை முதலமைச்சர் ஸ்டாலின் வழங்கினார்.

## முதல்வர் ஸ்டாலினை பொன்முடி சந்தித்து தமிழர் திருநாள் வாழ்த்து



முதல்வர் ஸ்டாலினை முன்னாள் அமைச்சர் பொன்முடி நேற்று சந்தித்து தமிழர் திருநாள் மற்றும் தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்தார்.

## மாணவிகளுக்கு இலவச மடிக்கணினி



தூத்துக்குடி ஏபிசி மகாலட்சுமி கல்லூரியில் நேற்று மாணவிகளுக்கு இலவச மடிக்கணினிகளை அமைச்சர் கீதாஜீவன் வழங்கினார்.

## சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி



தூத்துக்குடி வ.உ. சி கல்லூரியிலிருந்து சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணியை கலெக்டர் இளம்பகவத் கொடியசைத்து துவக்கி வைத்தார். தலைக்கவசம் அணிவதன் அவசியம் குறித்த விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை கலெக்டர் வழங்கினார்.

## ஆசிரியர்கள், அரசு ஊழியர்களை கலெக்டர் சுகுமார் பாராட்டினார்



திருப்பூரில் குறளாசிரியர்கள் மாநாட்டில் பங்கேற்க திருநெல்வேலி மாவட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட ஆசிரியர்கள், அரசு ஊழியர்களை கலெக்டர் சுகுமார் பாராட்டினார்.

## கிரிக்கெட் போட்டிகளில் வெற்றி பெற்ற அணிகளுக்கு அமைச்சர் பரிசுகள் வழங்கினார்



விருதுநகர் - செங்குன்றபுரத்தில் நடந்த திராவிடப் பொங்கல் விழா கிரிக்கெட் போட்டிகளில் வெற்றி பெற்ற அணிகளுக்கு அமைச்சர் தங்கம் தென்னரசு பரிசுகள் வழங்கினார்.

## டெல்லியில் அமைச்சர் அன்பில்மகேஷ் பொய்யாமொழி




தலைநகர் டெல்லியில் பன்னாட்டுப் புத்தகக் கண்காட்சியில் தமிழ்நாடு சார்பாக 12 அரங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இதில் தமிழ்நாட்டில் திராவிடமாடல் அரசு செய்துள்ள திட்டப்பணிகள் குறித்து அமைச்சர் அன்பில்மகேஷ் பொய்யாமொழி பேசினார்.

## விருதுநகரில் கலைஞர் நூலகம் திறப்பு



விருதுநகரில் கலைஞர் நூலகத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக அமைச்சர் தங்கம்தென்னரசு நேற்று திறந்துவைத்தார்.

## செங்கரும்பு அறுவடை



தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகை நாளை கொண்டாடப்படும் நிலையில், திருச்சி பகுதிகளில் நேற்று தீவிரமாக செங்கரும்பு அறுவடை நடந்தது.

## திருவம்பாவை ஊர்வலம்



போச்சம்பள்ளி வடமலம்பட்டி சர்வலிங்கேஸ்வரர் ஆலயத்தில் மார்கழி 29-ஆம் நாள் திருவம்பாவை ஊர்வலம்

## கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையத்தில் பேருந்துகள் இயக்கம்



திருவண்ணாமலை திண்டிவனம் சாலையில் ரூ.34 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையத்தில் நேற்று பேருந்துகளை இயக்கி வைத்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார் அமைச்சர் எ.வ.வேலு.

## வாயில் கருப்பு மாஸ்க் அணிந்து எட்டாவது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டனர்



சென்னை சைதாப்பேட்டை பனகல்மாளிகை அருகே ஊராட்சி செயலாளர் சங்கத்தினர் வாயில் கருப்பு மாஸ்க் அணிந்து நேற்று எட்டாவது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## பொங்கல் விழாவில் கயிறு இழுக்கும் போட்டி



கோவை கலெக்டர் அலுவலக வளாகத்தில் நடந்த பொங்கல் விழாவில் கயிறு இழுக்கும் போட்டியில் கலெக்டர் பவன்குமார் அணியுடன் மோதிய அரசு பெண் ஊழியர்கள்.

## கலெக்டர் அலுவலகத்தில் பொங்கல் விழா



கோவை மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நேற்று பொங்கல் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

## சமத்துவ பொங்கல் விழா கொண்டாட்டம்



திருவண்ணாமலை மாவட்டம் கலசபாக்கம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் சமத்துவ பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. உயர்திரு சட்டமன்ற உறுப்பினர் பெ.சு. தி. சரவணன் அவர்கள், ஒன்றிய செயலாளர், A.சிவக்குமார் அவர்கள், வழக்கறிஞர் சுப்பிரமணியன் அவர்கள், உடன் வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஒன்றிய பொறியாளர்கள், அலுவலக பணியாளர்கள் அனைவரும் சமத்துவ பொங்கல் விழாவை கொண்டாடினார்கள்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## சிறப்பாக பணிபுரிந்த காவல் துறையினருக்கு சான்றிதழ்



தூத்துக்குடி மாவட்டத்தில் சிறப்பாக பணிபுரிந்த காவல் துறையினருக்கு சான்றிதழ் வழங்கி எஸ்.பி. சிலம்பரசன் பாராட்டினார்.

## திருக்குறள் ஒப்பிதல் போட்டியில் வென்றவர்களுக்கு நூல் பரிசு



திருக்குறள் ஒப்பிததல் போட்டியில் வென்ற இந்திரா காயத்ரி,ஆனந்தி,பாத்திமா ஜேஸ்மின் ஆகியோருக்கு 13.01.2026 அன்று பாளையங்கோட்டை அரசு அருங்காட்சியகத்தில் நடந்த திருக்குறள் திருப்பணிகள் திட்ட 23-ஆவது வார நிகழ்வில் அருங்காட்சியக காப்பாட்சியர் பெர்க்குலின் இன்ஷா பொன்னாடை அணிவித்து நூல் பரிசு வழங்கினார். அருகில் திருக்குறள் திருப்பணிகள் திட்ட பயிலரங்குக் குழுத் தலைவர் கவிஞர் பே.இராஜேந்திரன் உள்ளார்.

## நடுநிலைப்பள்ளி நம்பியார் நகர் சமத்துவ பொங்கல் விழா





நகராட்சி நடுநிலைப்பள்ளி நம்பியார் நகரில் நாளது 13.1.2026 அன்று சமத்துவ பொங்கல் விழா வட்டார கல்வி அலுவலர்கள் நா. மணி ந.விமலா அவர்கள் முன்னிலையில் மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது மாணவர்களுக்கு பொங்கல் உணவு வழங்கியும் கரும்புகள் வழங்கியும் சிறப்பித்தனர்

## சமூக சேவகர்களுக்கு விவேக ரத்னா விருது



திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஸ்ரீகிருஷ்ணா கல்வி மையம் சார்பில் பாலுடையார் தெரு வீனஸ் வித்யாலயா பள்ளியில் நடைபெற்ற சுவாமி விவேகானந்தரின் பிறந்த நாள் விழாவில் சமூக சேவையாற்றிய சமூக சேவகர்களுக்கு விவேக ரத்னா விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. இந்த நிகழ்விற்கு ஓய்வு பெற்ற மாவட்ட கல்வி அலுவலர் மா.மங்கையர்க்கரசி தலைமை தாங்கினார். கவிஞர் பூங்குயில் சிவக்குமார், அருட்சகோதரி பிளோமினா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

## சமத்துவ நடைபயணத்தை மதுரையில் நிறைவு செய்தார் வைகோ



திருச்சியில் தொடங்கிய சமத்துவ நடைபயணத்தை மதுரையில் மதிமுக பொதுச் செயலாளர் வைகோ நிறைவு செய்தார். அங்கு நடந்த விழாவில் வைகோவுக்கு கவிஞர் வைரமுத்து, நடிகர் சத்யராஜ், மதுரைஎம்.பி.வெங்கேடசன் பாராட்டு தெரிவித்தனர்.

## ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு வானவில் மன்ற ஆண்டுத் திட்ட அட்டவணை வழங்கப்பட்டது



புதுக்கோட்டை மாவட்டம் மணமேல்குடி ஒன்றியம் தண்டலை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியின் வானவில் மன்ற செயல்பாடுகள் குறித்த ஆண்டு திட்ட அட்டவணையை ஒருங்கிணைப்பாளர் திருமதி ஜெனிட்டா பள்ளியின் பொறுப்பு தலைமை ஆசிரியர் சீனிவாசன் அவர்களிடம் வழங்கினார்.

**ரவுசு மணி**

ஏமாற்றுபவர்களை கண்டு ஏமாந்து போன உள்ளம் நல்லவர்களை கண்டால் நம்ப மறுக்கிறது நெஞ்சம்



V. முத்து ராமகிருஷ்ணன்

## செய்யாறு கலைஞர் சிலை அருகே 15-ம் நாள் அன்னதானம் !

**செய்யாறு, ஜன. 14:**

செய்யாறு கலைஞர் சிலை அருகே 15ம் நாளான நேற்று வெம்பாக்கம் முன்னாள் ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர் மாமண்டூர் ராஜி ஏற்பாட்டில் அன்னதானம் வழங்கப்பட்டது. செய்யாறு சட்டமன்ற உறுப்பினர் ஜோதி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சியை துவக்கி வைத்தார்.

இதையடுத்து தலைமை செயற்குழு உறுப்பினர்கள் வேல்முருகன், வெங்கடேஷ் பாபு, வெம்பாக்கம் முன்னாள் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் மாமண்டூர் ராஜி ஆகியோர் பொதுமக்கள் 500க்கும் மேற்பட்டவர்களுக்கு



அன்னதானம் வழங்கினர். இந்நிகழ்ச்சியில் ஜே.சி.கே.சீனுவாசன், ஞானவேல், ராஜ்குமார், அசோக், பாலாஜி, செல்வக்குமார், வெம்பாக்கம் கார்த்திகேயன், கோவேந்தன், ரவி, ராம் ரவி, சூரிய பிரகாஷ், கபடி ஞானமுருன், ராஜலட்சுமி அண்ணாதுரை உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## தண்டலை நடுநிலைப்பள்ளியில் சமத்துவ பொங்கல் விழா கொண்டாட்டம்



புதுக்கோட்டை மாவட்டம் மணமேல்குடி ஒன்றியம் தண்டலை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் சமத்துவ பொங்கல் விழா தலைமை ஆசிரியர் சந்திரசேகரன் வழிகாட்டுதலின்படி பள்ளியில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. பொங்கல் விழாவில் ஆசிரியர்கள் சீனிவாசன், தேன்மொழி, சரண்ராஜ் ,பிரதீபா மற்றும் சத்துணவு பணியாளர்கள் உமா மற்றும் உதவியாளர்கள் காலை உணவுத் திட்ட பணியாளர்கள், பெற்றோர்கள் மாணவர்கள் கலந்து கொண்டனர்

# வேலைவாய்ப்பு கார்னர்

## ராணுவத்தில் 381 பணியிடங்கள்



இந்திய ராணுவத்தில் காலியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

எஸ்.எஸ்.சி., டெக்னிக்கல் 379, டெக்னிக்கல் இல்லாத பணி 2 என மொத்தம் 381 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: பி.இ., / பி.டெக்.,

வயது: 20 - 27 (1.10.2026ன் படி)

தேர்ச்சி முறை: சான்றிதழ் சரிபார்ப்பு, நேர்முகத்தேர்வு, மருத்துவசோதனை விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

விண்ணப்பக்கட்டணம்: இல்லை

கடைசிநாள்: 5.2.2026

விவரங்களுக்கு: joinindianarmy.nic.in

## விளையாட்டு ஆணையத்தில் பயிற்சியாளர் பணி

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

ஹாக்கி, கால்பந்து, கபடி உட்பட 24 விளையாட்டு பிரிவுகளில் பயிற்சியாளர் 30, பயிற்சியாளர் (பாரா) 4 என மொத்தம் 34 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: பட்டப்படிப்பு, விளையாட்டு பயிற்சி டிப்ளமோ கூடுதல் தகுதி: தமிழக அணி சார்பில் விளையாட்டு போட்டிகளில் பங்கேற்றிருக்க வேண்டும்.

வயது: பொது பிரிவு 21 - 45, மற்றவை 21 - 50 (1.7.2026ன் படி)

தேர்ச்சி முறை: எழுத்துத்தேர்வு, சான்றிதழ் சரிபார்ப்பு

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லை ன்

கடைசிநாள்: 25.1.2026

விவரங்களுக்கு: sdat.tn.gov.in

# சுற்றுலா: பெங்களூரில் பார்க்க வேண்டிய முக்கிய இடங்கள்



பூங்கா நகரமான பெங்களூரில், பார்த்து ரசிக்க, பொழுது போக்க அற்புதமான இடங்கள் உள்ளன. இந்த நகரின் அழகை காண, உள்நாடு நாடு, வெளிநாடுகளில் இருந்து லட்சக்கணக்கான சுற்றுலா பயணியர் வருகின்றனர். மாதக்கணக்கில் தங்கி, சுற்றுலா தலங்கள், கோவில்கள் உட்பட, பல்வேறு இடங்களை கண்டு ரசித்து விட்டு, நிறைவான மனதுடன் சொந்த ஊருக்கு திரும்புகின்றனர்.

'சிலிகான்சிட்டி' என, அழைக்கப்படும், பெங்களூருவின் சூழ்நிலை மிகவும் இனிமையானது. வார இறுதியில் தங்கள் குழந்தைகளுடன், ஜாலியாக பொழுது போக்க விரும்புவோர், முக்கியமான ஐந்து இடங்களுக்கு செல்லலாம்.

### பெங்களூரு அரண்மனை

சுற்றுலா பயணியர் பார்க்க வேண்டிய இடங்களில், பெங்களூரு அரண்மனையும் ஒன்றாகும். அன்றைய கட்டடகலைவல்லுநர்களின் திறமைக்கு, உதாரணமாக அமைந்துள்ளது. மிகவும் அற்புதமாக தோன்றும் அரண்மனை, 1878ம் ஆண்டில் மைசூரு மஹாராஜா சாமராஜ உடையாரால் கட்டப்பட்டது.

அரண்மனையில் கோட்டை கோபுரங்கள், மரத்தால் வடிவமைக்கப்பட்ட உள்கட்டமைப்பு, கலை நுணுக்கமான சிற்பங்கள் அடங்கிய கலையரங்கம் உள்ளது. வெட்டிங் போட்டோ ஷூட் செய்ய விரும்புபவர்களுக்கு தகுதியான இடமாகும். திரைப்பட படப்பிடிப்புகளும் இங்கு நடப்பதுண்டு.

காலை 10:00 மணி முதல், மாலை 5:30 மணி வரை அரண்மனையை பார்க்க அனுமதி உள்ளது. உள்நாட்டு சுற்றுலா பயணியருக்கு 230 ரூபாய், வெளிநாட்டினருக்கு 460 ரூபாய் நுழைவு கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

பெங்களூரின் அனைத்து பகுதிகளில் இருந்தும், பி.எம்.டி.சி., பஸ் வசதி உள்ளது. ஆட்டோ, கேப் போன்ற வாடகை வாகனங்களும் இயக்கப்படுகின்றன. கூடுதல் தகவல் வேண்டுவோர் 080 - 2336 0818 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

### லால்பாக்

பெங்களூரில் நீங்கள் பார்த்தே ஆக வேண்டிய மற்றொரு இடம் லால்பாக் பூங்கா. இது கர்நாடகா மட்டுமல்ல, இந்தியாவிலேயே பிரசித்தி பெற்ற இடங்களில் ஒன்றாகும். இது சாதாரண பூங்கா அல்ல. அழகான வண்ண மலர்கள் கொட்டி கிடக்கும் அற்புதமான இடம்.

இப்பூங்கா ஹைதர் அலியால் உருவாக்கப்பட்டது. அதன்பின் அவரது மகன் திப்பு சுல்தானால் மேம்படுத்தப்பட்டது. இங்கு பல ஆயிரக்கணக்கான அபூர்வ மரங்கள், மருத்துவ குணம் கொண்ட செடிகள், அலங்கார பூச்செடிகள் கண்களை கொள்ளை கொள்கின்றன. பல்வேறு வெளிநாடுகளின் தாவரங்களையும் இங்கு காணலாம்.

லால்பாக் பூங்காவில் உள்ள ஏரி, அமைதியான சூழ்நிலையை ஏற்படுத்துகிறது. அமைதி, இயற்கை எழில் சூழ்ந்த அற்புதமான இடம்.

இந்த சூழ்நிலையை அனுபவிக்க சுற்றுலா பயணியர் வருகின்றனர். தினமும் காலை, மாலை ஆயிரக்கணக்கான இளைஞர்கள், இளம் பெண்கள், மூத்த குடிமக்கள் நடை பயிற்சிக்கு வருகின்றனர். கோடை விடுமுறையை குட்டீஸ்களுடன் கொண்டாட ஏற்ற இடம்.

நேரம்: காலை 6:00 மணி முதல், இரவு 7:00 மணி வரை அனுமதி உள்ளது. பெரியவர்களுக்கு 20 ரூபாய் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. 12 வயதுக்கு உட்பட்ட சிறார்களுக்கு அனுமதி இலவசம். கேமரா கொண்டு செல்ல 50 ரூபாய் கட்டணம். வில்சன் கார்டன் அருகில் லால்பாக் உள்ளது.

பி.எம்.டி.சி., பஸ்கள், வாடகை வாகனங்கள் இயக்கப்படுகின்றன. கூடுதல் தகவல் வேண்டுவோர் 080-2657 1925, 080 - 2657 8184 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

### பஸ்லிகா தேவாலயம்

பெங்களூரின், சிவாஜி நகர் பஸ் நிலையம் அருகிலேயே செயின்ட் மேரிஸ் பஸ்லிகா தேவாலயம் அமைந்துள்ளது. இது பெங்களூரின் மிகவும் பழமையான தேவாலயங்களில் ஒன்றாகும். உயரமான கோபுரங்கள், வண்ண மயமான கண்ணாடி ஜன்னல்கள் சுற்றுலா பயணியரை வெகுவாக கவர்ந்திழுக்கிறது.

செப்டம்பரில் மேரி மாதா பிறந்த நாளை முன்னிட்டு, பத்து நாட்கள் கொடியேற்றத்துடன் திருவிழா கொண்டாடப்படுகிறது. இதில் பல ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்கின்றனர். பத்து நாட்களும் இப்பகுதி திருவிழா கோலம் பூணும். சுற்றுலா பட்டியலில் இந்த தேவாலயத்தையும் சேர்த்து கொள்ளுங்கள்.

### பெங்களூரு கோட்டை

உங்கள்பிள்ளைகளுக்குவரலாற்றை அறிமுகம் செய்ய விரும்பினால், பெங்களூரின் கோட்டைக்கு அழைத்து செல்லுங்கள். மன்னராட்சியின் சிறப்புகளை உணர்த்தும் வகையில் கம்பீரமாக நிற்கிறது.

பெங்களூரு கோட்டையை, 1537ல் விஜயநகர சாம்ராஜ்ய அரசர் கெம்பேகவுடா கட்டினார். மண்ணால் கட்டப்பட்ட கோட்டையை, 18ம் நூற்றாண்டில், ஹைதர் அலி கற்கோட்டையாக மாற்றி கட்டியதாக வரலாற்று வல்லுநர்கள் கூறுகின்றனர். காலப்போக்கில் கோட்டையின் பல பகுதிகள் சேதமடைந்தன என்றாலும், தன் கம்பீரத்தை இழக்கவில்லை. பெங்களூரு உருவாக அஸ்திவாரமாக இருந்ததே கோட்டைதான்.

நேரம்: காலை 8:30 மணி முதல், மாலை 5:30 மணி வரை. இந்தியாவை சேர்ந்தர்கள் 15 ரூபாய், வெளிநாட்டினர் 200 ரூபாய் கட்டணம் செலுத்த வேண்டும். கூடுதல் தகவல் வேண்டுவோர் 63607 57500 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

### திப்பு சுல்தான் அரண்மனை

பெங்களூரின் மத்திய பகுதியில், திப்பு சுல்தானின் அரண்மனை உள்ளது. கோடைக்காலத்தில் அவர் இங்கு ஓய்வு எடுக்க இந்த அரண்மனையை கட்டினாராம். தேக்கு மரத்தால் கட்டப்பட்ட இரண்டு மாடிகள் கொண்ட, அற்புதமான கட்டடமாகும். கடந்த 18ம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. ஹிந்து மற்றும் இஸ்லாமிக் பாணியில் தோற்றமளிக்கிறது.

தொடரும்....

## வங்கிகள் 4 நாட்கள் செயல்படாது: பணம்-காசோலை பரிவர்த்தனை கடுமையாக பாதிக்கும்

**சென்னை, ஜன.14:**

பொங்கல் பண்டிகை நாளை மறுநாள் (வியாழக்கிழமை) கொண்டாடப்படுகிறது. மறுநாள் 16-ந்தேதி மாட்டுப்பொங்கல், 17-ந்தேதி காணும் பொங்கல் கொண்டாடப்பட உள்ளது.

பொங்கலையொட்டி அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றும் பொதுத்துறை நிறுவன ஊழியர்களுக்கு 5 நாட்கள் விடுமுறை விடப்பட்டுள்ளது.

வங்கிகள் 4 நாட்கள் செயல்படாது என்று அறிவித்துள்ளது. 15-ந்தேதி பொங்கல் முதல் 18-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை வரை தொடர்ந்து விடுமுறை நாட்கள் வருவதால் அனைத்து தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளும் தனியார் வங்கிகளும் செயல்படாது.

வங்கிகள் 4 நாட்கள் மூடப்படுவதால் சேவைகள் கடுமையாக பாதிக்கக்கூடும். பணம் மற்றும் காசோலை பரிவர்த்தனை பல ஆயிரம் கோடி நடைபெறாமல் முடங்கும். இன்று (புதன்கிழமை) மட்டுமே வங்கி செயல்படும் என்பதால் வர்த்தக பிரமுகர்கள், தொழில் நிறுவனங்கள் தங்களுடைய வங்கி சார்ந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தயாராகி வருகின்றனர்.

## ஊர்க்காவல் படையில் தேர்வான திருநங்கைகளுக்கு நியமன ஆணைகளை வழங்கினார் மு.க.ஸ்டாலின்

**சென்னை, ஜன.14:**

அரசு சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பு பின்வருமாறு;

"2025-2026-ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்ட உரையில் நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் அவர்களால், திருநங்கையருக்கு உரிய விழிப்புணர்வையும், வேலைவாய்ப்புகளில் சமவாய்ப்பையும் வழங்குவதன் மூலம் அவர்களுடைய கண்ணியமான வாழ்வினை உறுதி செய்திட முடியும் என்று அரசு உறுதியாக நம்புகிறது.

இந்த உயர் நோக்கத்தினை முன்னிறுத்தி, ஓர் முன்னோடி முயற்சியாக திருநங்கையர்களுக்கு உரிய பயிற்சிகள் வழங்கி ஊர்க்காவல் படையில் ஈடுபடுத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் முதற்கட்டமாக 50 திருநங்கைகளைக் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, காவல்துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநரின் பரிந்துரையில், ஊர்க்காவல்படை - காவல்துறை தலைவர் அவர்களால் 50 திருநங்கைகளை தமிழ்நாடு ஊர்க்காவல் படையில் உறுப்பினராக நியமிக்க பயிற்சி அளிக்கப்பட்டு, அவர்களுக்கு ஊர்க்காவல்படை உறுப்பினர் நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக சென்னை பெருநகர காவல் ஆணையரகம், ஆவடி மற்றும் தாம்பரம் ஆகிய காவல் ஆணையரகங்களிலிருந்து 7 திருநங்கையர்களுக்கு ஊர்க்காவல்படை உறுப்பினர் நியமன ஆணைகளை முதலமைச்சர் வழங்கினார்.

முதற்கட்டமாக தமிழ்நாடு ஊர்க்காவல் படையில் சென்னையில் 5 நபர்கள், தாம்பரத்தில் 15 நபர்கள், ஆவடியில் 10 நபர்கள், மதுரையில் 7 நபர்கள், கோயம்புத்தூரில் 7 நபர்கள் மற்றும் திருச்சிராப்பள்ளியில் 6 நபர்கள், என மொத்தம் 50 திருநங்கைகள் காவல்துறையுடன் இணைந்து போக்குவரத்து மேலாண்மை, திருவிழாக் காலங்களில் கூட்டநெரிசலைக் கட்டுப்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ளும் வகையில் உரிய பயிற்சிகள் வழங்கி ஊர்க்காவல் படையில் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளனர்.

## 'சென்னை சங்கமம் 2026' கலைவிழா: முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் அழைப்பிதழ் வழங்கிய கனிமொழி

**சென்னை, ஜன.14:**

'சென்னை சங்கமம் 2026' கலை விழாவிற்கான அழைப்பிதழை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் கனிமொழி எம்.பி. இன்று வழங்கினார்.

இது தொடர்பாக வெளியான அறிக்கையில், சென்னை ஆழ்வார்பேட்டை யில் உள்ள முகாம் அலுவலகத்தில், முதல்-அமைச்சர் மு.க. ஸ்டாலினை திமுக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற திமுக குழுத் தலைவருமான கனிமொழி நேரில் சந்தித்து, தமிழர் திருநாளையொட்டி நாளை தொடங்கவிருக்கும் 'சென்னை சங்கமம் 2026' கலைவிழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார்.

சென்னையில், தை மாதம் தொடக்கத்தில் தமிழர் திருநாளான பொங்கல் திருவிழாவின் போது, 'சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழா' என்ற மாபெரும் கலைவிழா கடந்த நான்கு ஆண்டுகளாக நடத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டிற்கான கலை நிகழ்ச்சிகள் நாளை (14/01/2026) மாலை 6 மணிக்கு, எழும்பூர் ராஜரத்தினம் விளையாட்டரங்கில் முதல்-அமைச்சர் மு.க. ஸ்டாலின் தொடங்கி வைக்கவுள்ளார்.


சென்னை சங்கமம் கலைவிழாவை கனிமொழி எம்.பி. ஒருங்கிணைத்து வருகிறார். இந்த விழாவில் தமிழ்நாட்டின் புகழ் பெற்ற 250 கலைஞர்கள் இணைந்து வழங்கும் மாபெரும் இசை மற்றும் நடன நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற உள்ளன.

சென்னை மாநகரின் 20 இடங்களில் (15/01/2026) முதல் (18/01/2026) வரை கலை நிகழ்ச்சிகள் நடைபெறும். சென்னையில் ஆண்டுதோறும் தை மாதம் "சென்னை சங்கமம் - நம்ம ஊரு திருவிழா" என்ற நிகழ்ச்சி சிறப்பான முறையில் நடத்தப்பட்டு வருகிறது.

தொடக்க விழாவை அடுத்து, 'சென்னை சங்கமம்- நம்ம ஊரு திருவிழா' கலை நிகழ்ச்சிகள் பெசன்ட் நகர் எலியட்ஸ் கடற்கரை, திருவான்மியூர் கடற்கரை, மெரினா கடற்கரை, வள்ளுவர் கோட்டம், செம்மொழி பூங்கா, ராயபுரம் ராபின்சன் பூங்கா, எழும்பூர் அரசு அருங்காட்சியகம். ராஜரத்தினம் விளையாட்டரங்கம், தி.நகர் நடேசன் பூங்கா, ராஜா அண்ணாமலைபுரம் - அரசு இசைக் கல்லூரி வளாகம், கிண்டி கத்திபாரா சந்திப்பு, அண்ணாநகர் கோபுரப் பூங்கா, கோயம்பேடு ஜெய் நகர் பூங்கா, அசோக் நகர் மாநகராட்சி விளையாட்டு திடல், வளசரவாக்கம் லேமேக் பள்ளி வளாகம், ஜாபர்கான் பேட்டை மாநகராட்சி விளையாட்டுத் திடல், கொளத்தூர் மாநகராட்சி விளையாட்டு மைதானம், ஆவடி படைத்துறை உடைத் தொழிற்சாலை, பல்லாவரம் கன்டோன்மெண்ட் பூங்கா, தாம்பரம் வள்ளுவர் குருகுலம் பள்ளி மைதானம் ஆகிய 20 இடங்களில் 15.1.2026 முதல் 18.1.2026 வரை நான்கு நாட்கள் மாலை 6.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை நடைபெற உள்ளன.

## சென்னையில் காணும் பொங்கல் பாதுகாப்பு பணியில் 16 ஆயிரம் போலீஸார்: மெரினாவில் குளிக்க தடை

**சென்னை, ஜன.14:**



காணும் பொங்கல் பாதுகாப்புப் பணியில் சென்னையில் 16 ஆயிரம் போலீஸார் ஈடுபட உள்ளனர். குழந்தைகள் காணாமல் போவதைத் தடுக்க சிறப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு, மெரினாவில் குளிக்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பொங்கல் பண்டிகையின் ஒரு பகுதியாக காணும் பொங்கல் வரும் 17-ம் தேதி (சனிக்கிழமை) கொண்டாடப்படுகிறது. அன்றைய தினம் பொதுமக்கள் கடற்கரை, பூங்கா உட்பட பொழுதுபோக்கு மையங்களுக்கு செல்வது வழக்கம்.

மக்கள் அதிகளவில் கூடும் இடங்களில் எவ்வித அசம்பாவிதமும் நிகழாமல் இருக்க காவல் ஆணையர் அருண் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்துள்ளார். குறிப்பாக நகர் முழுவதும் 16 ஆயிரம் போலீஸார் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். இவர்களுடன் 1,500 ஊர்க்காவல் படையினர் ஒருங்கிணைந்து பணியாற்ற உள்ளனர்.

மெரினா கடற்கரையில் மட்டும் சுமார் 3 லட்சம் பேர் திரள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே உழைப்பாளர் சிலை முதல் காந்தி சிலை வரை 3 தற்காலிக காவல் கட்டுப்பாட்டறைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த பகுதிகளில் உள்ள 7 சர்வீஸ் சாலைகளின் நுழைவு வாயில்களில் காவல் உதவி மையங்கள் அமைக்கப்படும். அவசர மருத்துவ உதவிக்காக மருத்துவக் குழுவினருடன் 8 ஆம்புலன்ஸ் வாகனங்கள் மற்றும் மீட்புப் பணிக்காக தீயணைப்பு வீரர்கள் அடங்கிய 2 தீயணைப்பு வாகனங்கள் தயார் நிலையில் நிறுத்தி வைக்கப்படும். மீட்புப் பணிக்காக மோட்டார் படகுகள் மற்றும் 200-க்கும் மேற்பட்ட நீச்சல் தெரிந்த தன்னார்வலர்கள் தயார் நிலையில் இருப்பார்கள்.

## கொடைக்கானலில் படகு சவாரி தற்காலிகமாக நிறுத்தம்

**திண்டுக்கல், ஜன.14:**

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் தமிழகத்தின் முக்கிய சுற்றுலா தலமாக திகழ்கிறது. இங்கு நகரின் மையப்பகுதியில் உள்ள நட்சத்திர ஏரியில் படகு சவாரி உள்ளது. தினமும் ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் கொடைக்கானலுக்கு வந்த இயற்கை அழகை ரசித்து ஏரியில் படகு சவாரி செய்து மகிழ்ச்சியடைகின்றனர். இந்நிலையில், கொடைக்கானலில் இன்று படகு சவாரி தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டுள்ளது. பலத்த காற்றுடன் தொடர்ந்து மழை பெய்து வரும் நிலையில் பாதுகாப்பு கருதி படகு சவாரி ரத்து செய்யப்பட்டுள்ளது.

## நீலகிரி: கொட்டும் மழையில் மாணவர்களுடன் உரையாடிய ராகுல் காந்தி

**நீலகிரி, ஜன.14:**



காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல்காந்திதமிழகம்வந்துள்ளார். அவர் நீலகிரி மாவட்டம் கூடலூரில் உள்ள தனியார் பள்ளியின் பொன்விழாவில் பங்கேற்றுள்ளார். இந்த விழாவில் ராகுல் காந்தி உரையாற்றினார். பின்னர், பள்ளி மாணவ, மாணவியருடன் ராகுல் காந்தி உரையாடி வருகிறார். நிகழ்ச்சி நடைபெறும் பள்ளியை சுற்றியுள்ள பகுதிகளில் மழை பெய்து வருகிறது. ஆனாலும், கொட்டும் மழையில் நனைந்தபடி ராகுல் காந்தி மாணவ, மாணவியருடன் உரையாடி வருகிறார்.

மாணவ, மாணவியர் கேட்கும் கேள்விகளுக்கு ராகுல் காந்தி பதில் அளித்து வருகிறார். பள்ளி மாணவ, மாணவியருடன் உரையாடியப்பின்னர் பள்ளிக்கு அருகே காங்கிரஸ் கட்சி சார்பில் நடைபெறும் பொங்கல் விழாவில் ராகுல் காந்தி கலந்து கொள்ள உள்ளார்.

## கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவிலில் தை அமாவாசை விழா: 18-ந்தேதி நடக்கிறது

**குமரி, ஜன.15:**

கன்னியாகுமரியில் உலகப்புகழ்பெற்ற பகவதி அம்மன் கோவில் உள்ளது. இந்த கோவிலில் ஆண்டுதோறும் தை மாதம் அமாவாசை தினத்தன்று தை அமாவாசை விழா கோலாகலமாகக் கொண்டாடப்படுவது வழக்கம். அதேபோல இந்த ஆண்டு வருகிற 18-ந்தேதி தை அமாவாசை விழா கொண்டாடப்படுகிறது. இதையொட்டி அன்று அதிகாலை 4.30 மணிக்கு கோவில் நடை திறக்கப்பட்டு விஸ்வரூப தரிசனமும் நிர்மால்ய பூஜையும் நடக்கிறது.

அதன் பிறகு அம்மனுக்கு பல வகையான திரவியங்களால் அபிஷேகம் நடக்கிறது. அதைத்தொடர்ந்து தீபாராதனையும், உஷ பூஜை, ஸ்ரீ பலி பூஜை, நிவேத்ய பூஜை, உச்சிகால பூஜை, உச்சிக்கால தீபாராதனை போன்ற அனைத்து பூஜைகளும் நடைபெறும். அதன் பிறகு பக்தர்கள் கோவிலுக்குள் தரிசனத்துக்கு அனுமதிக்கப்படுகிறார்கள்.

# பொங்கல் விழாவன்று தமிழ்நாட்டில் மழைக்கு வாய்ப்பில்லை: வானிலை ஆய்வு மையம்




**சென்னை, ஜன.14:**

தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகை வருகிற 15-ந்தேதி கொண்டாடப்பட உள்ளது. பொங்கல் பண்டிகைக்கு மழை பெய்யுமா? பெய்யாதா? என்ற சிந்தனை பொதுமக்களிடம் மேலோங்கி இருந்தது. இந்நிலையில், தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் வருகிற 15-ந்தேதி (பொங்கல் பண்டிகை) முதல் 19-ந்தேதி வரை வறண்ட வானிலை நிலவும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது.

இதுகுறித்து வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பில்,

மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக இன்று (14-01-2026) தமிழகத்தில் ஒரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். அதிகாலை வேளையில் ஒரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும்.

நாளை (15-01-2026) தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும். அதிகாலை வேளையில் ஒரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும்.

16-01-2026 முதல் 19-01-2026 வரை: தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

இன்று (14-01-2026) வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகாலை வேளையில் ஒரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 30 டிகிரி செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 22-23 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.

## க்ரைம் கார்னர்

### 29 ஆபாச வீடியோ... குறுஞ்செய்தி: போலீஸ்காரர் மீது இளம்பெண் பாலியல் புகார்

**தென்காசி, ஜன.14:**

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையத்தை சேர்ந்த 33 வயது இளம்பெண் ஒருவர் தனது கணவருடன் வந்து கலெக்டரிடம் மனு அளித்தார். அந்த மனு குறித்து அவர் கூறியதாவது:- கடந்த 2023-ம் ஆண்டு எனது கணவர் ஒரு புகார் அளிப்பதற்காக புளியங்குடி போலீஸ் நிலையத்துக்கு சென்றார். அப்போது அங்கு பணியில் இருந்த போலீஸ்காரர் ஒருவர் எனது கணவரின் செல்போனை பறித்து வைத்துக்கொண்டு அனுப்பிவிட்டார்.

அதில் இருந்து எனது செல்போன் எண்ணை எடுத்துக்கொண்டு, எனக்கு திடீரென 29 ஆபாச வீடியோக்கள் அனுப்பினார். 2024-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை ஆபாச குறுஞ்செய்திகளையும் அனுப்பி பாலியல் தொல்லை கொடுத்தார். இதுகுறித்து எனது கணவரிடம் கூறினேன். அவர் 2024-ம் ஆண்டில் சம்பந்தப்பட்ட போலீஸ் நிலையத்திற்கு நேரில் சென்று புகார் அளித்தார். ஆனால் போலீசார் புகார் வாங்க மறுத்ததோடு எனது கணவரை மிரட்டினர். கடந்த 11.12.2025 அன்றும் எனது செல்போன் எண்ணிற்கு மீண்டும் போலீஸ்காரர் ஆபாச வீடியோ அனுப்பினார். அவை அனைத்தையும் தற்போது நான் 'ஸ்கிரீன் ஷாட்' ஆதாரமாக எடுத்து வைத்துள்ளேன்.

அவை அனைத்தையும் பதிவுசெய்து மேலதிகாரிகளுக்கு பதிவு தபால் மூலம் அனுப்பினேன். ஆனாலும் புகார் மீது போலீசார் நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே, இதுகுறித்து நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். இந்த புகார் மனுவை பெற்றுக்கொண்ட கலெக்டர் கமல்கிஷோர், இதுகுறித்து உரிய விசாரணை நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தார்.

### ஓடும் காரில் பிளஸ் 2 மாணவி கூட்டு பாலியல் வன்கொடுமை - அதிர்ச்சி சம்பவம்

**ஜெய்ப்பூர், ஜன.14:**

ராஜஸ்தான் மாநிலம் பிகனேர் மாவட்டம் நபசர் கிராமத்தை சேர்ந்த பிளஸ் 2 மாணவி கடந்த 6ம் தேதி காலை வீட்டில் இருந்து பள்ளிக்கு புறப்பட்டு சென்றார். கிராமத்தில் உள்ள சாலையில் நடந்து சென்றபோது மாணவியை பின் தொடர்ந்து கார் வந்துள்ளது. அப்போது திடீரென காரில் இருந்து இறங்கிய 2 இளைஞர்கள் மாணவியை காரில் கடத்திச்சென்றனர்.

பின்னர், ஓடும் காரில் வைத்து மாணவியை கூட்டு பாலியல் வன்கொடுமை செய்துள்ளனர். கார் நபசர் கிராமத்திற்கு அருகே உள்ள கிராமத்தில் சென்றபோது மாணவி கூச்சலிட்டுள்ளார். அப்போது, கிராம மக்கள் காரை இடைமறித்து மாணவியை மீட்டனர். அதேவேளை, மாணவியை கூட்டு பாலியல் வன்கொடுமை செய்த இளைஞர்கள் இருவரும் தப்பிச்சென்றனர். மேலும், மாணவியின் பெற்றோருக்கு உடனடியாக தகவல் கொடுத்தனர். அதேவேளை, பிளஸ் 2 மாணவியை காரில் கூட்டு பாலியல் வன்கொடுமை செய்த சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட மாணவியின் பெற்றோர் நேற்று போலீசில் புகார் அளித்தனர். புகாரின் அடிப்படையில் வழக்குப்பதிவு செய்த போலீசார், மாணவியை கூட்டு பாலியல் வன்கொடுமை செய்துவிட்டு தப்பிச்சென்ற 2 இளைஞர்களை தீவிரமாக தேடி வருகின்றனர்.

# பிஎஸ்எல்விசி62 ராக்கெட் தோல்வி: பசிபிக் கடலில் விழுந்த செயற்கைக்கோள்கள்

**ஸ்ரீஹரிகோட்டா, ஜன.14:**

இந்த ஆண்டின் முதல் ராக்கெட்டான பிஎஸ்எல்வி சி 62 இன்று விண்ணில் செலுத்தப்பட்ட சில நிமிடங்களிலேயே தனது பாதையில் இருந்து விலகிச் சென்றதால் தோல்வியில் முடிந்ததாக அறிவிக்கப்பட்டது. இது இஸ்ரோ விஞ்ஞானிகளை மட்டுமின்றி, நாட்டு மக்களையும் சோகத்தில் ஆழ்த்தியது.

ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் ஆய்வு மைய முதல் ஏவுதளத்தில் இருந்து காலை 10.18 மணிக்கு 18 செயற்கைக்கோளுடன் புறப்பட்ட பிஎஸ்எல்வி சி62 ராக்கெட், 8-வது நிமிடத்தில் தனது பாதையில் இருந்து விலகிச் சென்றது.





இந்த ராக்கெட்டில் பிரதானமாக இஓஎஸ்-என் 1 (அன்விஷா) செயற்கைக்கோள் இருந்தது. மேலும், இந்தியா மற்றும் வெளிநாடுகளுக்கு சொந்தமான 17 சிறிய செயற்கைக்கோள்களும் இணைக்கப்பட்டிருந்தது.

பிரதானசெயற்கைக்கோளான இஓஎஸ்-என்1 தரையில் இருந்து 505 கி.மீ. தொலைவில் சூரிய ஒத்திசைவு சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால், புறப்பட்ட 8-வது நிமிடத்தில் ராக்கெட்டின் 3-வது நிலையில் (பி.எஸ்.3) ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாக உந்து விசை குறைந்ததால், குறிப்பிட்ட பாதையில் இருந்து ராக்கெட் விலகிச் சென்றது.

8 மாதங்களில் 2-வது தோல்வி

ராக்கெட்டில் இருந்த 18 செயற்கைக்கோள்களும் புவிஈர்ப்பு பகுதிக்குள்ளேயே அப்போது இருந்ததால், அனைத்தும் பசிப்பிக் பெருங்கடலில் விழுந்து விட்டது. திட்டமும் தோல்வியில் முடிந்ததாக இஸ்ரோ தலைவர் நாராயணன் அறிவித்தார்.

ஏற்கனவே, கடந்த ஆண்டு ஏவப்பட்ட பிஎஸ்எல்வி சி61 ராக்கெட்டும் இதே பிரச்சினையால் தோல்வியில் முடிந்தது குறிப்பிடத்தக்கது.

# மனநலம் பாதித்த பெண்ணை கற்பழித்த மர்ம நபர்கள்... ஓடும் வாகனத்தில் இருந்து தூக்கி வீசிய கொடூரம்




**பெங்களூரு, ஜன.14:**

கர்நாடக மாநிலம் பாகல்கோட்டை மாவட்டம் உனகுந்து தாலுகா பேவூர் கிராமத்தில் 40 வயது மனநலம் பாதிக்கப்பட்ட பெண் ஒருவர் தனது சகோதரருடன் வசித்து வருகிறார். அந்த பெண்ணுக்கு கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு திருமணமானது. பின்னர் அவர் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்பது அறிந்ததும் அவரது கணவர் விவாகரத்து பெற்று விட்டு சென்றார்.

இந்தநிலையில் கூடலமங்களா கிராஸ் அருகே உள்ள தேசிய நெடுஞ்சாலையில் அந்த பெண் அரை நிர்வாண கோலத்தில் மயங்கிய நிலையில் கிடந்தார். அதைப்பார்த்த அந்த வழியாக சென்றவர்கள் உனகுந்து போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். விரைந்து வந்த போலீசார் அந்த பெண்ணை மீட்டு சிகிச்சைக்காக உனகுந்து அரசு ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர்.

அங்கு அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்த டாக்டர்கள் மேல் சிகிச்சைக்காக பாகல்கோட்டை அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அந்த பெண்ணுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் அந்த பெண்ணை பரிசோதித்த டாக்டர்கள் அவர் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு இருப்பதை அறிந்தனர். அதுமட்டுமின்றி அவரை கற்பழித்த மர்ம நபர்கள், ஓடும் வாகனத்தில் இருந்து கீழே தூக்கி வீசி இருப்பதாகவும், அதனால் அந்த பெண் பலத்த காயம் அடைந்திருப்பதாகவும் டாக்டர்கள் தெரிவித்தனர்.

இதனை கேட்ட அந்த பெண்ணின் சகோதரர் அதிர்ச்சியடைந்து உனகுந்து போலீசில் புகார் அளித்தார். அதன்பேரில் வழக்குப்பதிவு செய்த போலீசார், நெடுஞ்சாலையில் உள்ள கண்காணிப்பு கேமராவில் பதிவான காட்சிகளை ஆய்வு செய்து, மனநலம் பாதிக்கப்பட்ட பெண்ணை கற்பழித்த மர்ம நபர்களை வலைவீசி தேடி வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# விண்ணில் ஏவப்பட்ட பிஎஸ்எல்வி-சி62 திசை மாறியது: ஆய்வு நடந்து வருவதாக இஸ்ரோ விளக்கம்

**சென்னை, ஜன.14:**

ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து நேற்று விண்ணில் செலுத்தப்பட்ட பிஎஸ்எல்வி-சி62 ராக்கெட், தொழில்நுட்பக் கோளாறு காரணமாக திட்டமிட்ட இலக்கை சென்றடையாமல் திசை மாறியது. ராக்கெட்டின் 3-வது நிலையில் பிரச்சினை கண்டறியப்பட்டுள்ளது. இதுகுறித்து ஆய்வு செய்யப்பட்டு வருவதாக இஸ்ரோ தலைவர் வி.நாராயணன் தெரிவித்துள்ளார்.



இந்திய பாதுகாப்புத் துறையின் பயன்பாட்டுக்காக பாதுகாப்பு ஆராய்ச்சி, மேம்பாட்டு நிறுவனம் (டிஆர்டிஓ) உருவாக்கியுள்ள இஓஎஸ்-என் 1 (அன்விஷா) என்ற அதிநவீன செயற்கைக் கோள், சென்னை ஆர்பிட் எய்டு ஸ்டார்ட்-அப் நிறுவனம் தயாரித்துள்ள 'ஆயுள்சாட்' செயற்கைக் கோள், ஸ்பெயின் நாட்டின் ஸ்டார்ட்-அப் நிறுவனம் உருவாக்கிய 'கிட்' எனும் பூமிக்கு மீண்டும் திரும்பி வரும் விண்கலம் உள்ளிட்ட 15 செயற்கைக் கோள்களை பிஎஸ்எல்வி-சி62 ராக்கெட் மூலம் நேற்று காலை விண்ணில் செலுத்த இஸ்ரோ திட்டமிட்டிருந்தது. புவி கண்காணிப்பு மற்றும் ராணுவப் பாதுகாப்புக்கான தரவுகளை நிகழ் நேரத்தில் வழங்கக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டிருந்த இஓஎஸ்-என்1 செயற்கைக் கோளை 505 கி.மீ. தொலைவு கொண்ட சூரிய ஒத்திசைவு சுற்றுப்பாதையில் நிலைநிறுத்த இஸ்ரோ விஞ்ஞானிகள் திட்டமிட்டிருந்தனர். பிஎஸ்எல்வி-சி62 ராக்கெட் 44.4 மீட்டர் உயரம் கொண்டது. 2 திரவ எரிபொருள் இன்ஜின், 2 திட எரிபொருள் இன்ஜின் என மொத்தம் 4 நிலைகளை உள்ளடக்கியது. இந்நிலையில், திட்டமிட்டபடி ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து 15 செயற்கைக் கோள்களுடன் பிஎஸ்எல்வி-சி62 ராக்கெட் நேற்று காலை 10.18 மணிக்கு விண்ணில் ஏவப்பட்டது. புறப்பட்ட 8 நிமிடங்களில் முதல் 2 நிலைகள் வெற்றிகரமாக விடுவிக்கப்பட்டன. பின்னர் 3-ம் நிலையான பிஎஸ் 3 அமைப்பு செயல்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டது.

அப்போது, எதிர்பாராதவிதமாக ராக்கெட்டில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டதாக தெரிகிறது. திட்டமிட்ட இலக்கை விட்டு திசை மாறிய ராக்கெட், அடுத்த சில நிமிடங்களில் கட்டுப்பாட்டு மையம் உடனான தொடர்பை இழந்தது. இதையடுத்து, இத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியவில்லை என இஸ்ரோ அறிவித்துள்ளது.

இதுகுறித்து இஸ்ரோ தலைவர் வி.நாராயணன் கூறும்போது, "பிஎஸ்எல்வி-சி62 ராக்கெட்டின் 3-வது நிலையின் செயல்பாடுகள் இறுதி வரை திட்டமிட்டபடி நிகழ்ந்தன. ஆனால், அதன் பின்னர், நிர்ணயிக்கப்பட்ட பாதையில் இருந்து ராக்கெட் விலகியது. இதுகுறித்து முழுமையாக ஆய்வு செய்து, பின்னர் தகவல் தெரிவிக்கப்படும்" என்றார். கடந்த 2025 மே மாதம், புவிகண்காணிப்பு செயல்பாடுகளுக்காக அதிநவீன இஓஎஸ்-09 ரிசாட்-1பி என்ற செயற்கைக் கோளை விண்ணில் நிலைநிறுத்துவதற்காக அனுப்பப்பட்ட பிஎஸ்எல்வி-சி61 ராக்கெட்டும் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை சென்றடையவில்லை. அதிலும் 3-வது நிலையில்தான் பிரச்சினை ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

## தமிழ்நாடு இ பேப்பர்.காம் — மார்கழி-30

**14-01-2026**

### திருப்பாவை - பாடல் -30

வங்கக்கடல் கடைந்த மாதவனை கேசவனை
திங்கள் திருமுகத்து சேயிழையார் சென்றிறைஞ்சி
அங்கப் பறைகொண்ட வாற்றை அணி புதுவை
பைங்கமலத் தண்தெரியல் பட்டர்பிரான் கோதை சொன்ன
சங்கத்தமிழ்மாலை முப்பதும் தப்பாமே
இங்குஇப் பரிசுரைப்பார் ஈரிரண்டு மால்வரைத்தோள்
செங்கண் திருமுகத்து செல்வத்திருமாலால்
எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர் எம்பாவாய்..

**பொருள்:** அலைகள் நிறைந்த பாற்கடலைக் கடைந்த மாதவனும், கேசி என்ற அரக்கனைக் கொன்ற கேசவனுமான கண்ணனை, சந்திரனைப் போன்ற அழகு முகம் கொண்ட அணிகலன் அணிந்த பெண்கள் சிரமப்பட்டு தரிசித்து, பாவை விரத பலன் பெற்ற விபரத்தை ஸ்ரீவில்லிப்புத்தூரில் பிறந்த, குளிர்ந்த தாமரை போன்ற முகத்தையுடைய பெரியாழ்வாரின் பெண்ணான ஆண்டாள், இனிய தமிழில் முப்பது பாடல் பாடி பாமாலை தொடுத்திருக்கிறாள். இதனை படிப்பவர்கள், உயர்ந்த தோள்களை யுடையவனும், அழகிய கண்களைக் கொண்ட திருமுகத்தை உடையவனும், செல்வத்துக்கு அதிபதியுமான திருமாலின் ஆசியுடன் எங்கு சென்றாலும் செல்வச்செழிப்பு பெற்று இன்பமுடன் வாழ்வர்.

**விளக்கம்:** இறைவனிடம் எந்த பொன், பொருளையும் வேண்டி பாவை நோன்பினை இருக்கவில்லை. இறைவனின் அருள் ஒன்று மட்டுமே போதும் என கூறிய ஆண்டாள் நாச்சியார், நிறைவு பாடலில் திருப்பாவை பாடல்களை படித்தால் என்ன பலன் கிடைக்கும் என்ற நூல் பலனையும் சொல்லி முடித்துள்ளார். எந்த ஒரு காரியத்தை செய்தாலும் அதனால் என்ன பலன் நமக்கு கிடைக்கும் என அறிந்த பிறகு தான் பலரும் அந்த காரியத்தில் இறங்கும் அளவிற்கு இன்றைய உலகம் மாறி விட்டது. இதை முன்பே அறிந்தவர் போல ஆண்டாள் திருப்பாவையை படித்தால் என்னவெல்லாம் கிடைக்கும், அதை படிக்கும் அடியவர்களின் வாழ்க்கை எப்படி மாறும் என்பதையும் தெரிவாக விளக்கி உள்ளார்..

### திருப்பள்ளியெழுச்சி - பாடல்-10

புவனியில் போய் பிறவாமையில் நாள் நாம்
போக்குகின்றோம் அவமே இந்தப் பூமி
சிவன் உய்யக் கொள்கின்றவாறென்று நோக்கி
திருப்பெருந்துறையுறைவாய் திருமாலாம்
அவன் விருப்பெய்தவும் மலரவன் ஆசைப்படவும்
நின்னலர்ந்த மெய்க்கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமுதே! பள்ளி எழுந்தருளாயே!

**பொருள்:** திருப்பெருந்துறையில் வசிக்கும் சிவனே! பூமியில் பிறந்த அடியார்களெல்லாம் சிவனால் ஆட்கொள்ள படுகிறார்கள். ஆனால், நாம் பூமியில் பிறக்காத காரணத்தால் வீணாக நாளை போக்குகின்றோம் என்று திருமாலும், அவனது உந்தித்தாமரையில் பிறந்த மலரவனான பிரம்மாவும் வருந்துகின்றனர். எனவே நீ, உண்மையான கருணையுடன் இந்த உலகிற்கு வந்து எங்களை ஆட்கொள்ள வல்லவனாய் இருக்கிறாய். எவருக்கும் கிடைக்காத அமுதமே! நீ பள்ளி எழுந்தருள்வாயாக!

**விளக்கம்:** வாழும் போது மட்டுமின்றி வாழ்க்கைக்கு பிறகும் அனைவரும் வைகுண்டம் அல்லது பிரம்மலோகத்திற்கு சென்று சுகமாக வாழ வேண்டும் என்று தான் ஆசைப்படுகிறார்கள். நம்முடைய கர்ம வினைகள் நீங்கி, பிறவி பிணியில் இருந்து விடுபட்டு, இறைவனின் திருவடியை அடைய யாரும் நினைப்பதில்லை. அப்படி மறுபிறவி இல்லாத நிலையை பெற வேண்டும் என்றால், இந்த பூமியில் பிறந்த சிவனை வணங்க வேண்டும். அது மட்டும் தான் ஒரே வழி என்கிறார் மாணிக்கவாசகர். தாங்கள் செய்த கர்மங்களுக்கான வினைகளை அனுபவித்து கழிக்காத வரையில் மீண்டும் மீண்டும் பிறவி ஏற்பட்டுக் கொண்டே இருக்கும்.

## வணிகச் செய்திகள்

### பொங்கல் பண்டிகையை முன்னிட்டு சென்னையில் 4 நாட்கள் வண்ணமீன் வர்த்தக திருவிழா

**சென்னை, ஜன.14:**

சென்னை மாவட்ட ஆட்சியர் ரஷ்மி சித்தார்த் ஜகடே வெளியிட்ட செய்திக் குறிப்பு: கொளத்தூர் பகுதியில் உற்பத்தி செய்யும் வண்ணமீன்களை எளிதாக சந்தைப்படுத்திடவும், வண்ணமீன் வர்த்தகத்தை அதிகரித்திடவும், சர்வதேச தரத்திலான வண்ணமீன் வர்த்தக மையம் ரூ.53.50 கோடி செலவில், வில்லிவாக்கம், சிவசக்திநகர் பகுதியில் 3.94 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளது. பொங்கல் பண்டிகையை முன்னிட்டு வண்ணமீன் வர்த்தக திருவிழா வரும் 15-ம் தேதி முதல் 18-ம் தேதி வரை 4 நாட்களுக்கு கொளத்தூர் வண்ணமீன் வர்த்தக மையத்தில் காலை 10 மணி முதல் இரவு 8 மணிவரை நடைபெற உள்ளது. இத்திருவிழாவில், வண்ணமீன் காட்சியகம், பேச்சு போட்டி, ஓவிய போட்டி, கோலப் போட்டி, விநாடி வினா போட்டி மற்றும் இதர பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. இத்திருவிழாவில், பொதுமக்கள் கலந்துகொள்வதற்கு இலவச அனுமதி உண்டு. எனவே, பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் வண்ணமீன் வர்த்தக திருவிழா-வில் கலந்து கொண்டு பயன்பெறலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### தங்கம் விலை புதிய உச்சம்: ஒரே நாளில் பவுனுக்கு ரூ.1,760 உயர்வு

**சென்னை, ஜன.14:**

கடந்த சில மாதங்களாகவே தங்கம் விலை அதிகரித்துவருகிறது. சில நேரங்களில் விலை குறைந்தாலும், மீண்டும உயர்ந்து விடுகிறது.

இந்த நிலையில், (ஜன.12) தங்கம் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.220 உயர்ந்து ஒரு கிராம் ரூ13,120-க்கும் பவுனுக்கு ரூ.1,760 உயர்ந்து ஒரு பவுன் 1,04,960க்கும் விற்பனையாகிறது. வெள்ளி விலையும் உயர்ந்துள்ளது. அந்த வகையில், நேற்று கிராமுக்கு ரூ.12 உயர்ந்து ஒரு கிராம் ரூ.287, கிலோவுக்கு அதிரடியாக ரூ.12,000 உயர்ந்து ஒரு கிலோ ரூ.2,87,000க்கு விற்பனை செய்யப்படுகிறது. 18 காரட் தங்கம் விலை கிராமுக்கு ரூ.180 உயர்ந்து ஒரு கிராம் ரூ.10,945க்கும் சவரனுக்கு ரூ.1,440 உயர்ந்து ஒரு சவரன் ரூ.87,560க்கும் விற்பனை செய்யப்படுகிறது. 11ம் தேதி சென்னையில் ஆபரணத்தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.100 அதிகரித்து ஒரு சவரன் ரூ.1,03,200க்கு விற்பனை செய்யப்பட்டது. இந்த நிலையில் ஒரே நாளில் தங்கம் விலை ரூ.1,760 உயர்ந்துள்ளது வாடிக்கையாளர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# ஜெர்மன் அதிபருடன் பிரதமர் மோடி உயர்மட்ட அளவிலான ஆலோசனை

**ஆமதாபாத், ஜன.14:**

ஜெர்மனியின் அதிபர் பிரெட்ரிக் மெர்ஸ், பிரதமர் மோடி விடுத்த அழைப்பை ஏற்று இந்தியாவில் 2 நாள் அரசு முறை பயணம் மேற்கொண்டுள்ளார். இதற்காக இன்று காலை இந்தியாவுக்கு வருகை தந்த அவருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. கடந்த ஆண்டு அதிபராக பொறுப்பேற்ற பின் ஆசிய நாடுகளுக்கு மெர்ஸ் மேற்கொள்ளும் முதல் பயணம் இதுவாகும்.

இந்நிலையில், பிரதமர் மோடி மற்றும் ஜெர்மனி அதிபர் மெர்ஸ் இருவரும் குஜராத்தின் ஆமதாபாத் நகரில் உள்ள சபர்மதி ஆசிரமத்துக்கு இன்று காலை சென்று மகாத்மா காந்திக்கு அஞ்சலி செலுத்தினர். இதன்பின்னர் இருவரும், சர்வதேச பட்ட திருவிழாவை துவக்கி வைத்து பட்டம் விட்டும் மகிழ்ந்தனர்.



இதன்பின் இரு தலைவர்களும் காந்திநகரில் உள்ள மகாத்மா மந்திர் கூட்ட அரங்கில், சமீபத்தில் 25 ஆண்டுகளை நிறைவு செய்த இந்திய-ஜெர்மனி மூலோபாய நட்புறவில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை குறித்து மறுஆய்வு செய்தனர்.

இதன்பின்னர், இதே கூட்ட அரங்கில் இரு தலைவர்களும், தங்களுடைய உயர்மட்ட குழுவினருடன் இருதரப்பு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். அப்போது, இந்தியாவிற்கும் ஜெர்மனிக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது பற்றிய ஆலோசனைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

இரு தலைவர்களும் தற்போது நடந்து வரும் வர்த்தகம், முதலீடு, தொழில்நுட்பம், கல்வி, திறன் மேம்பாடு மற்றும் செயல்பாடு ஆகியவற்றில் உள்ள ஒத்துழைப்பை மறுஆய்வு செய்தனர்.

ராணுவம், பாதுகாப்பு, அறிவியல், புதிய கண்டுபிடிப்பு, ஆராய்ச்சி மற்றும் நிலையான வளர்ச்சி ஆகியவற்றில் ஒத்துழைப்புடன் செயல்படுவதற்கான வழிகளை ஆய்வு செய்தனர். இந்த ஆலோசனை கூட்டத்தில் மத்திய வெளிவிவகார துறை மந்திரி ஜெய்சங்கர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் மற்றும் வெளிவிவகார துறைக்கான செயலாளர் விக்ரம் மிஸ்ரி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## முன்னாள் துணை ஜனாதிபதிக்கு உடல்நலக்குறைவு - மருத்துவமனையில் அனுமதி

**புதுடெல்லி, ஜன.14:**

முன்னாள் துணை ஜனாதிபதி ஜெக்தீப் தன்கர் (வயது 74). இவர் 2022 முதல் 2025ம் ஆண்டுவரை நாட்டின் துணை ஜனாதிபதியாக இருந்தார். அதன்பின்னர், தனிப்பட்ட காரணங்களுக்காக ஜூலை 21ம் தேதி துணை ஜனாதிபதி பதவியை தன்கர் ராஜினாமா செய்தார்.

இந்நிலையில், முன்னாள் துணை ஜனாதிபதி தன்கர் கடந்த சனிக்கிழமை வீட்டில் வைத்து 2 முறை மயக்கமடைந்துள்ளார். இதனை தொடர்ந்து தன்கருக்கு திடீரென உடல்நலக்குறைவு ஏற்பட்டது. இதையடுத்து, தன்கர் டெல்லியில் உள்ள எய்ம்ஸ் மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டார். அவருக்கு எம்.ஆர்.ஐ. ஸ்கேன் எடுக்கப்பட்டது. தற்போது தன்கர் நலமுடன் உள்ளதாகவும் அவர் மருத்துவமனையில் டாக்டர்கள் கண்காணிப்பில் இருப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது .

## பெங்களூரு புறப்பட்ட இண்டிகோ விமானம் வாரணாசியில் அவசர அவசரமாக தரையிறக்கம்

**லக்னோ, ஜன.14:**

உத்தரபிரதேச மாநிலம் கோரக்பூரில் இருந்து கர்நாடகாவின் பெங்களூருவுக்கு நேற்று இரவு இண்டிகோ விமானம் புறப்பட்டது. விமானத்தில் 216 பேர் பயணித்தனர்.

விமானம் உத்தரபிரதேச வான்பரப்பில் நடுவானில் பறந்துகொண்டிருந்தபோது திடீரென விமானத்தில் பறவைகள் மோதின. இதனால், விமானத்தின் புகப்பு பகுதி சிறிது சேதமடைந்தது. இதையடுத்து, விமானத்தை உடனடியாக உத்தரபிரதேசத்தின் வாரணாசி விமான நிலையத்தில் விமானி தரையிறக்கினார். இந்த சம்பவத்தில் பயணிகள் யாருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. இதையடுத்து மாற்று விமானம் மூலம் பயணிகள் பெங்களூரு அனுப்பி வைக்கப்பட்டனர்.

## உடல்நிலையில் முன்னேற்றம்; சபரிமலை தந்திரி கண்டரரு ராஜீவரு மீண்டும் சிறையில் அடைப்பு

**சபரிமலை, ஜன.14:**

சபரிமலையில் தங்கம் அபகரிப்பு வழக்கில் தந்திரி கண்டரரு ராஜீவரு அதிரடியாக கைது செய்யப்பட்டார். பின்னர் அவர் கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் அவருக்கு நேற்று முன்தினம் திடீரென உடல் நலக்குறைவு ஏற்பட்டது.

அதை தொடர்ந்து அவர் திருவனந்தபுரம் அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். பின்னர் டாக்டர்களின் ஆலோசனை பேரில் அவர் திருவனந்தபுரம் அரசு மருத்துவக்கல்லூரி ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டார். அங்கு தீவிர சிகிச்சை பிரிவில் அவர் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது.

இந்தநிலையில் நேற்று அவருக்கு மீண்டும் பரிசோதனை நடத்தப்பட்டது. அப்போது அவரது உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டதை உறுதி செய்த டாக்டர்கள் அது தொடர்பான சான்றிதழை வழங்கினர். இதையடுத்து சிறப்பு புலனாய்வு பிரிவு அதிகாரிகள் தந்திரியை மீண்டும் திருவனந்தபுரம் பூஜப்புரை சிறையில் அடைத்தனர்.

## இன்று மகரஜோதி திருவிழா: திருஆபரணம் பந்தளத்தில் இருந்து புறப்பட்டது

**சபரிமலை, ஜன.14:**

சபரிமலையில் மகர ஜோதி விழா இன்று நடைபெறுவதை முன்னிட்டு ஐயப்பனுக்கு அணிவிப்பதற்கான திருஆபரணங்கள் பந்தள அரண்மனையில் இருந்து நேற்று புறப்பட்டது. சபரிமலையில் முக்கிய நிகழ்வான மகரஜோதி விழா நாளை (ஜன.14) நடைபெற உள்ளது.

இதற்காக கடந்த 30-ம் தேதி நடைதிறக்கப்பட்டு தொடர் வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. மகரஜோதியன்று ஐயப்பனுக்கு அணிவிப்பதற்கான திருஆபரணம், பந்தளம் அரண்மனை வலியகோயில் ஸ்ரீதர்மசாஸ்தா கோயில் வைப்பறையில் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

மகரஜோதியை முன்னிட்டு நேற்று இந்த திருஆபரணத்துக்கு சிறப்பு வழிபாடு நடைபெற்றது. தொடர்ந்து ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. பல்வேறு கோயில்களைக் கடந்து பாரம்பரியப் பாதை வழியாக 14-ம் தேதி மாலை சரங்குத்திக்கு வந்ததும், அங்கு தேவசம்போர்டு அதிகாரிகள் சார்பில் வரவேற்பு அளிக்கப்படும். திருஆபரண ஊர்வலம் கடந்து சென்ற பிறகே நிலக்கல், பம்பையில் இருந்து பக்தர்கள் மலையேற அனுமதிக்கப்படுவர். திருஆபரணப் பெட்டியை பக்தர்கள் தொடவோ, ஊர்வலம் செல்லும் பாதையில் குறுக்கிடவோ, கூட்டமாக நிற்கவோ தடை விதிக்கப்பட்டுள்ளது.

மகர ஜோதியன்று மாலை 6.25 மணிக்கு ஐயப்பனுக்கு சிறப்பு ஆபரணங்கள் அணிவிக்கப்பட்டு சிறப்பு தீபாராதனை வழிபாடுகள் நடைபெறும். பின்பு பொன்னம்பல மேட்டில் தெரியும் மகரஜோதியை சந்நிதானத்தில் இருந்தபடி பக்தர்கள் தரிசிப்பர். சந்நிதானத்தில் இருந்தபடி மகர ஜோதியைக் காண 14 இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

இதேபோல் வண்டிப் பெரியாறு, புல்மேடு, பஞ்சாலிமேடு, சத்திரம், பருந்தும்பாறை, அய்யன்மலை, பஞ்சுப்பாறை, இலவுங்கல், அட்டத்தோடு, நீலிமலை உள்ளிட்ட பல பகுதிகளில் இருந்து பொன்னம்பலமேட்டில் தெரியும் ஜோதியை பக்தர்கள் தரிசனம் செய்யலாம். மகரஜோதியை பார்ப்பதற்காக மரத்தில் ஏறவோ, அனுமதிக்கப்பட்ட இடங்களைக் கடந்து காட்டுக்குள் செல்லவோ கூடாது என்று வனத்துறையினர் தெரிவித்துள்ளனர். ஜோதியை தரிசித்ததும் சந்நிதானத்தில் இருந்து பாண்டித்தாவளம் தரிசன வளாகத்தின் பின்புறம் இருந்து பம்பைக்கு திரும்பலாம்.

இதேபோல் மாளிகைப்புரம் இறங்குபாதை, கேஎஸ்இபி. சந்திப்பு வழியாகவும் பம்பைக்கு திரும்பலாம். 19-ம் தேதி வரை பக்தர்கள் தரிசனத்துக்கு அனுமதிக்கப்படு வர். 20-ம் தேதி பந்தள ராஜகுடும்ப பிரதிநிதியின் தரிசனத்துடன் நடை சாத்தப்படும்.

## தெலுங்கானா: சொந்த செலவில் கட்டிய கல்லறையில் முதியவர் அடக்கம்

**ஐதராபாத், ஜன.14:**

தெலுங்கானாவில் லட்சுமிபுரம் கிராமத்தில் வசித்து வந்தவர் நக்கா இந்திரய்யா (வயது 80). மற்ற பெற்றோர்கள் தங்களுடைய குழந்தைகளுக்கு சொத்து சேர்த்து, வைத்து விட்டு போவது போன்று இல்லாமல் வித்தியாசத்துடன் செயல்பட்டு உள்ளார். இறுதி காலத்தில், அவருடைய குழந்தைகள் எந்த சுமையையும் எதிர்கொள்ளக்கூடாது என்பதற்காக, பல ஆண்டுகளுக்கு முன்பே, அவர் வாழ்ந்த காலத்திலேயே தன்னுடைய சொந்த செலவில் கல்லறை கட்டினார். அவருடைய மனைவியின் கல்லறைக்கு அருகில் அது அமைந்தது. அவர் வாழ்ந்த காலத்தில், அந்த இடத்திற்கு செல்வது, சுற்றுப்புறங்களை சுத்தம் செய்வது, செடிகளுக்கு தண்ணீர் ஊற்றுவது மற்றும் அமைதியான சிந்தனையில் அமர்ந்திருப்பது போன்றவற்றை



மேற்கொண்டார்.

இதுபற்றி அவரது மூத்த சகோதரர் நக்கா பூமையா கூறும்போது, இந்திரய்யா கிராமத்தில் ஒரு கிறிஸ்தவ ஆலயம் கட்டினார். கிராமத்திற்கு பல நல்ல காரியங்களை செய்துள்ளார். அவர் சொத்துகளை தனது 4 குழந்தைகளுக்கும் பிரித்து வழங்கினார். அவர்களுக்காக வீடுகளை கட்டினார். குடும்பத்தில் 9 திருமணங்களையும் செய்து வைத்துள்ளார்.

கிராமவாசி ஸ்ரீனிவாஸ் என்பவர் கூறும்போது, இந்திரய்யா என்னிடம், நீங்கள் சேமித்து வைத்த செல்வம் உங்களை விட்டு ஒரு நாள் சென்று விடும். ஆனால் நீங்கள் மற்றவர்களுக்காக கொடுப்பது என்றென்றும் உங்களுடனேயே இருக்கும் என கூறுவார் என்று கூறினார். இந்நிலையில், நல்ல உடல்நலத்துடன் இருந்தபோதே அவர் நேற்று மரணமடைந்து விட்டார். அவரது விருப்பத்தின்படியே, அவர் அமைத்த கல்லறையிலேயே அவருடைய உடல் அடக்கம் செய்யப்பட்டது. இதனால், அவரது இறுதி ஆசை நிறைவேறி உள்ளது.

## வங்காளதேசத்தில் தொடரும் கொடூரம்: இந்து ஆட்டோ டிரைவர் படுகொலை; பா.ஜ.க. கடும் கண்டனம்

**புதுடெல்லி, ஜன.14:**

வங்காளதேசத்தில் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கு எதிரான மாணவர் போராட்டம் தொடர்ச்சியாக அவர் பதவியை ராஜினாமா செய்து விட்டு அந்நாட்டில் இருந்து தப்பினார். இந்தியாவில் தஞ்சமடைந்து உள்ளார். அடுத்த மாதம் பொது தேர்தல் அறிவிக்கப்பட்ட வங்காளதேசத்தில் இடைக்கால தலைவராக பேராசிரியரான முகமது யூனுஸ் பதவி வகித்து வருகிறார்.

இந்நிலையில், கடந்த டிசம்பர் மாத மத்தியில் வன்முறை வெடித்தது. இதில், இந்துக்கள் இலக்காக கொள்ளப்பட்டு கும்பல் தாக்குதலில் கொல்லப்பட்டு வருகின்றனர். இதுவரை ஆலை தொழிலாளி, மருந்து கடை உரிமையாளர், 3 தொழிலதிபர்கள் உள்பட 6 இந்துக்கள் கொல்லப்பட்டு உள்ளனர். இந்த நிலையில், வங்காளதேசத்தின் பெனி மாவட்டத்தில் தகன்பூயன் பகுதியில் வசித்து வந்தவர் ஷோமிர் குமார் தாஸ் (வயது 28). இந்துவான இவர் ஆட்டோ டிரைவராக இருந்து வந்துள்ளார்.

கடந்த ஞாயிற்று கிழமை இரவு 8 மணியளவில் வீட்டில் இருந்து ஆட்டோவில் வெளியே சென்றுள்ளார். அதன்பின்னர் அவரை காணவில்லை. இதுபற்றி பெனி மாவட்ட போலீஸ் சூப்பிரெண்டு ஷபிகுல் இஸ்லாம் கூறும்போது, நேற்று அதிகாலை 2 மணியளவில் அவருடைய உடல் கண்டெடுக்கப்பட்டது.




போலீசார் உடனடியாக அந்த பகுதிக்கு சென்று அவருடைய உடலை கைப்பற்றினர் என்றார். இதுபற்றி வழக்கு பதிவு செய்து விசாரணை நடந்து வருகிறது. எனினும், சந்தேகத்திற்குரிய விசயம் எதுவும் தெரிய வரவில்லை. யாரும் கைது செய்யப்படவில்லை என்றும் கூறினார். இந்த சம்பவத்திற்கு பா.ஜ.க. இன்று கடும் கண்டனம் தெரிவித்து உள்ளது. அக்கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான அமித் மாளவியா கூறும்போது, வங்காளதேசத்தில் இடைக்கால அரசில் மத சிறுபான்மையின மக்கள் பலர் கொல்லப்படுவதற்கு அவர் கடும் கண்டனம் தெரிவித்து உள்ளார். அந்நாட்டில் மத சிறுபான்மையின உயிர்களை பற்றி யாரும் கவலை கொள்வதில்லை. இந்துக்கள் மற்றும் கிறிஸ்தவர்கள், புத்த மதத்தினர் உள்ளிட்ட பிற மத சிறுபான்மையினர் மீது நடத்தப்படும் எந்தவித தாக்குதல்களையும் கட்டுப்படுத்த இடைக்கால அரசு தவறி விட்டது. இதில் பாதிக்கப்பட்ட சமூகத்தினருக்கு மறு உத்தரவாதம் அளிக்கும் வகையிலும் எதுவும் தரப்படவில்லை.

ஆறுதல் வார்த்தை கூட கூறவில்லை. இந்த தாக்குதல்கள் கற்பனையானவை என அதன் தலைவர் புறந்தள்ளுவது அதிர்ச்சியளிக்கிறது என தெரிவித்து உள்ளார். ஆட்டோ டிரைவர் ஷோமிர் கொல்லப்பட்டதுடன் அவருடைய வாழ்க்கைக்கு உதவியாக வைத்திருந்த ஆட்டோவை அந்த கும்பல் திருடி சென்று விட்டது என்றும் குற்றச்சாட்டாக கூறியுள்ளார்.

# விளையாட்டு செய்திகள்

## ஐபிஎல் தொடர்: புதிய மைதானத்தில் விளையாடும் பெங்களூரு அணி

**பெங்களூரு, ஜன.14:**

இந்த வருடம் நடைபெற்ற ஐ.பி.எல் தொடரில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணி தங்களது முதல் கோப்பையை வென்று அசத்தியது. இதனையடுத்து ஆர்சிபி அணிக்கு கடந்த ஜூன் 4-ந்தேதி பெங்களூரு சின்னசாமி மைதானத்தில் பாராட்டு விழா நடந்தது. அப்போது மைதானத்துக்கு வெளியே திரண்டிருந்த ரசிகர்கள் கூட்டத்தில் நெரிசல் ஏற்பட்டு 11 பேர் உயிரிழந்தனர். இதையடுத்து பெங்களூரு மைதானத்தில் போட்டிகள் நடத்த தடை விதிக்கப்பட்டது.

இதற்கிடையே கர்நாடக மாநில கிரிக்கெட் சங்கத்திற்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் வெங்கடேஷ் பிரசாத் மற்றும் பிற அலுவலர்கள் துணை முதல் - மந்திரி டி.கே. சிவக்குமாரை சந்தித்து பேசினர்.

அதன்பிறகு டி.கே.சிவக்குமார் அளித்த பேட்டியில், சின்னசாமி ஸ்டேடியத்தில் போட்டிகளை நிறுத்தும் எண்ணம் அரசுக்கு இல்லை என்று தெரிவித்திருந்தார் பெங்களூரு சின்னசாமி மைதானத்தில் சர்வதேச மற்றும் ஐ.பி.எல் போட்டிகளை நடத்த கர்நாடக அமைச்சரவை நிபந்தனைகளுடன் அனுமதி அளித்துள்ளதாக கூறப்பட்டது.

இந்த நிலையில், அந்த முடிவு கைவிடப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அதன்படி பெங்களூரு அணி ஐபிஎல் தொடரில் புதிய மைதானங்களில் விளையாட உள்ளது. நவிமும்பையில் 5 போட்டிகளும்,. ராய்ப்பூரில் 2 போட்டிகளிலும் பெங்களூரு அணி விளையாட உள்ளது.

## ஸ்பெயினிஷ் சூப்பர் கோப்பை: பார்சிலோனா சாம்பியன்

**ஜெட்டா, ஜன.14:**

ஸ்பெயினிஷ் சூப்பர் கோப்பை கால்பந்து போட்டியின் இறுதிப்போட்டி சவுதிஅரேபியாவில் நடைபெற்றது . ஸ்பெயினின் பிரபல கிளப்புகளான ரியல் மாட்ரிட்டும், நடப்பு சாம்பியன் பார்சிலோனாவும் மோதின.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் தொடக்கம் முதல் ஆதிக்கம் செலுத்திய பார்சிலோனா 3-2 என்ற கோல் கணக்கில் ரியல் மாட்ரிட் அணியை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை வென்றது . பார்சிலோனா அணியில் ராபின்ஹா 2 கோலும் (36 மற்றும் 73-வது நிமிடம்) ராபர்ட் லெவான்டாவ்ஸ்கி ஒரு கோலும் (45-வது நிமிடம்) அடித்தனர். மாட்ரிட் அணியில் வினிசியஸ் ஜூனியர், கோன்சலோ கார்சியா கோல் போட்டனர்.

## தேசிய சீனியர் கூடைப்பந்து இறுதிப் போட்டி: தமிழக அணியை வீழ்த்தி இந்தியன் ரெயில்வே 'சாம்பியன்'

**சென்னை, ஜன.14:**

தமிழ்நாடு கூடைப்பந்து சங்கம் சார்பில் 75-வது தேசிய சீனியர் கூடைப்பந்து சாம்பியன்ஷிப் போட்டி சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் நடந்து வந்தது. இதில் ஆண்கள் பிரிவில் நடந்த இறுதிப் போட்டி நடப்பு சாம்பியன் தமிழ்நாடு அணி, இந்தியன் ரெயில்வேயை எதிர்கொண்டது. விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் தமிழக அணி முதல் கால்பகுதியில் 10-20 என்று பின்தங்கியது. அதில் இருந்து மீள தமிழக அணி கடுமையாக முயற்சித்த போதிலும் கடைசி வரை ரெயில்வேயின் ஸ்கோரை எட்ட முடியவில்லை. முடிவில் தமிழக அணி 69-77 என்ற புள்ளி கணக்கில் தோல்வியை தழுவியது. தமிழக வீரர் அரவிந்த் குமார் 29 புள்ளி எடுத்தும் பலன் இல்லை. சாம்பியன் பட்டத்தை கைப்பற்றிய இந்தியன் ரெயில்வே அணிக்கு ரூ.5 லட்சம் பரிசுத்தொகையாக வழங்கப்பட்டது. 2-வது இடத்தை பிடித்த தமிழகத்துக்கு ரூ.3 லட்சம் கிடைத்தது.

பெண்கள் பிரிவின் இறுதி ஆட்டத்திலும் நடப்பு சாம்பியனான இந்தியன் ரெயில்வே அணி பட்டத்தை தட்டிச் சென்றது. இதன் இறுதி ஆட்டத்தில் ரெயில்வே அணி 75-66 என்ற புள்ளி கணக்கில் கேரளாவை சாய்த்தது. புஷ்பா, ஹர்ஷிதா 22 மற்றும் 23 புள்ளிகள் வீதம் எடுத்து ரெயில்வே அணியின் வெற்றியில் முக்கிய பங்கு வகித்தனர்.

## அரைகுறை ஆடையுடன் தெருவில் வலம் வந்த இளம்பெண்... அறிவுரை வழங்கிய பெண் காவலருக்கு அடி, உதை

**பெங்களூரு, ஜன.14:**

கர்நாடகாவின் பெங்களூரு நகரில் கே.ஆர். புரம் ரெயில்வே நிலையம் பகுதியருகே கூட்ட நெரிசல் அதிகம் இருக்கும். பரபரப்பாக இயங்கி கொண்டிருக்கும் அந்த பகுதியில் தாமினி என்ற மோகினி (வயது 31) என்பவர் தெருவில் அரைகுறை ஆடையுடன் நடந்து சென்றார். தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வரும் அவரை, குட்டையான ஆடையில் பார்த்த பலரும் அதிர்ச்சியடைந்தனர்.

அவரை இளைஞர்கள் சிலர் கேலியும் கிண்டலும் செய்தனர். ஆனால், எதனையும் கண்டு கொள்ளாமல் தெருவின் நடுவில் நடந்து கொண்டே சென்றார். அப்போது, போக்குவரத்து பணியில் ஈடுபட்டு இருந்த லட்சுமி நரசம்மா என்ற பெண் காவலர் அவரிடம் சென்று, இதுபோன்று ஆடைகளை அணிந்து தெருவில் நடந்து போக வேண்டாம் என கூறியதுடன், வாகனங்கள் வருகின்றன.

அதனால், சற்று ஓரத்தில் செல்லும்படி கூறியுள்ளார். ஆனால், மோகினி அமைதியாக நின்றிருக்கிறார். இதனால், திரும்பவும் லட்சுமி அவரை தள்ளி செல்லும்படி கூறியுள்ளார். அப்போது ஆத்திரமடைந்த மோகினி அவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டு தகாத வார்த்தைகளால் திட்டியுள்ளார்.

அவருடைய முடியை பிடித்து, இழுத்து, கீழே தள்ளி கன்னத்தில் அறைந்திருக்கிறார். ஒரு கட்டத்தில் பாதுகாப்பிற்காக லட்சுமி வைத்திருந்த தடியை பறித்து, அவரை கடுமையாக தாக்கியும் இருக்கிறார். இதில் லட்சுமியின் முகம், மூக்கில் காயம் ஏற்பட்டு ரத்தம் வழிந்துள்ளது.

இதனை பார்த்து அதிர்ச்சியடைந்த அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் ஓடி வந்து அவரை காப்பாற்றினர். தப்பியோடிய மோகினிக்கு எதிராக லட்சுமி அளித்த புகாரின்பேரில், விசாரணை நடத்திய போலீசார் மோகினியை பிடித்து சிறையில் அடைத்தனர்.

அவருக்கு நீதிமன்ற காவல் விதிக்கப்பட்டு உள்ளது.

## அமெரிக்க கடற்படை வீரருக்கு 200 மாதங்கள் சிறை!

வாஷிங்டன், ஜன.14:

அமெரிக்கக் கடற்படையின் ரகசியங்களைச் சீனாவிற்கு விற்ற 25 வயது முன்னாள் கடற்படை வீரர் ஜின்ச்சாவ் வெய் என்பவருக்கு அமெரிக்க மத்திய நீதிமன்றம் 200 மாதங்கள் (சுமார் 17 ஆண்டுகள்) சிறை தண்டனை விதித்துள்ளது.

சான் டியாகோவில் உள்ள USS ESSEX என்ற போர்க்கப்பலில் பணியாற்றி வந்த வெய், 2022-ஆம் ஆண்டு முதல் சீன உளவுத்துறை அதிகாரியுடன் தொடர்பில் இருந்துள்ளார். வெய் சுமார் 50-க்கும் மேற்பட்ட ரகசிய ஆவணங்கள் மற்றும் தொழில்நுட்ப கையேடுகளைச் சீனாவிற்கு வழங்கியுள்ளார்.

இதில் போர்க்கப்பல்களின் ஆயுத அமைப்புகள், ரேடார் தொழில்நுட்பம் மற்றும் முக்கிய ராணுவப் பயிற்சிகளின் வரைபடங்கள் அடங்கும். அமெரிக்கக் கடற்படையின் தாக்குதல் திறன்கள் குறித்த ரகசியத் தகவல்களை அவர் புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களாக எடுத்து அனுப்பியுள்ளார். இதற்காக பல லட்சம் ரூபாய் லஞ்சமாக வெய் பெற்றுள்ளார். பணத்திற்காக தான் இதை செய்ததாக வெய், நீதிமன்றத்தில் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி, "வெய் தனது தனிப்பட்ட ஆதாயத்திற்காகத் தனது சக வீரர்களின் உயிரையும், நாட்டின் பாதுகாப்பையும் பணயம் வைத்துள்ளார். இது மன்னிக்க முடியாத குற்றம்" என்று கூறி 200 மாதங்கள் சிறை தண்டனை விதித்தனர்.

## ஈரான் அரசுக்கு எதிராக போராடிய இளைஞருக்கு மரண தண்டனை!

ஈரானில் பொருளாதார நெருக்கடி மற்றும் விலை வாசி உயர்வு ஆகியவற்றால் அரசு மற்றும் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனிக்கு எதிராக போராட்டங்கள் நடந்து வருகிறது. அங்கு 2 வாரங்களுக்கு மேலாக போராட்டங்கள் தொடர்ந்து தீவிரமடைந்து வருகிறது. போராட்டத்தை ஒடுக்க பாதுகாப்பு படையினர் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

இந்த நிலையில் போராட்டத்தில் பங்கேற்ற வாலிபர் ஒருவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி இருக்கிறது. தலைநகர் தெஹ்ரானின் புறநகர்ப் பகுதியான பர்திசை சேர்ந்த சுல்தானி(வயது 26) என்பவர் போராட்டத்தில் பங்கேற்றதற்காக கடந்த 8-ந்தேதி கைது செய்யப்பட்டார். அவருக்கு கடந்த 11-ந்தேதி மரண தண்டனை விதிக்கப்பட்டதாக அவரது குடும்பத்தினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. தண்டனை விதிக்கப்பட்ட பின்னர் சுல்தானியை குடும்பத்தினர் 10 நிமிடங்கள் மட்டுமே சந்திக்க அனுமதிக்கப்பட்டனர். சுல்தானிக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனை நாளை நிறைவேற்றப்பட உள்ளதாக ஒரு மனித உரிமை அமைப்பு தெரிவித்தது. போராட்டத்தில் பங்கேற்றதாக மரண தண்டனை விதிக்கப்பட்ட முதல் நபரும் இவரே ஆவார்.

## ஷக்ஸ்காம் பள்ளத்தாக்கு எங்களுக்கு சொந்தமானது.. இந்தியா எதிர்ப்பை புறந்தள்ளிய சீனா!

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் ஷக்ஸ்காம் பள்ளத்தாக்கு அமைந்துள்ளது. இது 1963-ஆம் ஆண்டு பாகிஸ்தான் மற்றும் சீனாவிற்கு இடையே ஏற்பட்ட எல்லை ஒப்பந்தத்தின்படி, பாகிஸ்தானால் சட்டவிரோதமாக சீனாவிற்கு வழங்கப்பட்டது. இந்த ஒப்பந்தத்தை அங்கீகரிக்காத இந்தியா, இது இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதி என்று கூறி வருகிறது. சமீபத்திய செயற்கைக்கோள் புகைப்படங்களின்படி, சீனா இந்தப் பள்ளத்தாக்கில் நிரந்தர சாலைகள் மற்றும் ராணுவத் தளவாட கட்டுமானங்களை மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பாகச் சீனாவிடம் தூதரக ரீதியாக இந்தியா தனது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது. இந்நிலையில் ஷக்ஸ்காம் பள்ளத்தாக்கு தங்களுக்கே சொந்தம் என சீனா அதிரடியாக அறிவித்துள்ளது. இதுதொடர்பாக பேசிய சீன வெளியுறவுத் துறை செய்தி தொடர்பாளர் மாவோ நிங், "சீனா தனது சொந்த நிலப்பரப்பில் உள்கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கு முழு உரிமை உள்ளது. இதில் மற்ற நாடுகள் தலையிட வேண்டிய அவசியம் இல்லை.

1963-ஆம் ஆண்டு பாகிஸ்தான் மற்றும் சீனாவிற்கு இடையே கையெழுத்தான ஒப்பந்தத்தின் படியே இப்பகுதி சீனாவிற்கு வழங்கப்பட்டது. எனவே அது அது சட்டப்பூர்வமானது. இதற்கு இந்தியா எதிர்ப்பு தெரிவிப்பது, வரலாற்று உண்மைகளை மறைக்கும் முயற்சி" என்று தெரிவித்தார்.

ஏற்கனவே லடாக்கில் எல்லைக் கட்டுப்பாடு கோடு அருகே பாங்காங் ஏரி அருகில் கடந்த சில ஆண்டுகளாக சீனா கட்டுமானங்களை மேற்கொண்டு வரும் நிலையில் தற்போது ஷக்ஸ்காம் பள்ளத்தாக்கில் சீனாவின் கட்டுமானம் இந்தியாவின் பாதுகாப்புக்கு மேலும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி உள்ளது.

# ஈரான்: 'நாங்கள் போரை நாடவில்லை; ஆனால் தயாராகவே உள்ளோம்

தெஹ்ரான், ஜன.14:

"ஈரான் போருக்கு முழுமையாகத் தயாராக உள்ளது. அதேநேரத்தில் பேச்சுவார்த்தைக்கும் தயாராக இருக்கிறது" என்று அந்த நாட்டின் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி தெரிவித்தார்.



ஈரான் தலைநகர் தெஹ்ரானில் நடைபெற்ற வெளிநாட்டுத் தூதர்களின் மாநாட்டில் அரசு தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட உரையில் பேசிய வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி, "ஈரான் இஸ்லாமியக் குடியரசு போரை நாடவில்லை; ஆனால், போருக்கு முழுமையாகத் தயாராக உள்ளது. நாங்கள் பேச்சுவார்த்தைக்கும் தயாராக இருக்கிறோம். ஆனால், அந்தப் பேச்சுவார்த்தைகள் நியாயமானதாகவும், சம உரிமைகளுடனும், பரஸ்பர மரியாதையின் அடிப்படையிலும் இருக்க வேண்டும். நாடு தழுவிய போராட்டங்களுக்குப் பிறகு நிலைமை தற்போது முழுமையான கட்டுப்பாட்டில் உள்ளது. இந்தப் போராட்டங்கள், அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் தலையிடுவதற்கு ஒரு சாக்குப்போக்கு அளிக்கும் வகையில் வன்முறை மற்றும் ரத்தக்களரியாக மாறியது" எனத் தெரிவித்தார்.

அப்பாஸ் அராக்சி இன்று தெஹ்ரானில் உள்ள வெளிநாட்டுத் தூதர்களிடம் பேசினார்.

நாட்டில் இணையம் துண்டிக்கப்பட்டிருந்தபோதிலும், செயல்பட அனுமதிக்கப்பட்ட கத்தார் நிதியுதவி பெறும் அல்ஜசீரா செய்தி நிறுவனம் அராக்சியின் கருத்துகளை ஒளிபரப்பியது.

## அமெரிக்காவில் 1 லட்சம் விசாக்கள் ரத்து; டிரம்ப் அதிரடி

வாஷிங்டன், ஜன.14:

அமெரிக்காவில் சட்டவிரோத மற்றும் குற்ற செயல்களில் ஈடுபட்டவர்கள் உள்பட 1 லட்சத்திற்கும் மேற்பட்டவர்களின் விசாக்களை அமெரிக்கா அதிரடியாக ரத்து செய்துள்ளது.

இதுபற்றி அந்நாட்டின் வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டு உள்ள செய்தியில், 8 ஆயிரம் மாணவர் விசாக்கள் மற்றும் குற்ற செயல்களில் ஈடுபட்டு அமெரிக்க போலீசாருடன் மோதலில் ஈடுபட்ட 2,500 தனிநபர் விசாக்கள் உள்ளிட்ட 1 லட்சத்திற்கும் மேற்பட்டவர்களின் விசாக்கள் ரத்து செய்யப்பட்டு உள்ளன என தெரிவித்து உள்ளது. இதன்பின்னர் அவர்கள் அமெரிக்காவில் இருந்து நாடு கடத்தப்படுவார்கள்.

அமெரிக்காவில் ஜனாதிபதியாக டொனால்டு டிரம்ப் பொறுப்பேற்று கொண்ட பின்னர், குடியேற்ற விதிகள் மற்றும் சட்டங்களை அரசு தீவிரப்படுத்தி வருகிறது. இந்நிலையில், தேச பாதுகாப்பை வலுப்படுத்தவும் மற்றும் குடியேற்ற சட்டங்களை அமல்படுத்தவும் நடந்து வரும் முயற்சிகளின் ஒரு பகுதியாக இந்நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சகம் தெரிவித்து உள்ளது.

விசாக்களுடன் அமெரிக்காவுக்கு வந்தவர்கள், நாட்டில் தங்கியிருக்கும்போது, தேவையான அனைத்து சட்டரீதியான விசயங்களுக்கும் உட்பட்டே நடந்து கொள்ள வேண்டும். டிரம்பின் நிர்வாகம் இதனை கடுமையாக கடைப்பிடித்து வருகிறது. இதன் அடிப்படையிலேயே நடவடிக்கை பாய்ந்துள்ளது.

சமீபத்தில் இந்தியாவில் உள்ள அமெரிக்க தூதரகம் வெளியிட்ட செய்தியில், அமெரிக்க சட்டங்களை மீறி நடந்து கொள்பவர்கள் குறிப்பிடும்படியாக மாணவர்கள் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என எச்சரித்து இருந்தது. இதனால், அவர்களின் விசாக்கள் ரத்து செய்யப்படுவதுடன், நாடு கடத்தலும் செய்யப்படுவார்கள். வருங்காலத்தில் அமெரிக்க விசா பெற தகுதியற்றவர்களாகவும் ஆகி விடுவார்கள்.

## ஈரானை விட்டு உடனே வெளியேறுங்கள்; தனது குடிமக்களுக்கு அமெரிக்கா வலியுறுத்தல்



கீவ், ஜன.14:

ஈரான் நாட்டில் இதுவரை இல்லாத அளவுக்கு அதிகரித்துள்ள பணவீக்கம், அதன் தொடர்ச்சியாக அத்தியாவசிய பொருட்களின் விலைவாசி உயர்வு, பொருளாதார தேக்கநிலை உள்ளிட்டவற்றால் விரக்தி அடைந்துள்ள மக்கள் அரசுக்கு எதிராக தெருக்களில் இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 28-ந்தேதி தொடங்கிய மக்களின் போராட்டம், ஈரானின் 31 மாகாணங்களில் 100 நகரங்களில் 16-வது நாளாக இன்றும் நீடித்து வருகிறது. ஆர்ப்பாட்டக்காரர்களை அடக்க பாதுகாப்பு படையினரை அரசு இறக்கி விட்டு உள்ளது. இதன்படி போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

வன்முறையை தடுக்கும் நோக்கில், நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இணையதள சேவையை அரசு முடக்கி வைத்து உள்ளது. சில அரசு ஊடகங்கள் மட்டுமே செயல்பட அனுமதி அளிக்கப்பட்டு உள்ளது.

ஈரானில் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் 500-க்கும் மேற்பட்டோர் பலியாகி இருக்க கூடும் என அமெரிக்காவை அடிப்படையாக கொண்ட மனித உரிமைகள் அமைப்பு ஒன்று அதிர்ச்சி தகவலை தெரிவித்து உள்ளது. போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் 2,500-க்கும் மேற்பட்டோர் அரசால் கைது செய்யப்பட்டு உள்ளனர்.

இந்த நிலையில், அமெரிக்க தூதரகம் வெளியிட்டு உள்ள செய்தியில், ஈரானில் ஏற்பட்டு உள்ள போராட்டம் வன்முறையாக உருவாக கூடிய வாய்ப்புகள் உள்ளன. இதனால், கைது நடவடிக்கைகளும், காயங்களும் ஏற்பட கூடும். ஈரான் அரசு அதிகாரிகளும் பாதுகாப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி உள்ளனர் என்று குறிப்பிட்டு உள்ளது.

சாலைகள் முடக்கம், பொது போக்குவரத்து பாதிப்புகள் மற்றும் இணையதளம் முடக்கம் எல்லாம் நடந்து கொண்டிருக்கின்றன.

ஈரான் அரசு, மொபைல் போன், தொலைபேசி மற்றும் தேசிய அளவில் இணையதள நெட்வொர்க் சேவைகளுக்கு கட்டுப்பாடுகளை விதித்து உள்ளன.

இதேபோன்று, ஜனவரி 16-ந்தேதி (வெள்ளிக்கிழமை) வரை ஈரானில் இருந்து புறப்படும் மற்றும் வருகை தரும் விமானங்கள் தொடர்ந்து வரம்புக்குள் வைக்கப்பட்டு உள்ளன. பல விமான சேவைகள் தொடர்ந்து சஸ்பெண்டு செய்யப்பட்டும் வருகின்றன.

அதனால், அமெரிக்க குடிமக்கள் உடனடியாக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கும்படியும், தரை வழியே அர்மீனியா மற்றும் துருக்கி நாடுகளுக்கு செல்லும்படியும் அறிவுறுத்தல் வழங்கி உள்ளது.

## டிரம்பிற்கு மறக்க முடியாத பாடம் புகட்டப்படும்: ஈரான் சபாநாயகர் எச்சரிக்கை

கீவ், ஜன.14:

ஈரானில் பொருளாதார நெருக்கடியால் மக்கள் வீதிகளில் இறங்கி போராடி வருகின்றனர். இதில் வன்முறை ஏற்பட்டு இதுவரை நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர்.

இதற்கிடையே ஈரானில் போராடுபவர்களுக்கு அமெரிக்க ஆதரவு அளிப்பதாக அதிபர் டிரம்ப் தொடர்ந்து கூறிவருகிறார்.

இந்நிலையில் ஈரானில் அமெரிக்கா ராணுவ ரீதியாகத் தலையிட முயன்றால், டிரம்பிற்கு மறக்க முடியாத பாடம் புகட்டப்படும் என்று ஈரான் நாடாளுமன்ற சபாநாயகர் முகமது பாகர் காலிபப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று அந்நாட்டு பாராளுமன்ற கூட்டத்தில் உரையாற்றிய காலிபப், "எங்கள் நாட்டின் பாதுகாப்பு மற்றும் இறையாண்மைக்கு எதிராகத் தவறான முடிவுகளை எடுப்பதையோ அல்லது ராணுவ ஆக்கிரமிப்பைப் பற்றிச் சிந்திப்பதையோ அமெரிக்க அதிகாரிகள் நிறுத்திக் கொள்ள வேண்டும். ஈரான் மீது ராணுவத் தாக்குதல் நடத்த டிரம்ப் நிர்வாகம் துணிந்தால், அவர்கள் இதுவரை கண்டிராத ஒரு மிகப்பெரிய பதிலடியைச் சந்திக்க நேரிடும். அது அவர்களுக்கு ஒரு வரலாற்றுப் பாடமாக அமையும். ஈரானின் உள்நாட்டு அரசியல் குழப்பங்களை அமெரிக்கா தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள முயல்வதாகக் குற்றம் சாட்டிய அவர், ஈரானிய மக்கள் தங்களுக்குள் இருக்கும் கருத்து வேறுபாடுகளைத் தாங்களே தீர்த்துக் கொள்ளும் வல்லமை படைத்தவர்கள் என்று தெரிவித்தார்.

தொடர்ந்து, மத்திய கிழக்கில் அமெரிக்காவின் ராணுவ நடமாட்டத்தை ஈரான் உன்னிப்பாகக் கவனித்து வருவதாகவும், எந்தவொரு சிறிய அச்சுறுத்தலுக்கும் ஈரானின் புரட்சிகர பாதுகாப்புப் படை தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். அமெரிக்கா அத்துமீறினால் ஈரான் அருகில் உள்ள நாடுகளில் நிலைகொண்டுள்ள அமெரிக்க ராணுவ தளங்கள் மீது தாக்குதல் நடத்தப்படும் என்று அவர் எச்சரித்தார்.

## இனி ஜெர்மனி வழியே பயணிக்க இந்திய பயணிகளுக்கு விசா தேவை இல்லை

ஜெர்மனி நாட்டின் அதிபர் பிரட்ரிக் மெர்ஸ் 2 நாள் பயணமாக இன்று காலை இந்தியா வந்தார். குஜராத் வந்திறங்கிய அவர் அங்கு பிரதமர் மோடியை சந்தித்தார். இதன் பின் இருவரும் சபர்மதி ஆசிரமம் சென்று மகாத்மா காந்திக்கு அஞ்சலி செலுத்தினர். பின்னர் ஒரு நாட்டு பிரதிநிதிகள் மற்றும் மோடி, பிரட்ரிக் பங்கேற்ற உயர்மட்ட கூட்டம் நடைபெற்றது. இந்நிலையில் இந்திய பாஸ்போர்ட் உள்ளவர்கள் ஜெர்மனி அரசு விசா இல்லாத போக்குவரத்து வசதியை அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. இதன் மூலம் ஜெர்மனி வழியாக மற்ற நாடுகளுக்குச் செல்லும் இந்தியப் பயணிகள் இனி தனியாக ஜெர்மன் விசா எடுக்க வேண்டிய அவசியமில்லை. ஜெர்மனியில் உள்ள சர்வதேச விமான நிலையங்களின் வழியாக மற்ற நாடுகளுக்குப் பயணம் செய்யும்போது, இனி ஏர்போர்ட் டிரான்சிட் விசா தேவையில்லை. குறிப்பாக அமெரிக்கா, கனடா அல்லது லண்டன் போன்ற நாடுகளுக்கு ஜெர்மனி வழியாகச் செல்லும் இந்தியர்களுக்கு இது பெரும் நிம்மதி அளிக்கும்.

## விவாகரத்து பெற்ற மனைவிக்கு பில் கேட்ஸ் வழங்கிய ஜீவனாம்சம்!




உலகின் முன்னணி பணக்காரரான மைக்ரோசாப்ட் நிறுவனரான பில் கேட்ஸ் 27 ஆண்டுகளாக மனைவி மெலிண்டா கேட்ஸ் உடன் வாழ்ந்து வந்த நிலையில் இருவரும் 2021இல் விவாகரத்து பெற்று பிரிந்தனர். அவர்களுக்கு ஜென்னர், ரோரி மற்றும் போப் என மூன்று பிள்ளைகள் உள்ளனர். 2000 - ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட பில் & மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளையில் இருந்து இல் 2024 மெலிண்டா விலகி தனியாக ஒரு தொண்டு நிறுவனத்தை உருவாக்கினார். 2021இல் ஒப்புக்கொண்ட விவாகரத்து ஒப்பந்தப்படி மெலிண்டாவுக்கு பில்கேட்ஸ் ரூ.1,12,800 கோடி ஜீவனாம்சம் வழங்க வேண்டும். இந்நிலையில், மைக்ரோசாப்ட் உரிமையாளரான பில்கேட்ஸ் தனது மனைவி மெலிண்டாவுக்கு ஜீவனாம்சமாக ரூ.71,100 கோடி வழங்கினார். ஏற்கனவே ரூ.41,700 கோடியை மெலிண்டாவுக்கு பில்கேட்ஸ் வழங்கிய நிலையில், இறுதியாக தற்போது ரூ.71,100 கோடி வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மெலிண்டாவுக்கு பில் கேட்ஸ் மொத்தமாக 1.05 லட்சம் கோடி ரூபாய் வழங்கியுள்ளார். சமீபத்திய வரி தாக்கல் அறிக்கைகளின்படி இது தெரியவந்துள்ளது. இது உலகின் மிகவும் காஸ்ட்லியான விவாகரத்து என்று கூறப்படுகிறது. இந்த பணத்தை பெண்கள் முன்னேற்றத்துக்கு செலவழிக்க போவதாக மெலிண்டா கூறியுள்ளார்.

## ஈரான் மீது அமெரிக்கா வான்வழி தாக்குதல் நடத்தலாம்: வெள்ளை மாளிகை

வாஷிங்டன், ஜன.14:

ஈரான் நாட்டில் வரலாறு காணாத அளவுக்கு அதிகரித்துள்ள பணவீக்கம், அதன் தொடர்ச்சியாக அத்தியாவசிய பொருட்களின் விலைவாசி உயர்வு, பொருளாதார தேக்கநிலை உள்ளிட்டவற்றால் விரக்தி அடைந்துள்ள மக்கள் அரசுக்கு எதிராக தீவிர போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.




கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 28-ந்தேதி தொடங்கிய மக்களின் போராட்டம், ஈரானின் 31 மாகாணங்களில் 100 நகரங்களில் 16-வது நாளாக இன்றும் நீடித்து வருகிறது. ஆர்ப்பாட்டக்காரர்களை அடக்க பாதுகாப்பு படையினரை அரசு இறக்கி விட்டு உள்ளது. இதன்படி போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

வன்முறையை தடுக்கும் நோக்கில், நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இணையதள சேவையை அரசு முடக்கி வைத்து உள்ளது. சில அரசு ஊடகங்கள் மட்டுமே செயல்பட அனுமதி அளிக்கப்பட்டு உள்ளது.

ஈரானில் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் 544 பேர் பலியாகி இருக்க கூடும் என அமெரிக்காவை அடிப்படையாக கொண்ட மனித உரிமைகள் அமைப்பு ஒன்று அதிர்ச்சி தகவலை தெரிவித்து உள்ளது. போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் 10,681 பேர் அரசால் கைது செய்யப்பட்டு உள்ளனர்.

இந்நிலையில், ஈரான் பற்றிய கேள்விக்கு பதிலளித்த வெள்ளை மாளிகையின் ஊடக செயலாளர் கரோலின் லீவிட், ஈரான் விவகாரத்தில் அனைத்து விசயங்களும் டிரம்பின் மேஜை மீது ஆவணங்களாக வைக்கப்பட்டு உள்ளன. அவற்றில் ஈரான் மீது அமெரிக்கா வான்வழி தாக்குதல் நடத்துவதும் ஒன்று என்றார்.

எனினும், பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதே எப்போதும், டிரம்பின் முதல் தேர்வாக இருக்கும் என கூறினார். அவர் நேற்றே உங்கள் எல்லோரிடமும் கூறினார். நீங்கள் ஈரான் அரசின் செயல்பாடுகள் பற்றி வெளிப்படையாக கேள்விப்பட்டிருக்கும் வகையில் இருந்து, அமெரிக்க அரசுக்கு தனிப்பட்ட முறையில் கிடைத்து வரும் விசயங்கள் முற்றிலும் வேறானவை. அவற்றை வெளியிட டிரம்ப் ஆர்வத்துடன் இருக்கிறார் என்றே நான் நினைக்கிறேன் என்றார். எனினும், தேவைப்பட்டால் ராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள டிரம்ப் பயப்படமாட்டார் என்றும் அவர் கூறினார்.